ஜனவரி 2026

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

308

விலை
ரூபா 100/=







சி.வை.தாமோதரம்பிள்ளை
125ஆவது ஆண்டு நிறைவு

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


307

ஒளி : 26 சுடர் : 07

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- ரிஸ்மியா நாகூர்கனி ஹாபி 05
- காலில் ஜிப்ரான் / அன்னலட்சுமி இராஜதுரை 10
- பூங்கோதை தங்கமயில் 14
- பராக்கிரம கொடிதுவக்கு/ கலாபூஷணம் எம். எம்.மன்ஸூர் 18
- இளைய அப்துல்லாஹ் (லண்டன்) 22
- நவாலியூர் சாந்தகுமார் 37
- சமரபாகு சீனா உதயகுமார் 49
- வி.அபிவர்ணா 54
- அம்பிகை சண்முகலிங்கன் 57
- குப்பிழான் குமரன் 60
- கலாதினி பா.முருகானந்தன் 60
- எஸ். சுடர்நிலா 60


### பத்தி


- கலைமாமணி கா.தவபாலன் 53
- பேராசிரியர் துரை. மனோகரன் 58


### சிறுகதைகள்


- எஸ்.ஏ. கப்பார் 06
- ஸ்ரீரஞ்சனி (கனடா) 19
- ஹரண்யா பிரசாந்தன் 43
- கே.எஸ்.சுதாகர் (அவுஸ்) 50


### கட்டுரைகள்


- கலாநிதி செ. சுதர்சன் 02
- பேராசிரியர் சபா ஜெயராசா 11
- ஞானம் பாலச்சந்திரன் 25
- தமிழ்மணி அகளங்கன் 38


### நூல் விமர்சனம்


- யாழ் அஸீம் 55


### சமகால இலக்கியம்


- கலாபூஷணம் கே.பொன்னுத்துரை


*பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !*


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...



## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

**கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்!**

அனைவருக்கும் இனிய 2026 புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்!

நாம் கடந்துவந்த பாதையின் பல வரலாற்று அடையாளங்கள், காலத்துடன் மறைந்துபோயின. பலவற்றை, காலம் அழித்துவிட்டது. அத்துடன் இனவாதம், அரசியல், போர், இயற்கை அனர்த்தம் போன்றவையும் தம் பங்கிற்கு தொடர்ந்தும் வரலாற்று அடையாளங்கள்மீது பாதகமான தாக்கங்களைக் காலங்காலமாக விளைவித்து வருகின்றன.

பொலனறுவை இராச்சியத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான 'மஸ்ஸ' நாணயங்கள் இன்றும் மக்கள் மத்தியில் பரவலாகக் கிடைக்கப்பெற்றபோதும், அதற்கும் பிற்காலத்தில் வெளியாகிய யாழ்ப்பாணத்து 'சேது' நாணயங்கள் அரிதிலும் அரிதாகவே எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. நானூறு – ஐந்நூறு வருடங்கள் பழைமையான யாழ்ப்பாண இராச்சிய நாணயங்களிலும் பார்க்க இரண்டாயிரம் வருட பழைமையான அனுராதபுர காலத்து 'இலக்குமி' நாணயங்கள் பற்றி, அதிகமான ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. தமிழ் இராச்சிய நாணயங்கள், தனி மனித சேகரிப்பிலும், நூதனசாலைகளிலும் மிகமிக அரிதாகவே உள்ளன.

நிதானித்து நோக்கில், **எம் வரலாற்றுத் தடயங்களை அழியவிடுவதிலும், அழிப்பதிலும் எம்முடைய புறக்கணிப்பும் பெரும்பங்கு வகிப்பதைக் கண்டுகொள்ளலாம்**. எம்மவர்களின் புறக்கணிப்பின் தொடர்ச்சியினால் சிதைவுறும் வரலாற்றுச் சின்னங்கள் பட்டியலில் **நல்லூர் மந்திரிமனை**யும் அண்மையில் சேர்ந்துள்ளது.

யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்புடைய மந்திரிமனை, பாதுகாக்கப்படவேண்டிய தொல் பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான **தொடர்ச்சியான பராமரிப்புப் பணிகள் திட்டவட்டமாக நடைபெறுவதில்லை.** அது தனிநபர் ஒருவரின் காணியில் காணப்படுவதால், பல சிக்கல்கள் இருப்பதாக, சாட்டுக்கள் சொல்லப்பட்டே வந்தன. மந்திரிமனையானது இடியத்தொடங்கி, தற்போது மழையினால் சொரியலானதும், அனைவரும் ஒன்றுகூடி அதனைச் சீரமைக்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். சீரமைப்புப் பணிகளை நோக்கும்போது, 'மாதிரி' மந்திரிமனை ஒன்று எழும்பிவிடும் எனும் நம்பிக்கை வருகின்றது. நூறு வருடங்களின் பின்னர், இந்த 'மாதிரி' மந்திரிமனையே, மந்திரிமனையும் ஆகிவிடும். இது நிற்க.

இந்த மந்திரிமனையைச் சரிவர பராமரிக்காமல் வந்ததில், அதிகம் பங்கு வகிப்பவை எம்மவர் களின் தொடர் புறக்கணிப்பும், பொறுப்பானவர்களின் நேரத்துடனான செயற்பாடு இன்மையுமே என்று கூறலாம்.

அனுராதபுரத்திலுள்ள எட்டு புராதன பௌத்த சின்னங்களைப் பராமரிக்க 1870கள் தொடங்கி **அஷ்டமஸ்தான குழு** (Atamasthana Committee) அமைப்பானது கடந்த 150 வருடங்களுக் கும் மேலாக இன்றுவரை முறையாக இயங்கி வருகின்றது. இவ்வமைப்பு இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்பு என்பதால் இனவாதம் – அரசியல் எம்மை அஷ்டமஸ்தான குழுவைப் போன்றதொரு அமைப்பைச் செயற்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை என்று கூறித் தப்பவும் முடியாதுள்ளது.

இத்தகைய தூரநோக்கச் செயற்பாடுகளைச் செய்வதில் எமக்குள்ள தடைகள் எவை? என்பது சிந்தனைக்குரியது..! இனிவரும் காலங்களில் உரிய தூரநோக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனும் நம்பிக்கை கொள்வோமாக...




**அறிமுகம்:**

***சைமன் காசிச்செட்டி*** *(1807-1860)* அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூல் ***The Tamil Plutarch.*** அந்நூலின் விரிவுப் பெயர் ***The Tamil Plutarch Containing A Summary Account of The Lives of The Poets and Poetesses or Southern India and Ceylon from the Earliest to the Present time, with Select Specimens of Their Compositions*** என்பதாகும். இது, *1859*ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனை ***Jaffna: Ripley & Strong Printers*** என்ற நிறுவனம் வெளியிட்டது. இந்த நூற்பெயர் தொடர்பாக, ***சுவாமி விபுலானந்த அடிகளின்*** எழுதிய சிறுகுறிப்பு ஒன்றை அலசுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**அடிகளார் கண்ணுற்ற அஞ்சலி:**



இந்த நூலின் இரண்டாம் பதிப்பு *1946*ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனை, ***Colombo: The General Publishers Ltd.*** என்ற நிறுவனம் வெளியிட்டது. சுவாமி விபுலானந்த அடிகள் இந்த நூற்பெயரில் ஓர் அஞ்சலியைக் கண்ணுற்றுள்ளார். இரண்டாம் பதிப்பிற்கு, அடிகளார் ஆங்கிலத்தில் வழங்கிய அணிந்துரையில், அதனைப் பதிவுசெய்துள்ளார். அதன் தமிழாக்கம் வருமாறு:

> "இந்தப் படைப்பிற்கு ஆசிரியர் வழங்கிய பெயர், பண்டைய கிரேக்க மற்றும் ரோமின் உயர் மானுடர்களின் இணையான வாழ்க்கையை எழுதிய, புகழ்பெற்ற ஆசிரியருக்கு ஓர் அஞ்சலியாக இருக்கலாம்" (16.12.1946)

அடிகளாரின் கூற்றில் புலப்படுவது யாதெனில், சைமன் காசிச் செட்டியது புலவர் சரித நூற் பெயரில் வரும் ***Plutarch*** என்பது ஒரு ஞானியின் பெயர் என்பதே. செட்டி அவர்கள் தமது நூலில் அந்த ஞானியின் பெயரைக் குறிப்பிடவில்லை என்பதையும் மனங் கொள்ளல் வேண்டும்.

**எச்சங்களை மீட்டலும் வளப்படுத்தலும்:**

வாழ்க்கைச் சரிதத்தை, ஓரளவாவது அறிவியல் ரீதியாக எழுதும் பழக்கத்தை, காலனிய கால ஆங்கிலக் கல்விமுறையே ஏற்படுத்தியது. அதற்கு முன்னர், எழுத்துநிலையிருந்த புலவர்களின் வரலாறுகள், பெரும்பாலும் புராணக் கவிதைகளாக அமைந்தவை. அதனால், புனைவுகளின் பின்னல்களை அதிகம் பெற்றவை. நாமறிந்தவரையில், ஈழத்தில் புலவர்கள் குறித்த புராணங்கள்கூடத் தோன்றவில்லை.

காலனிய காலத்தில்தான், புலவர்களது நாமா வளிகளை அகரவரிசைப்படுத்தி, தொகுத்து, சரிதம்

எழுதும் முயற்சி முளைகொண்டது. பிரபந் தங்களில் அமையும் குரவ வணக்கச் செய்யுட்கள், சிறப்புப் பாயிரங்கள் ஆகிய வற்றில் நூலாக்கியோன் மரபைச் சொல்லும் செய்திகளும், புலவர்களின் நூல்கள் குறித்த பத்திரிகை விளம்பரச் செய்திகளும் அவற்றுக்குத் துணைசெய்தன. மேலை அறிவுச் செல்வத்தால் தமிழை வளமாக்கச் சரிதங்கள் எழலாயின. சைமன் காசிச்செட்டி தமது நூல் முன்னுரையில் கூறும் பின்வரும் செய்தி கவனத்திற்குரியது.

> "அரசாங்கமும் கிறிஸ்தவ மிசனரிகளும் நிறுவிய தாய்மொழிப் பள்ளிகள் மூலம், தமிழ் இளைஞர் களின் முன்னேற்றத்துக்கான அனைத்து வசதிகளும் கிட்டியுள்ளன. வலிமைமிக்க சாதனமான பத்திரிகை, மற்றைய இடங்களைப் போலவே, இந்தியாவிலும் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை நிரூபித்துள்ளது... ஒருபுறம் பண்டைய பூர்வீக இலக்கியத்தின் எச்சங்களை மறதியிலிருந்து மீட்பதன் மூலமும், மறுபுறம் ஐரோப்பியக் கலை மற்றும் அறிவியல் பற்றிய ஏராளமான வெளியீடுகளால் அதை வளப்படுத்துவதன் மூலமும்." (1859:v)

பண்டைய இலக்கிய எச்சங்களை வரலாற்றின் மறதியிலிருந்து மீட்டலும், மேலை அறிவின் துணைகொண்டு நவீன யுகத் துக்கான தமிழைத் தகுதிப் படுத்தலுமான செயற்பாடுகளுள் ஒன்றாகப் புலவர் சரித வியலையும் காணவியலும்.

### கைவிட எண்ணிய முயற்சி:

சைமன் காசிச்செட்டி அவர்கள், புலவர் சரிதம் எழுதும் முயற்சியை ஆரம்பித்து, விடய தானங்கள் போதாமையால், அந்த முயற்சியைக் கைவிட எண்ணியுள்ளார். இதனை, அவரது முன்னுரையின் பின்வரும் பகுதி உணர்த்துகிறது.

> "நமது புலவர்களின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை மக்களுக்கு வழங்குவது எனது நீண்டகால நோக்கம். ஆனால், பண்டைய அல்லது நவீன தமிழில் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் இல்லை. விடயதானங்களைப் பெறு வதில், அவர்களுக்கு ஏற்பட்ட அநேக சிரமங்களே அதற்குக் காரணம். நான் கணக்கிட்டதைவிடவும் அவை அதிகமானவை. இந்த முயற்சியைக் கைவிடலாம் எனக் கிட்டத்தட்ட முடிவு செய்தேன்." (1859:v)



சைமன் காசிச்செட்டி

முயற்சியைக் கைவிட எண்ணியவர், பின்பு அதனைத் தொடர்ந்து வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்கான காரணம் எதுவென எண்ணும்போதுதான், இக்கட்டுரையின் ஆரம் பத்தில், விபுலானந்த அடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய அணிந்துரையில் வரும் அஞ்சலி குறித்த செய்தி துணைசெய்கிறது. இச் செய் தியை அகராதி மற்றும் வரலாற்றின் துணைக் கொண்டு, சற்று ஆழ்ந்து நோக்கலாம்.

### *Plutarch* என்பது சீமான்:

***Plutarch*** எனும் சொல் ஆதி கிரேக்க மொழியிலிருந்து உருவாகிய சொல். சொற் பிறப்பு அகராதியின் துணைக்கொண்டு நோக்குகையில், ஆதி கிரேக்க மொழியில் உள்ள ***ploutos, arkhos*** ஆகிய இரு சொற்களின் இணைப்பாகத் தோன்றிய சொல்லே, ***Plutarch*** என்பது தெரிய வருகிறது. *(Oxford Dictionary of English Etymology)*

***ploutos*** என்னும் கிரேக்கச் சொல், **வளம்** அல்லது ***செல்வம் (Rich or Wealth)*** என்பதைக் குறித்து நிற்கிறது. ***arkhos*** என்ற கிரேக்கச் சொல். ***அரசன்*** அல்லது ***ஆள்பவன் (Ruler or Master)*** என்பதைக் குறித்து நிற்கிறது. இவ்விரு சொற்களும் இணைந்து உருவானதே ***Plutarch*** எனும் கிரேக்கச் சொல். *(Oxford Dictionary of English Etymology)*

***Plutarch*** என்பதன் நேரடி அர்த்தம் ***செல்வத்தின் அரசன்*** அல்லது ***செல்வச் சீமான்*** *(Wealthy master or Ruler of riches)* என அமைகிறது. நாம் ***'சீமான்'*** எனக் குறித்துக்கொள்ளலாம். ***Plutarch*** என்பது ஒரு பெயர்ச்சொல் என்பதும் இப்போது தெளிவாகிறது.

### வாழ்க்கைச் சரிதவியலாளர் *Plutarch:*

மேற்குறித்த புரிதலுடன் விபு லானந்த அடிகளார் கூற்றில் உள்ள செய்தியை நோக்கலாம். ***Plutarch*** என்பவர் கிரேக்கத் தத்துவஞானிகளுள் ஒருவர். புகழ்பெற்ற வாழ்க்கைச் சரிதவியலாளராக நன்கறியப் பட்டவர். ***Lucius Mestrius Plutarchus***. என்பது அவரது முழுப் பெயர். அவர் கி.மு. 46-120 காலப்பகுதியில் வாழ்ந்தார்

என்பது வரலாற்றாசிரியர்கள் பலரதும் பொது வான கருத்து.

அவர் எழுதிய ***Parallel Lives*** என்ற நூல், புகழ் பெற்ற நூல்களுள் ஒன்று. அது, தொல்சீர் கிரேக்க மற்றும் ரோமானியர்களின் வாழ்க்கைச் சரிதத்தை விபரிக்கிறது. குறிப்பாக, புகழ் பெற்ற கிரேக்க மற்றும் ரோமானியர்களின் வாழ்க்கைச் சரிதத்தை இணைத்து, அவற்றின் தார்மீகப் பண்புகளையும் குறைகளையும் ஒப்பிட்டுப் பேசுகிறது. இரு வரலாறுகளின் மனித இயல்பின்மீது, இந்நூல் வெளிச்சம் பாய்ச்சுகிறது.

### செட்டி கண்ட *Plutarch* ஞானி:

இதுவரை நோக்கியவற்றால், சைமன் காசிச் செட்டி அவர்கள், தமிழுக்கு நன்கொடையாக, ***The Tamil Plutarch*** என்பதை அளிக்க, ஊக்கியாக அமைந்தவர், கிரேக்க வாழ்க்கைச் சரிதவியலாளரான ***Plutarch*** என்பவரே எனப் தெளிவாகிறது.

ஐரோப்பிய நாகரித்தின் தொட்டில் எனப் புகழ்பெறும் தொல்சீர் கிரேக்க மற்றும் ரோமானிய வாழ்க்கைச் சரிதவியல் நூலான ***Parallel Lives*** எனும் நூலால் உந்தப் பெற்றமையாலேயே, காசிச்செட்டி தமது நூற் பெயரின் பின்னொட்டாக கிரேக்க ஆசிரியரின் பெயரை இட்டார் எனத் தோன்றுகிறது. தமிழில் ஒரு புதுமுயற்சியைத் தொடங்கும் போது அவருக்கிருந்த, பரந்து விரிந்த உலக வரலாற்றுப் பார்வையும் இதனூடு புலனாகிறது.

### கற்பனைகளைக் கழுவுதல்:

*Plutarch* எழுதிய *Parallel Lives* என்பது அவருக்குக் கைகொடுத்துள்ளது. தமிழில் கற்பனைகள் விரவிக் கலந்த புலவர் குறித்த கதைகளிலிருந்து, ஓரளவாவது சரித்திரக் குறிப்புக்களை எடுத்தாக வேண்டும் என்ற நிலையில், சைமன் காசிச் செட்டிக்கு, *Plutarch* எழுதிய *Parallel Lives* கைகொடுத்துள்ளது. எனவே அவர், கிரேக்க, ரோமானியக் கதைகளைக் கழுவி, வாழ்க்கைச் சரிதம் வடிக்கும் முயற்சி போன்ற ஒரு முயற்சியை முன் மாதிரியாகக் கொண்டு தமது முயற்சியைத் தொடர்ந்தார். அதனை அவரே பின்வருமாறு கூறுகிறார்.

"கீழைத்தேய மக்களிடையே நிலவும் வாழ்க்கை வரலாறு பற்றிய கதைமரபுகள், அகமகிழ்வுக்குரிய கற்பனையான மற்றும் அலங்காரமான சேர்க்கைகள், கவனமாகச் சேகரிக்கப்பட்டு, அவதானமாகப் பிரிக்கப்பட்டால், விரும்பிய தகவல்களை வழங்கும் என நம்பினேன். அந்த நம்பிக்கையால், அந்த அறிவு மூலத்தில் என் கவனத்தைச் செலுத்தத் தூண்டப்பட்டேன்."


THE
TAMIL PLUTARCH,
CONTAINING
A SUMMARY ACCOUNT
OF
THE LIVES OF THE POETS AND POETESSES
OF SOUTHERN INDIA AND CEYLON
FROM THE EARLIEST TO THE PRESENT TIMES, WITH SELECT SPECIMENS OF THEIR COMPOSITIONS.

*Aut prodesse volunt aut delectare poetæ.*—HORACE.

BY
SIMON CASIE CHITTY, ESQUIRE.
AUTHOR OF THE CEYLON GAZETTEER.

Jaffna:
RIPLEY & STRONG—PRINTERS.
1859.

இத்தகைய எல்லாச் சீரின்மைகளின் விளைவு இப்போது மக்கள் முன் உள்ளது. இந்தப்படைப்பு இந்த வகையான எனது முதல் முயற்சியாக இருந்தாலும்,எனது விழிப்புணர்வையும் மீறிய பல தவறுகளுக்கும் உட்பட்டதாக இருக்கலாம். இதற்காக நான் வாசகர் மற்றும் விமர்சகரின் அன்பைக் கோருகிறேன். (1859:v)

### அகர வரிசையில் புலவர்கள்:

தமிழ்ப் புலவர் சரிதங்களைத் தொகுத்து அகர வரிசையில் கூற எழுந்த முதன் முயற்சியே, சைமன் காசிச் செட்டியின் முயற்சி. இது ஆங்கில மொழியில் எழுதப்பட்டது. அகஸ்தியரிலிருந்து யாழ்ப்பாண நாயனார்வரை 196 புலவர்களின் வரலாற்றுக் குறிப்புகளை 138 பக்கங்களில் இந்நூல் கொண்டுள்ளது.

புலவர்களுடன் தொடர்பான அறிஞர்கள் பற்றியும் வருவதால் எல்லாமாக 202 புலமையாளர்களை இந்நூல் விபரிக்கிறது என்பார், **பொ. பூலோகசிங்கம்** (2001:xiii-xiv). இதில் 189 புலவர்கள் தமிழ்நாட்டவர்கள். 13 புலவர்கள் ஈழத்தவர்கள். ஈழத்துப் புலவர்களில் சேனா-

திராயர், சின்னத்தம்பி ஆகிய இருவருக்கும் ஒவ்வொரு பாடல் இடம் பெற்றுள்ளது.

**தமிழ்ச் சூழலின் முதல் முயற்சி:**

தமிழ்ப் புளூராக்கின் இரண்டாவது பதிப்பிற்கு, சுவாமி விபுலானந்தர் ஆங்கிலத்தில் எழுதிய அணிந்துரையில், இந்த நூலைத் தமிழ்ச் சூழலின் முதலாவது முயற்சியாக அடையாளம் காண்கிறார். அத்துடன், தமிழ் இலக்கியக் கல்விக்குப் பயன் சேர்க்கும் நூலாக இது அமைகிறது எனக் கூறுவதோடு, தமிழ்க் கவிதைகளைச் செம்மையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் நூலாசிரியரின் மொழித் தேர்ச்சியையும் வியக்கிறார். அதன் தமிழாக்கத்தை இங்கு தரலாம்.

> "தென்னிந்தியா மற்றும் இலங்கையின் கவிஞர்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கமான விவரணையை சைமன் காசிச்செட்டி என்பவர் எழுதிய தமிழ்ப் புளூராக் முதன்முறையாக 1859இல் வெளிப்படுத்தியது... தமிழ் இலக்கியத்தைக் கற்கும் மாணவர்கள் நிச்சயமாக அதைப் படிப்பதன் மூலம் மகிழ்ச்சியையும் பயனையும் பெறுவார்கள். எடுத்துக்காட்டப்பட்ட தமிழ்க் கவிதைகளின் சிறந்த ஆங்கில மொழி பெயர்ப்புகள் ஆசிரியரின் ஆங்கில மொழியின் தேர்ச்சியை வெளிப் படுத்துகின்றன. *(16.12.1946)*

**முடிவுரை:**

தமிழின் சீமான்களான, தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைச் சரிதமாக எழுதிய சைமன் காசிச் செட்டியை, முதலில் ஆழமாகவும், விரிவாகவும் ஆய்ந்தவர், பொ. பூலோகசிங்கம் அவர்கள். அவர் தனது நூலான, 'தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழறிஞரின் பெரு முயற்சிகள்' என்ற நூலில், 'சைமன் காசிச்செட்டி அவர்கள் தந்த தமிழ்ப் புலவர் சரிதம்' என்ற கட்டுரையில், இது பற்றித் தொட்டுச் செல்கிறார். 'தமிழ் புளூராக் என்னும் நூலே, தமிழ்ப் புலவர்களின் சரிதங்களை ஒரே நூலாகக் கூற எழுந்த முதல் நூலாகும்' *(2002:4)* என்பது அவர் துணிபு. தமிழ் எனும் செல்வத்தை ஆண்ட சீமான்கள், தமிழ்ப் புலவர்கள். அந்தச் சீமான்களின் சரிதைதான் ***The Tamil Plutarch!***

○○○

# தித்வா...

இறைவா...
உன் தராசில் ஏதும் பிழையோ...
அருளை அளந்து அனுப்பிட வேண்டாமா?
உன் அளவில்லா கொடையால் அமிழ்ந்தே
போயிட்டோம்.

இறைவா...
நீ அறியாதது ஏதுமுண்டோ...
எந்நேரம் எத்தேவை எனக்கண்டு
'மனுசத்தன்மை' வேண்டுமென
அனுப்பினாயோ இம்மழை வெள்ளத்தை.

மாணிக்கம் விளையும் எம் தீவினிலே –
மனிதத்தை அகழ்ந்தெடுத்தோம்
தித்வா வெள்ளப் பெருக்கினிலே.

கோணலான எதிர்காலத்தை மாற்றிட
– மாந்தர் கோடி
மறுவாழ்வுக்காய் ஓர்மையுடன் ஓடுதிங்கே.

தண்ணீரில் தத்தளித்த எம் நித்திலம்
– நீந்திக் கரையேற
கைகளெல்லாம் ஒருசேர அசைந்ததிங்கே.

புதையுண்ட உயிர்கள் இன்று சுவர்க்கத்திலே
– தங்கி நின்ற உயிர்கள் இன்று மனித
தேவதைகளாய் தரணியிலே.

மதங்கள் மறைந்தன.
இனங்கள் இணைந்தன.
மனங்கள் மட்டுமே வென்றன.



**ரிஸ்மியா நாகூர்கனி ஹாபி**
(லண்டன்)






**இ**ன்னும் இரு வாரங்களில் பல்கலைக்கழக இறுதிப் பரீட்சைகள் ஆரம்பமாக உள்ளன. கடந்த நான்கு வருடங்களாக தன் பட்டப் படிப்பை முடிப்பதற்காக தான் பட்ட கஷ்டங்களையும் அலைச்சல்களையும் தன் பெற்றோரின் தியாகங் களையும் மீட்டிப்பார்த்த அமினாவுக்கு ஆச்சரி யமாக இருந்தது.

கண்டி மாவட்டம், கம்பளையைச் சேர்ந்த அமினா, குடும்பத்தில் மூத்த பெண்பிள்ளை. அவளுக்குப் பிறகு இரண்டு ஆண் பிள்ளைகள். அமினாவின் வாப்பா மரக்கறித் தோட்டம் செய்து அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில் குடும்பத்தைச் சிரமமின்றி ஓட்டிவந்தார். உம்மா வீட்டோடு சிறியதொரு சில்லறைக் கடை நடாத்தி அதன் மூலம் கிடைக்கும் வருமா னத்தில் பிள்ளைகளின் படிப்புச் செலவுகளைக் கவனித்து வந்தார்.

அமினாவுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் குடும்பமே குதூகலித்து மகிழ்ந்தது. ஆனாலும் உம்மாவுக்கு கிழக்குப் பகுதி என்றால் ஒருவித பயம். மகளுக்கு தென்கிழக்குப் பல்கலைக் கழகம் கிடைத்தது. பயமாகவும், கவலையாகவும் இருந்தது. தமது பகுதியில் கிடைத்திருந்தால் பாதுகாப்பாகவும் சந்தோஷமாகவும் இருந்தி ருக்குமே என எண்ணினார்.

உம்மாவின் கவலையைப் புரிந்துகொண்ட அமினா "உம்மா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அம்பாறை மாவட்டம் ஒலுவில் பகுதியில் தான் இருக்கு.ஒலுவில் துறைமுகமும் பக்கத்திலேதான். ஒலுவில் முழுக்கிராமமும் முஸ்லிம்கள் வாழும் கிராமம். அங்கு எவ்விதமான பிரச்சினை களும் இல்லை. நாங்க ஹொஸ்டலில் தங்கி யிருந்துதான் படிக்கப் போறம். முஸ்லிம், தமிழ், சிங்களப் பிள்ளைகள் எல்லாம் ஒன்றா தங்கியிருந்து படிப்பதாலே பிரச்சினை ஒன்றும் இல்லை உம்மா." என்றாள். - நான்கு வருடங்களுக்கு முன் உம்மாவிடம் கூறியது நினைவுக்கு வந்தது, அமினாவுக்கு.

"வாப்பா, நாளை எப்படியும் நாங்க நாலு பேரும் ஒலுவில் செல்லவேண்டும். ஜெஸா பஸ்ஸுக்கு புக் பண்ணிட்டாவாம். பஸ் காசு கொடுக் கணும். எனக்கும் செலவுக்கு காசு வேணும்." என வாப்பாவிடம் கூறினாள், அமினா.

"மகள், உங்கட சல்லி எல்லாம் எடுத்து வைச்சிருக்கேன், என்னவோ கிழக்குப் பகுதியில் வெள்ளம், சூறாவளி வரப்போவதாக மிஹ்றுன் மாமி சொன்னா. எதுக்கும் பாத்து அனுப்புங்க எண்டு சொன்னவ. மவ. போன வாட்டியும் கெம்பஸுக்குள்ளே வெள்ளம் வந்து நீங்க எல்லாம் கஷ்டப்பட்டு வந்து சேந்தீங்க. அதில வெள்ளத்துல வுளுந்து மதரஸாப் பிள் ளைகள் மவுத்தான சேதியும் தெரியும்தானே. எதற்கும் நல்லா விசாரிச்சுப் போங்க மவ"

"அங்க பிரச்சினை ஒன்னும் இல்ல உம்மா. மழைதான் கொஞ்சம் மிச்சம் என்று சொன்னாங்க. அப்படி ஏதும் பிரச்சினை என்றால் பாதுகாப்பாக எங்களை அனுப்பிவைப்பாங்க. நீங்க கவலைப் படாதீங்க உம்மா"

அடுத்த நாள் காலை நண்பிகளுடன் பல்கலைக் கழகம் வந்தடைந்த அமினாவுக்கு சிறிது பய மாகத்தான் இருந்தது. அநேகமான வெளியூர்ப் பிள்ளைகள் சமுகமளிக்கவில்லை. பரீட்சைகளும் நடைபெறமாட்டாதுபோல் தெரிந்தது. அமினா நினைத்ததுபோலவே பரீட்சைகள் ஒத்திப்போடப் பட்டுள்ளதாகவும், மாணவர்களை விடுதி களிலிருந்து பாதுகாப்பாக தங்கள் தங்கள் வீடு களுக்குச் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டது. வெளியூர் பிள்ளைகளை அனுப்பி வைப்ப தற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் இரண்டு மணியளவில் உம்மாவுக்கு அறிவித்துவிட்டு தன் நண்பிகளுடனும் இன்னும் சில மாணவர்களுடனும் தனியார் பஸ் ஒன்றில் ஊர் வந்துசேர ஆயத்தமானாள், அமினா. பல்கலைக்கழக நிருவாகத்தினால் பயணத் துக்கான எல்லா ஒழுங்குகளும் நல்ல முறையில் செய்து கொடுக்கப்பட்டன. ஓலுவிலிலிருந்து அம்பாரை, மஹியங்கனை, கண்டி வழியாக கம்பளை நோக்கி வெளிக்கிட்ட பஸ் எப்படியும் ஆறு ஏழு மணித்தியாலங்களில் கம்பளை நகரை வந்தடைந்துவிடும். பஸ் வெளிக்கிடத் தொடங்கி யதிலிருந்து மழை பொழிய ஆரம்பித்தது. வானம் விம்மிப் புடைத்துக் காணப்பட்டது. பாதையில் மண் மேடுகள் சரிந்து கற்பாறைகள் பாதையை மறித்துக் காணப்படுகின்றன போன்ற செய்திகளும் பஸ்ஸின் உள்ளே பரவ ஆரம்பித்தன. கண்டி, கம்பளை பகுதி களில் பலத்த மழை பெய்வதாகவும் பல வீதிகள் நீரில் மூழ்கிக் கிடப்பதாகவும் செய்திகள் வெளிவந்தவண்ணம் இருந்தன.

பயணம் எந்தவித ஆபத்துகளும் இல்லாமல் கண்டி நகரை நெருங்கிக் கொண்டிருக்கையில் பாதுகாப்புப் படையினரால் இடையில் பஸ் நிறுத்தப்பட்டு கூடுதலான வெள்ளம் பரவுவதால் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்க முடியாது எனவும், அவர்களைப் பின்தொடர்ந்து வருமாறும் கூறி ஒரு பௌத்த விகாரையை நோக்கி அழைத்துச் சென்றனர். பஸ்ஸில் இருந்த எல்லோர் முகத்திலும் அச்சத்தின் ரேகைகள் படர ஆரம்பித்தன. பஸ்ஸிலிருந்து இறங்கி விகாரைக்குள் சென்றபோது அங்கு ஏற்கனவே சில குடும்பங்கள் பாதுகாப்புக் கருதிக் கொண்டு வரப்பட்டிருந்தன. அமினாவுக்கும் அவளது நண்பிகளுக்கும் பயம் தொற்றிக் கொள்ள ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் அங்கிருந்த புத்த பிக்கு ஒருவர் வந்து "நீங்க பயப்படாதீங்க. நிலைமை மோசமாக உள்ளது என்பது என்னவோ உண்மை தான். கண்டி, கம்பளை எல்லாம் பெரும் வெள்ளம். பலத்த காற்று அடிச்சிக்கிட்டிருக்கு. மண்சரிவும் ஏற்பட்டுள்ளது. மின்சாரம், போக்கு வரத்து, தொலைத்தொடர்பு எல்லாம் பாதிக்கப் பட்டிருக்கு. எங்கட ஆட்கள் எல்லாம் இங்கேயே இருக்கட்டும். நான் பள்ளிவாசல் மௌலவி மாருக்கு அறிவிச்சிருக்கேன். உங்களை வந்து அழைச்சிட்டுப் போவாங்க." என ஆறுதல் வார்த்தைகள் கூறி, வந்தவர்களின் கவலையைப் போக்கினார். கூறி சில நிமிடங்களில் கண்டி பெரிய பள்ளிவாசல் நிருவாகிகள் சிலர் ஒரு வேனில் வந்து அமினாவையும் நண்பிகள் மூவரையும் அழைத்துச்சென்று ஒரு முஸ்லிம் வீட்டில் ஒப்படைத்தனர். பஸ் சாரதியும் நடத்து னரும் இன்னும் சில ஆண் மாணவர்களும் விகாரையில் தங்குவதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டன. அந்த வீடு இரு மாடிகளைக் கொண்ட பெரிய வீடு. அங்கும் வீட்டுச் சொந்தக்காரர்களின் உறவுகளான இரண்டு மூன்று குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி தங்கியிருந்தனர்.

இடி, மின்னல், மழை ஓய்ந்தபாடில்லை. சோவென்ற இரைச்சலுடன் காற்றும் மிக வேகமாக வீசியது. "மவ, நீங்க இப்ப வீட்டுக்கு போவ ஏலா. ஒங்கட உம்மா, வாப்பாக்கு கோல் போட்டு சொல்லுங்க." என ஒரு தாய் கூறியபோது அமினா உடனடியாக தனது தாய்க்கு அழைப்புவிடுத்தாள். அவளது நல்ல காலம் தொடர்பு கிடைத்துவிட்டது.

"மவ, எங்க இருக்கயள்? இங்க நிலமை மிக மோசமாக இருக்கு. வந்திடாதீங்க. சரியான தண்ணி வருது. மழையும் பெரிசா பெய்யுது. மண் சரிவும் இருக்காம்." எனக் கூறிக் கொண்டி ருக்கும் போது தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. பலமுறை முயற்சித்தும் அமினாவினால் உம்மாவுடன் கதைக்க முடியவில்லை. அமினா வுக்கு அழுகை அழுகையாக வந்தது. அன்றிரவு முழுக்க பயத்தினாலும் உம்மா, வாப்பா, சகோதரர்கள் பற்றிய கவலையாலும் எவருக்கும் நித்திரை வரவில்லை. சிறுவர்களைத் தவிர எவரும் உறங்கவில்லை.

நள்ளிரவு இரண்டரை மூன்று மணியிருக்கும் "மவ, எழுந்திருங்க. முன்பக்கமெல்லாம் தண்ணி பெரிசா வர ஆரம்பிச்சி. நீர்த்தேக்கம்




எல்லாம் தொறந்தாச்சாம். மகாவலி கங்கையும் பெருக்கெடுத்திட்டாம். மேல் மாடிக்குப் போய் பாதுகாப்பா இருப்போம். முதல்ல பொம்பிளைப் பிள்ளைகள் சின்னதுகள் எல்லாம் மேலே போங்க." என வீட்டிலிருந்த பெரியவர் கூறி விட்டு வீட்டிலிருந்த ஆண் பிள்ளைகள் இருவரையும் அழைத்து கீழ்மாடியில் இருந்த முக்கிய சாமான்களை எல்லாம் மேல் மாடிக்கு ஏற்றத் தொடங்கினார். அமினாவும் நண்பிகளும் மேல் மாடிக்குச் சென்று ஒரு ஜன்னல் ஓரமாக அமர்ந்து கொண்டனர்.

மறுநாள் பொழுது புலர ஆரம்பித்தது. மழை ஓய்ந்தபாடில்லை. வெள்ளம் வீட்டின் தாள்வாரம்வரை மட்டுமே காணப்பட்டது. வல்ல அல்லாஹ்வின் கருணையால் தங்கியிருந்த வீட்டுக்கு எந்தவொரு பாதிப்புமில்லை.

அவசர அவசரமாக ஒரு குடையைக் கையிற் பிடித்துக் கொண்டு பெரியவர் வெளியே வந்தார். பிரதான வீதி எங்கும் சன நெரிசல். முச்சக்கர வண்டிகள் ஒன்றிரண்டைத் தவிர வாகனங்களைக் காணவில்லை. வெள்ளம் வடிந்தோடும் இடமெல்லாம் சேறும் சகதியுமாகக் காணப்பட்டன. பெரியவரைக் கண்டதும் அவரை நோக்கி வந்த முஸ்தபா ஆசிரியர் "எண்ட அல்லாவே! நம்மட பக்கம் மட்டும்தான் பாதிக்கப்படல்ல போல. பள்ளத்து காணி, கடை, வீடெல்லாம் சரியான மோசம். மிச்சம் மௌத்தும் போல. அரசாங்கம் அவசரகால நிலையை அறிவிச்சிருக்காங்க. கம்பளப் பக்கம்தான் பாதிப்பு அதிகம்போல. பல இடத்தில மலை சரிஞ்சிருக்காம். நான் கண்டிக்கு வந்து அம்பது வருஷமாகுது. இப்படி ஒரு மழையைக் கண்டதில்லை. கம்பளையில வீடுகள் எல்லாம் பத்து பதினைந்து அடி தண்ணி வந்து பெரும் சேதமாம்." – என ஆச்சரியப்பட்டுக் கொண்டே நகர்ந்து சென்றார், முஸ்தபா ஆசிரியர்.

வேகமாக வீடு வந்த பெரியவர் "என்ட அல்லாஹ். நுவரெலிய, அக்குறண, கம்பளை எல்லாம் பெரும் சேதமாம். அரசாங்கம் நாடு பூரா அனர்த்த நிலை அறிவிச்சிருக்காம். மிச்சம் பேர் மௌத்தாம். றம்புக் எல என்ற கிராமம் மொத்தமா மண்ணுக்கே போயிடுச்சாம். எத்தனை பேர் மௌத்து என்று தெரியாதாம். ரெண்டு மாடிக்கு மேலே எல்லாம் தண்ணி வந்துச்சாம்." எனக் கூறிவிட்டு முன்பாகக் கிடந்த கதிரையில் அமர்ந்து தலையைத் தடவிக் கொண்டிருந்தார்.

இதைக்கேட்ட அமினாவுக்குப் பொறி கலங்கியது. றம்புக்கல அவளது தோழி ஜெஸாவின் வீடு அமைந்துள்ள ரம்மியமான கிராமம். கண்டி மாவட்டத்தில் அக்குறண பிரதேச சபைக்குட்பட்ட அலவதுகொட அங்கும் புகையிரத பிரதான பாதையின் மத்தியில் காணப்படும் அழகிய பசுமையான கிராமம். அக் கிராமத்தைச் சூழ மலைகள் அமைந் திருப்பது அக்கிராமத்தை மேலும் அழகு படுத்துகிறது. சுமார் அறுநூறு முஸ்லிம்

குடும்பங்கள் வாழும் அழகிய இயற்கை எழில் கொஞ்சும் கிராமம். வீட்டி லிருந்து வரும்போது ஜெஸாவின் உம்மா, வாப்பா சகோதரர்கள் எல்லாம் றம்புக்கலவில் தான் இருந்தார்கள் என நினைத்தபோது அமினாவுக்கு வயிற்றைக் கலக்கியது. ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு ஜெஸாவை அணுகி,

"ஜெஸா. நம்மட பகுதி பெரிசாப் பாதிச்சிருக்கு போல. அதிலும் உங்கட றம்புக் எலவில் மண் சேதம் அதிகம் போல. உடனே வீட்டுக்கு கோல் போட்டுக் கேளு" எனப் பதட்டத்துடன் கூறினாள், அமினா.

ஜெஸா உம்மாவுடன் கதைப்பதற்குப் பல முறை முயற்சி செய்தும் பலனில்லாமல் போயிற்று. அமினாவும் தனது வீட்டுக்கு பல தடவை கோல் பண்ணிப் பார்த்தாள். தொடர்பு கொள்ள முடியவில்லை. நெருக்கடியான வேளைகளில் தொலைத்தொடர்பும் சதி செய்வது கண்டு மனம் வருந்தினாள். வல்ல அல்லாஹ்விடம் பிராத்தனை செய்வது தவிர வேறு வழியில்லை என நினைத்து அனைவரும் இறைவனைப் பிரார்த்தனை செய்தனர்.

மதியவேளை அமினாவின் உம்மாவிட மிருந்து அழைப்பு வந்தது. மகள் அமினா மகிழ்ந்துபோனாள். ஆனால் உம்மாவோ, குரல் தழுதழுக்க மகளை அழைத்து, "மவ. எங்க இருக்கீங்க? இங்க எல்லாம் அழிஞ்சுபோச்சு. வீட்டில தண்ணி வருதென்று சொல்லி இரவு எங்களை எல்லாம் அழைச்சிட்டுப் போய் ஒரு எடத்தில தங்க வச்சாங்க. அங்கதான் இப்ப இருக்கம். எங்களுக்கு ஒண்ணும் ஆகல. அல்லாட கருணையால தப்பிச்சிட்டோம். வீடு முழுக்க சேறும் சகதியுமாப் போச்சாம். வீட்டிலிருந்த சாமான் எல்லாம் நாசமாப் போச்சாம். வீட்டுக்குப் போவ ஏலா. இங்க பாதுகாப்பு படையும் வெளியி லிருந்து வந்த ஆக்களும் வீடு காணிகளைச் சுத்தம் பண்ணுறாங்க. உங்க வாப்பாவும் அங்கதான் நிண்டு வேலை செய்றாங்க. நீங்க இப்ப வர வேணா. இருக்கிற இடத்திலேயே கவனமா இருங்க. நம்மட ஜெஸா ஆக்கள் இருந்த வீடெல்லாம் மண்ணுக்குள்ளே புதைஞ்சு போச்செண்டு கதைக்கிறாங்க. அவள்ட உம்மா வாப்பாவுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. அல்லாதான் காப்பத்த வேணும்" எனக் கூறி அழத் தொடங்கினார், அமினாவின் உம்மா.

"உம்மா நீங்க கவலைப்படாதீங்க. பாதுகாப்பா இருங்க. இன்று எங்களை ஊருக்கு கூட்டி வாரதா பள்ளிவாசல் ஆட்கள் சொல்லிட்டுப் போறாங்க. வெளிக்கிட்டதும் நான் கோல் எடுத்துச் சொல்றேன்." எனக் கூறிவிட்டு ஜெஸாவை நோக்கி வந்தாள் அமினா.

ஜெஸாவும் ஏனைய இரு தோழிகளும் தங்களது வீடுகளுக்குத் தொடர்பை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். ஜெஸாவைத் தவிர ஏனைய இருவருக்கும் உம்மா வாப்பா வுடன் கதைப்பதற்கு லைன் கிடைத்து விட்டதும் அவர்களுடன் உரையாடி ஆறுதல் அடைந்தார் கள். ஆனால் ஜெஸாவுக்கு மட்டும் முடிய வில்லை. ஜெஸா மிகவும் பதட்டப்பட்டவ ளாகவும் பயந்தவளாகவும் காணப்பட்டாள்.

ஜெஸாவின் றம்புக் எல கிராமம் மண்ணோடு மண்ணாகப் போய்விட்ட சேதியை ஜெஸாவிடம் கூற முடியாது தவித்தாள் அமினா. நல்ல வேளை சமூக வலைத்தளங்கள் அவர்கள் இருந்த இடத்தில் வேலை செய்யவில்லை. அதுவும் ஒரு வகையில் நன்மையாப் போய்விட்டது.

கண்டி பெரிய பள்ளிவாசல் நிருவாகிகளால் வேன் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு தாய்மார், மகளுடன் ஒரு முதியவரும் அடங்கலாக கம்பளை நோக்கிப் பயணமாவதற்காக ஆயத்த மானார்கள்.

"யா அல்லாஹ். எங்களது ஊர்ப்பகுதிக்கு எதுவுமே நடந்து விடக்கூடாது. எனது உம்மா, வாப்பா, தம்பிமார்களை உயிர்களுக்கு ஆபத் தில்லாமல் காப்பாத்திவிட்டாய். வீடு, வாசல், பொருட்கள் போனாலும் பரவாயில்லை. நீ நாடினால் அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஜெஸாவின் நிலைதான் மிகக் கவலையாக இருக்கு. அவள்ட குடும்பத்துக்கு என்ன நடந்தது என்று தெரியல்ல. அவள்ட குடும்பத்தக் காப்பாத்து அல்லாஹ். ஜெஸாட முகத்தைக் கூடப் பார்க்க முடியல்ல. அவ்வளவு சோகமா இருக்கா. வல்ல ரஹ்மானே எங்க எல்லோரையும் காப்பாத்து." எனக் கண்ணீர் விட்டு அழுதாள் அமினா.

"ம்... எல்லாரும் ஏறுங்க" என றைவர் கூறியதும் தன் உம்மா, வாப்பா, தம்பி, தங்கை, வீடு வாசல் அனைத்தும் தான் பிறந்து வளர்ந்து வசித்த மண்ணுக்குள்ளேயே புதையுண்ட செய்தி அறியாது தனது வலது காலை முன்வைத்து உள்ளே ஏறி அமர்ந்தாள், ஜெஸா.

❍❍❍

# பிள்ளைகளைப்பற்றி

மூலம்: காலில் ஜிப்ரான்
தமிழ் வடிவம்: அன்னலட்சுமி இராஜதுரை



உங்கள் பிள்ளைகள் உங்கள் பிள்ளைகள் அல்ல
அவர்கள் வாழ்க்கை தனக்காக ஏங்கியதன்
ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும்
அவர்கள் உங்கள் மூலம் வந்தவர்கள்
ஆனால் உங்களிடமிருந்து வந்தவர்களல்ல

உங்கள் அன்பை
அவர்களுக்கு நீங்கள்
வழங்கலாம்
ஆனால் உங்கள்
சிந்தனைகளையல்ல
ஏனெனில் அவர்கள்
தமக்கென சொந்த
சிந்தனைகளை
வைத்திருக்கிறார்கள்
நீங்கள் அவர்கள் தம்
உடல்களை வீட்டில்
பாதுகாக்கலாம்
அவர்கள் தம் ஆத்மாக்களை அல்ல
ஏனெனில் அவர்கள் தம் ஆத்மாக்கள்
நாளையெனும் இல்லத்தில் தங்குகின்றன
அங்கு நீங்கள் விஜயம்
செய்யமுடியாது
உங்கள்
கனவிலுங்கூட
அவர்களைப்போல
இருக்க நீங்கள்
ஆவல் கொண்டிருப்பீர்கள்
ஆனால் உங்களைப்போல
அவர்களை ஆக்க
முனையாதீர்கள்
ஏனெனில் வாழ்க்கை
பின்னால்செல்வதோ
அல்லது நேற்றுடன்
ஒத்துப்போவதோ
இல்லை
வில்லுகளான உங்களிடமிருந்து
உங்கள்பிள்ளைகள்
வாழும் அம்புகளாக
அனுப்பப்பட்டவர்கள்
வில்லாளன்
எல்லையற்றவனின்
பாதையின் குறியைப்
பார்க்க
அவன் தன் சக்தியால்
உனைமடக்க
அவனது அம்புகள்
துரிதமாகவும்
தூரமாகவும்
போகலாம்
வில்லாளனின் கரத்தில் உனது குனிவு
மகிழ்ச்சிகரமாக
இருக்கட்டும்
பறக்கின்ற அம்பினை அவன்
விரும்புகின்றான்
எனினும்
அவ்விதமே உறுதியான வில்லினையும்
அவன் விரும்புகின்றான்.

# இலங்கையில் தமிழ், ஆடல் வளர்ச்சி ஆய்வை வேண்டும் இடைவெளி

**இ**லங்கைத் தமிழ்ச் சூழலில் நீள் வரலாற்றுத் தொடர்ச்சியை ஆடற்கலை கொண்டுள்ளது. தொன்மையான சமூக இருப்பு, தொழில் முறைகள், மக்களிய (folk) வழிபாடுகள், சடங்குகள் ஆகியவற்றோடு இணைந்த வகையில் நம்பிக்கைப் பிடிப்போடு ஆடல் நிகழ்த்தப்பட்டு வந்தது.

தொன்மையான வேட்டுவ வாழ்க்கையின் தொடர் பதிவுகள் இன்றும் இலங்கையில் நிலைத்துள்ளன. தொழில்களோடு இணைந்த தனித்துவமான உடலசைவுகளை இயற்கை வழிபாட்டுடன் இணைத்துக் கலை நயப்படுத்தல் ***கிழக்கு மாகாணத்தில் உள்ள வேடர்களிடத்துச் சம காலத்திலும் நிகழ்கின்றன***.

பயிர்ச்செய்கை வளர்ச்சியோடும் தொன்மையான தொழில் முறைகளின் நீட்சியோடும், புதிய அசைவுகளை உடல்வழியாக நிகழ்த்தும் நிலை ஏற்பட்டது.

இயற்கை அசைவுகளும் தொழில்களோடு இணைந்த உடல் மொழியும், பாவனைகளும் ஆடல் ஆக்கத்தை வளம்படுத்தும் உள்ளீடுகளாக அமைந்தன.

வீரவழிபாடும், காளி அம்மன், கொத்தி (கொற்றவை), கருமாரி, பூமாரி, முத்துமாரி முதலாம் பெண்தெய்வ வழிபாடுகளும், அவற்றோடு இணைந்த ஆடல்களும், சடங்கு ஆடல்களும், நிகழ்த்தப்பட்டன. வளப்பெருக்கை வேண்டி விளை நிலத்தில் ஆடல் நிகழ்த்தலும் இடம்பெற்றது.

வல்லியக்கர், முனியப்பர், காத்தவராயர், வீரபத்திரர், கருப்பண்ணசாமி, ஐயனார், இளந்தாரிகள், அண்ணமார் முதலாம் ஆண் தெய்வ வழிபாட்டோடும், மக்களிய நம்பிக்கைகளோடும் இணைந்த ஆடல்களும் வளர்ச்சியுற்றன.

முருக வழிபாடு இலங்கையில் தொன்மையானது. கதிர்காமம், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், கந்தரோடை என்ற கந்தன் உறைவிடம், நல்லூர், களுதாவளை, மண்டூர், தொல்லூர் இணுவை முதலிய பல நிலையங்கள் தொன்மையான முருக வழிபாட்டுத் திருவிடங்கள்.

முருக வழிபாட்டோடு இணைந்ததாக 'காவடியாடல்' என்ற தனித்துவமான வகைமை வளர்ச்சியுற்றது. நுண்ணிதான மற்றும் கனதியான சொற்கட்டுகளும், தாளக்கட்டுகளும், கால் வேலைப்பாடுகளும், காவடியாடலின் தனித்துவத்தை எழுகோலம் பெறச்செய்தன.

அத்துறையில் விரிவான கள ஆய்வுகளை மேற்கொண்டவர் ***கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை***. தாளக் கோலங்களையும், ஆடல் எடுப்புகளையும் அவர் ஆவணப்படுத்தியதுடன், அத்துறையில் பயிற்சிகளையும் வழங்கினார்.

பக்திச் செறிவோடும், கலைநுட்பங்களோடும் இணைந்த தொன்மையான காவடியாடல் இன்றும் தொடர்ந்தவண்ணமுள்ளது. ***அண்ணாமலை ரெட்டி***யாரின் காவடிச்சிந்து அதற்கு மேலும் வளமூட்டியுள்ளது.

♦ ♦ ♦

இலங்கையின் தமிழ் ஆடற்பரவலை ஆராய்வோர், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பெரும்பாலும் தொடங்குகின்றனர். குறிப்பாக ***இணுவை ஏரம்பநாதரில்*** இருந்தே எழுத்தாக்கம் முன்னெடுக்கப்படுகிறது. அதற்கு முன்பிருந்த ஆடல் வளத்திலிருந்து அவரது ஆளுமை வளம் எவ்வாறு மேலெழுந்து மலர்ச்சிகொண்டது



**பேராசிரியர் சபா ஜெயராசா**

என்ற தொடர்பினைக் கண்டறிய வேண்டியுள்ளது.

முன்னதாக கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இணுவிலில் வாழ்ந்தவர் ***சின்னத்தம்பிப் புலவர்***, இலக்கிய ஆக்கம், இசை மற்றும் ஆடலில் வல்லவராக அவர் இருந்தமை, ஈழத்தின் கவின் கலைத் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக அமைந்தது. ஏரம்பநாதர், அவர் வழிவந்தவர்.

'இணுவைச் சிவகாமி சுந்தரி பதிகம்', 'இளந்தாரி புராணம்', 'சிவகாமி அம்மைபிள்ளைத் தமிழ்' ஆகியவற்றை சின்னத்தம்பிப் புலவர் எழுதினார். கதை சொல்லும் ஆடல் வகையான கூத்தில் அவர் ஈடுபாடு கொண்டிருந்தமையால், 'நொண்டி நாடகம்', 'கோவலன் நாடகம்', 'அனிருத்த நாடகம்' ஆகியவற்றை எழுதியமையோடுமட்டும் நின்றுவிடாது, கூத்துகளில் முதன்மைப் பாத்திரங்களை ஏற்று ஆடினார்.

ஈழத்துப் புலவர்கள் இசையிலும் ஆடலிலும் வல்லவர்களாக வளர்ந்தமைக்கு அவர் ஒரு மாதிரிகை வடிவினராக இருந்தார். கூத்துகளில் ***தூது செல்லும்*** ஆடலை வளம்படுத்தியமைக்கு அவரின் ***பஞ்சவனத்தூது*** சான்றாகின்றது.

பழமையில் ஊறிய புதுமையின் நாட்டத்துக்கு எடுத்துக்காட்டாக அது அமைந்தது. (கந்தசுவாமி க.இ.க. (1998) இணுவை சின்னத் தம்பிப்புலவர் அருளிய பஞ்சவனத்தூது, சென்னை. தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்).

இணுவில் உள்ளடக்கிய யாழ்ப்பாணப் பகுதியின் ஆட்சியாளனாக இருந்த ***கைலாய நாதன்*** என்பவனை, பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு "பஞ்சவனத்தூது" எழுதப்பெற்றது. கைலாசநாதன் அரச மரபில் வந்தவன். அந் நூல் ***கைலாசநாதன் பஞ்சவனத்தூது*** எனவும் அழைக்கப்பட்டது.

(ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கலைச் செயற்பாடுகள் மெல்லெனவும், வெளித்தோன்றா நிலையிலும், மறைவாகவும், இயங்கிவந்தன. ஆங்கிலேயர் ஆட்சியில் அரச அழுத்தங்கள் படிப்படியாக விலகி, கலை மற்றும் சமயச் செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்பட்டது).

***காலிங்கராய***னின் மகனே கைலாயநாதன். அவர்களின் வரலாறு தொடர்பான செவிவழிச் செய்திகளே யாழ்ப்பாணத்தில் பெருமளவில் நிலவிவந்தன.

கைலாயநாதனே. பஞ்சவனத்தூதின் பாட்டுடைத் தலைவன். அந்நூல் ஆடுவதற்கும் கூத்துக்கும் ஏற்றவகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

பின்வரும் தலைப்புகளில் நூல் ஆக்கம் பெற்றுள்ளது.

- ❖ கட்டியக்காரன் தோற்றம்
- ❖ கட்டியற்கூறல்
- ❖ இளந்தாரி திருவீதி உலாவருதல்
- ❖ கைலாயநாதன் உலாக்காண சந்திரமோகினி வருதல்
- ❖ சந்திரமோகினி ஆற்றமையுறல்
- ❖ சந்திரமோகினி சாமவேளுக்கு முறையிடல்
- ❖ வெண்ணிலாவுக்கு முறையிடல்
- ❖ தென்றலைத் தூதாக வேண்டல்
- ❖ கிளிக்கு முறையிடலும் தூதாக வேண்டலும்
- ❖ அன்னத்தைத் தூதாக வேண்டல்
- ❖ சந்திரமோகினியை தோழி உற்றது வினாவுதல்
- ❖ சந்திரமோகினி தோழிக்கு உற்றது உரைத்தல்
- ❖ சந்திரமோகினி தோழியை தூதாக வேண்டல்
- ❖ கைலாயநாதன் முன் தோழி கூறுதல்
- ❖ கைலாயநாதனிடம் தோழி சந்திர மோகினியின் குறை நேர்தல்
- ❖ இளந்தாரி அருள்புரிந்ததை தோழி சந்திரமோகினிக்குத் தெரிவித்தல்.

பாடல்களுக்கு இராகமும் தாளமும் தரப்பட்டுள்ளமை வளமான முகிழ்ப்பு ஆடல் மரபு இலங்கையில் இருந்தமைக்குச் சான்றாகும்.

பஞ்சவனத்தூதை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் வாழ்ந்த தஞ்சை நால்வராகிய ***சின்னையா***, ***பொன்னையா***, ***சிவானந்தம்***, ***வடிவேலு*** ஆகியோர் அளிக்கைக்கு உட்படுத்தியதான செய்தி உண்டு. (***இணுவை சேதுலிங்கம் சட்டம்பியார்***) ஆனால் எழுத்துவழியான ஆவணப்பதிவு கிடைக்கப் பெறவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நெருங்கிய கலைத்தொடர்புகளும் பண்பாட்டுத் தொடர்புகளும் இருந்தன. அக்காலப்பகுதியில் தமிழ் நாட்டில் உள்ள இசைவேளாளர் யாழ்ப் பாணத்துக்கு வந்து, இணுவில், அளவெட்டி, நல்லூர் ஆகிய இடங்களில் குடியமர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இலங்கையின் ஆடல் மரபு மிகவும் தொன்மை யானது. தமிழர், சிங்களவர்கள் ஆகியோரின் தனித்துவமான பண்பாட்டு வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு ஆடல் வகைகளும் பிரிநிலை கொண் டிருந்த நிலையைக் காணலாம்.

இலங்கைத் தமிழர்களது கலை மரபுக்கும், தமிழ் நாட்டினரது கலை மரபுக்கும் இணைநிலை தொடர்ந்து நீடித்து நிலவியது.

இலங்கையும், தமிழ்நாடும் கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும், வழிபாடு, மொழி, அரசியல், பண்பாடு, வர்த்தகம், சார்ந்த தொடர்பு கள் நீடித்து வந்துள்ளன.

சங்கப் புலவர் வரிசையில் ஈழத்துப் புலவரும் உள்ளடங்குகின்றார். ***ஈழத்துப் பூதன்தேவனார்*** பாடிய ***ஏழு பாடல்கள்*** சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன.

(அ) அகநானூறு – 88, 231, 307

(ஆ) குறுந்தொகை – 189, 343, 360

(இ) நற்றிணை – 366

அகநானூற்றில் மூன்று பாடல்களும், குறுந்தொகையில் மூன்றும், நற்றிணையில் ஒரு பாடலும் இடம்பெற்றுள்ளன.

சங்ககால வாழ்க்கையும் ஐந்திணை ஒழுக்கமும், பண்பாட்டுக் கோலங்களும், அவற்றை அடியொற்றி எழுந்த மனவெழுச்சி களும், ஒன்றிணைந்து தொழில் முறைகளோடு தொடர்புடைய உடலசைவுகளையும் ஆடல் அடவுகளையும், முத்திரைகளையும், உரு வாக்கின.

சங்கப் பாடல்கள், ஆடலுக்கும் கூத்துக்கும் உரிய உட்பொதிவுகளைக் கொண்டுள்ளன.

வள்ளிக்கூத்து, குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, பேய்க்கூத்து, மல்லாடல், களியாடல், உருவாடல், பாவைக்கூத்து முதலாம் கூத்து வகைகள் வீரயுக வாழ்க்கையில் நிகழ்ந்தன. கூத்தர் கோடியர், வயிரியர், விழாலியர் முதலி யோர் ஆடல்கலையில் ஈடுபட்டனர்.

தமிழ் நாட்டுக்கும் இலங்கைத் தமிழ் சூழலுக்குமுள்ள தொடர்புகள், ஈழத்துப் பூதன் தேவனாரின் பாடல்களால் அடையாளப் படுத்தப்படுதல், ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கையிலும் அவ்வகைக் கூத்துக்கள் இடம்பெற்றிருக்கமுடியும்.

வளர்ச்சி நிலையில் முகிழ்ப்பு ஆடலுக்கும், கூத்துக்கும் இடையே சமூக அடுக்குநிலை வேறுபாடு தோற்றம் பெற்றது. மேலெடுக் கினருக்கு உரியதாக ***முகிழ்ப்பு ஆடல்*** வளர்ந்தது, மறுபுறம் சமூகத்தின் அடிநிலை மாந்தரோடு கூத்து ஒன்றிணைந்திருக்கிறது. அவர்களுக் குரிய முறைசாரா (Non formal)க் கற்றல் ஏற் பாடாகவும், உணர்ச்சிய பகிர்வுக் களமாகவும், அது அமைந்திருந்தது. அவர்களே கூத்துக் கலையைப் பாதுகாத்து வளர்த்து வந்தனர்.

சங்க காலத்தில் அரசு உருவாக்கமும், மேலெடுக்கினர் தோற்றமும், புலவர் மரபோடு இணைந்த எழுகுழாத்தினர் (Elite) இயல்பும், நிரல்நிலை பெற்றுவிட்டன.

சங்கமருவிய காலத்தில் வரன்முறைக் கல்வி மேலோங்கிய நிலையைத் திருக்குறளும், தொல் காப்பியமும் வெளிப்படுத்துகின்றன. வரன் முறைக்கல்வி நிலையில் முகிழ்ப்பு ஆடல் வளர்ந்தது. அது அரசரையும், பிரபுக்களையும் மகிழ்விக்கும் ஆடலாக அமைந்தது.

Classical என்பதன் பொருள் தொன்மை யானதும் செப்பம் பொருந்தியதுமாகும். முகிழ்ப்பு ஆடலுக்கும் மக்களியக் கூத்துக்கும் அந்த இரு பண்புகள் உண்டு. முகிழ்ப்பு ஆடல் வரன்முறைப் (Normal) பயில்வுக்கும், மக்களியக்கூத்து வரன்முறையோடு பயில முடியாத வாழ்க்கை நிலைவரத்துக்கும் உட் பட்டிருந்தன.

தமிழர் மரபுவழி ஆடல்களில் இருந்து எழு வடிவம் பெற்றதே ***முகிழ்பு ஆடல்*** (Emerged). அதற்கே பிற்காலத்தில் தேவடியார் ஆடல், சதிர் ஆடல், பரதநாட்டியம் முதலாம் பெயர்கள் சூட்டப்பெற்றன. உலகில் உள்ள அனைத்து (Classical) ஆடல்களும் மரபுவழி ஆடல்களில் இருந்து முகிழ்ந்து எழுந்தன.

மக்களிய ஆடல்கள், முகிழ்ப்பு ஆடல் களோடு ஒப்பிடுகையில் ***தரம் குறைந்தவை என்று அடையாளப்படுத்தல் முற்றிலும் தவறு***. ***அவையும் செம்மைபெற்று வளர்ந்த வடிவங்களே***. மூத்த கலைஞரிடமிருந்து ஒழுங்கமைந்த முறையில் அவை கற்றுக்கொள்ளப் படுபவை. நீண்ட பயிற்சியின் பின்னரே ஆடலார் நிகழ்த்துகை மேற்கொள்கின்றனர்.

சமூக வர்க்க அடிப்படையில் முகிழ்ப்பு ஆடலையும், கூத்தையும் வேறுபடுத்தமுடியும், முகிழ்ப்பு ஆடல் அரசர்களுக்கும் மேட்டுக் குடியினருக்கும் உரியதாயிற்று. அரசரே அந்த ஆடலுக்குரிய காப்பாளராய் விளங்கினர். சோழப் பேரரசர் காலத்தில் தேவரடியார், ஆடல் அரசரின் அரவணைப்பில் வளர்ந்தது. மக்களியக்கூத்து, உழைக்கும் வர்க்கத் தினருக்குரிய கலையாயிற்று.

# விவசாயி

ஏர் எடுத்து
பார் உழுது
ஊர் செழிக்க
பாடு படும் – நம் விவசாயி

கார் இருளில்
யானை காத்து
களை பிடுங்கி
வரம்பு போடும் – நம் விவசாயி

கொட்டும் மழையிலும்
அடிக்கும் வெய்யிலிலும்
அசையா மனம் கொண்டு
திசை எங்கும் வாழ்விக்கும்
– நம் விவசாயி

வானம் பார்த்து
போகம் செய்யும்
ஞானம் கொண்ட
வீரனன்றோ – நம் விவசாயி
வாழ்க வாழ்கவே !



**பூங்கோதை
தங்கமயில்**

இலங்கைத் தமிழ்ச் சூழலில் உழைப் போர் தமக்குரிய ஓய்வில் இரவுநேர ***நிலாக் காலப் பள்ளிகளில்*** மூத்த கலைஞரிடமிருந்து இசையையும் ஆடலையும் இசைக்கருவித் திறனையும் கற்றுக் கொண்டனர். கூத்து அளிக்கையும் அதனைத் தொடர்ந்து நிகழும் பயிலரங்கும் கற்றற் செயற்பாடுகளாயின.

சமூக மேலெடுக்கினர், இசை ஆடல், கூத்து, மரவேலை, மட்பாண்டத் தயாரிப்பு இரும்புப் பட்டடைவேலை, சிற்பவேலை முதலிய வற்றைக் கற்பதைத் தவிர்த்துக் கொண்டனர். தமிழ்ச் சூழலில் மட்டுமன்றி மேலை நாடுகளிலும் அதே நிலைவரம் காணப்பட்டது. கல்வியில் மட்டுமன்றி ஆடலிலும் அத்தகைய நிலையே காணப்பட்டது. பிரான்சில், ***லுயிஸ் மன்னரே முகிழ்பு ஆடலாகிய பேலே ஆடலுக்கு காவலராக இருந்தார்***. அதேவேளை சாமானியரே அந்த ஆடலை வரன்முறையாகப் பயின்று அரண் மனைகளில் ஆற்றுகை செய்தனர்.

சங்கமருவிய காலத்தில் முகிழ்ப்பு ஆடல் வரன்முறையான கல்விக்கும் அரங்கேற்ற நிகழ்வுக்கும், தலைக்கோல் பெறுகைக்கும், உட்பட்டிருந்தது. அரசரே தலைசிறந்த ஆடலா ருக்கு ***தலைக்கோல்*** வழங்கும் முறைமை இருந்தது.

வரன்முறைக் கல்விக்கு முகிழ்ப்பு ஆடல் உட்பட்டிருந்தமை, சிலப்பதிகாரச் செய்தியால் வெளிப்படுகின்றது. அனுராதபுரத்திலிருந்து ஆட்சிசெய்த ***கஜபாகு மன்னன்***. பத்தினித் தெய்வ (கண்ணகி) வழிபாட்டை இலங்கைக்கு கொண்டுவந்தான்.

வழிபாடு மட்டுமன்றி, வழிபாட்டோடு இணைந்த சடங்குகளும் ஆடல்முறைகளும் வந்தன. இலங்கையின் இருவேறு பண்பாட்டு நிலைவரங்களால், சிங்கள மக்களிடையே அந்த ஆடல் மரபுகள் பின்பற்றப்படவில்லை.

இலங்கைத் தமிழர் ஆடல்மரபுக்கு மாதவியின் ஆடற்கலையும் கலைநுட்பங்களும் செறிவுமிக்க பங்களிப்பை வழங்கின.

சிங்கள மக்களிடம் **உடரட்ட நட்டும்** எனப்படும் கண்டிய ஆடல், **பகதரட்ட நட்டும்** எனப்படும் தென்புல ஆடல்கள், சப்பிரகமுவா ஆடல், முதலாம் முகிழ்பு ஆடல்கள் வளர்ச்சி அடைந்திருந்தன. அதேவேளை மக்களிய ஆடல்களும் நீடித்திருந்தன.

தமிழர்களின் கூத்து, சிங்கள அரங்கில் செல்வாக்குச் செலுத்தியமை, ***பேராசிரியர் சரத் தந்திரா***வின் ஆய்வுகளால் வெளிப்படுத்தப்

பட்டது. *(Sarachandra, Ediriweera (1952). The Folk Drama of Ceylon)* அவர், வரன்முறையான உயர்கல்வியுடன், ***சந்திநிகேதனி***லும் பயில்வை மேற்கொண்டவர்.

இலங்கையின் அரங்க வளர்ச்சிக்கு அவர் மேற்கொண்ட பதிலீடில்லாப் பங்களிப்பைக் கௌரவித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1982ஆம் ஆண்டில் கௌரவ "இலக்கியக் கலாநிதி"ப் பட்டத்தை வழங்கியது.

தமிழ்நாட்டில் முகிழ்ப்பு ஆடல் வரன் முறையான கற்றலுடன் இணைந்த நிலையை மாதவி நிகழ்த்திய ஆடல்வகைகள் புலப் படுத்தும்.

அல்லியம், கொடுகட்டி, குடைக்கூத்து, குடம், குடை பாண்டரங்கம், மல்லாகம், துடி, கடையம், மரக்கால், பாவை, பேடி ஆகியவை மக்களியக்கூத்தையும் முகிழ்ப்பு ஆடலையும் இணைத்த நிலையில் உள்ளன.

ஆடல், கூத்து என்ற கருத்து வடிவங்கள் ஒரே அளிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அங்கு காணலாம்.

யாழ்ப்பாணத்து மல்லுக்கூத்துக்கும் தமிழக மல்லாடலுக்கும் தொடர்பு உண்டு. அதுபோல் யாழ்ப்பாணத்துப் பண்டக்கூத்துக்கும் தமிழக பாண்டரங்கத்துக்கும் தொடர்பு உண்டு. ஆனால் அவற்றை நிறுவுவதற்கு மேலும் ஆய்வு வேண்டப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் மல்லுக்கூத்தை ஆண்கள் ஆடினர். அது வலிமையான உடலசைவுகளைக் கொண்டது. பண்டக்கூத்தை யாழ்ப்பாணத்தில் பெண்கள் ஆடினர். அது மெல்லசைவுகளைக் கொண்டது.

மாதவியின் பதினொரு வகை ஆடல் களையும் சமகால நிகழ்த்துகைக்கு கொண்டு வரும் செயற்பாடுகள் யாழ். பல்கலைக்கழக ஆடல்துறையிலும், கிழக்குப் பல்கலைக்கழக ஆடல்துறையிலும் மேற்கொள்ளப்பட்டமை ஆடல் தொடர்பான தேடலுக்கு மேலும் இட்டுச் சென்றுள்ளன.

பல்லவர் காலத்தில் முகிழ்ப்பு ஆடல் உயர்நிலை வளர்ச்சியைப் பெற்றிருந்தது. அத்துடன் சிவபக்தியுடன் இறுகப் பிணைக்கப் பட்டு, வழிபாட்டோடு சங்கமித்திருந்தது.

சிவனது ஆடல் கற்சிற்பங்களும், வெண் கலச்சிற்பங்களும் அக்காலத்தில் வடிவமைக் கப்பட்டன. (கி.பி.ஏழாம் நூற்றாண்டு) பாறைக் குடைவுக் கோயில்களும் அக்காலத்தில் நிறுவப் பெற்றன.

தேவாரங்களில் சிவனது ஆடற்கோலங்கள் பலவாறு சித்திரிக்கப்பட்டுள்ளன. ***ஞானசம்பந்தர்*** இலங்கையின் மாதோட்டத்தில் உள்ள சிவனையும் கோணமாமலையமர்ந்த சிவனையும் பாடி யுள்ளமை, சிவவழிபாடு, இலங்கையில் நீட்சியுற்றி ருந்தமைக்குச் சான்றாகும். சிவ வழிபாட்டுடன் இணைந்த ஆடல்மரபும் இலங்கையில் பரவலுற் றிருந்தது.

சிதம்பரம் நடராசர் கோயிற் பொன்னம் பலத்தில் சிவனது ஆனந்தத் தாண்டவம் இடம்பெற்றதாகத் தொன்மங்கள் கூறும். அம்பலத்தானின் ஆடற்கோலங்களைத் தொன் மங்கள் பின்வருமாறு விளக்குகின்றன:

(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வெள்ளி அம்பலமும், இராஜசபையும் அங்கே காலைத்தூக்கி சிவன் ஆடி யமையும் இடம்பெற்றன.

(ஆ) திருவாலங்காடு வாரண்டேஸ்வரர் கோயில் - இரத்தினம்பலம் - அங்கு நிகழ்ந்தது. ஊர்த்துவ தாண்டவம் - சிவன் தமது இடது காலை மிகவுயர்த்தி ஆடியமை.

(இ) திருநெல்வேலி நெல்லையப்பர் திருக் கோயில் - தாமிர அம்பலம் அங்கு சிவன் சிவகாமியுடன் ஆடல் நிகழ்த்தியமை குறிப்பிடப்படுகிறது.

(ஈ) திருக்குற்றாலநாதர் கோயில் சித்திர அம்பலம் - அங்கு, சிவன் குழல்வாய் மொழி யம்மையுடன் ஆடல் நிகழ்த்தியமை கூறப்படுகிறது.

இலங்கையின் சிவன் ஆலயங்களில் இறை வனது ஆடல் திருவுருவங்கள் காணப்படுதல், வழிபாட்டு நிலையில் மட்டுமன்றி ஆடல் நிலையிலும் பொருண்மை கொண்டது. சிவன் வழி இணைந்த ஆடல் இலங்கையின் சிவன் ஆலயங்களிற் பரவலாக இடம்பெறலாயிற்று.

சிவன் ஆடலைப் பிரதிநிதித்துவம் செய்தல், முகிழ்ப்பு ஆடலுக்குரிய தனித்துவமும் சிறப்பு எழுகையுமாயிற்று. பிற்காலத்தில் கலைச் செல்வர் ***ஏ.சுப்பையா*** சிவன் ஆடல்களைச் சிறப்புற அளிக்கை செய்தமை குறிப்பிடத்தக்கது.

முகிழ்ப்பு ஆடலின் தொடக்கத்தில் ஆடல் வல்லான் சிவனுக்கு அரங்க வழிபாடு நிகழ்த்தல் சிறப்பாக இடம்பெறலாயிற்று. அதனைத் தொடர்ந்து சதங்க பூசையும், நிகழ்த்தப்பட்டது.

மக்களியக் கூத்து அளிக்கை தொடக்கத்திலும் வழிபாடு இடம்பெற்றது. அங்கு, சிவனதும் முருகனதும் வழிபாட்டுடன் கிராமியத் தெய்வ வழிபாடுகளும் இடம்பெற்றன.

சோழர் ஆட்சிக் காலத்தில் (11ஆம் - 14ஆம் நூற்றாண்டு) சிவவழிபாடு இலங்கையில் மேலும் நிலைபேறு கொள்ளத்தொடங்கியது. அக் காலத்தில் பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டு அவர்கள் ஆட்சியை முன்னெடுத்தனர்.

***பொலனறுவையிலும்***, ***பூநகரி காரைநகர்***, ***கீரிமலை***, ***வல்வெட்டித்துறை***, ***திருமலை***, ***யாழ்ப் பாணம்***, ***பருத்தித்துறை***, முதலாம் துறை முகப்பட்டினங்களிலும் சிவாலயங்கள் நிறுவப் பட்டன.

சிவாலய வழிபாட்டுடன் இணைந்ததாக முகிழ்ப்பு ஆடலும் நிகழ்த்தப்பட்டது. இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட தளிச்சேரி தேவரடியார் பெண்கள், சிவன் கோயில்களில் வழிபாட்டுடன் இணைந்த ஆடல் நிகழ்த்தினர், இலங்கையில் உள்ளவர்களுக்கும் அவர்கள் முகிழ்ப்பு ஆடலைப் பயிற்றுவித்தனர்.

சோழர் ஆட்சிக்காலம் கலைகளுக்குச் செழிப்புக் காலமாயிற்று.

இலங்கையிலும் அதே நிலைவரம் காணப்பட்டது. கோயில் ஆடலை மேற்கொண்ட தனிச்சேரிப் பெண்களுக்கு நிலமும் பொருளும் அரசரால் வழங்கப்பெற்றன. அரச ஆதரவுடன் ஆடல் ஊக்குவிக்கப்பெற்றது.

சிதம்பரம் நிலத்தைக் காணிக்கையாக்கி வழிபடும் முறைமை அண்மைக்காலம் வரை இலங்கையில் நீடித்து வந்துள்ளது. அவ்வாறு வழங்கப்பெற்ற நிலம், முன்னர் தேவரடியாருக்கு சோழ மன்னரால் கொடுக்கப்பட்டது என்ற செவிவழிச் செய்தி யாழ்ப்பாணத்தில் நிலவி வந்தது.

தேவரடியாருக்குரிய நிலத்தை பணபலம் மிக்கோர் பின்னர் வாங்கிக்கொண்டனர். அந்தச் செயற்பாடு இலங்கையில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் இடம்பெற்றது.

சிதம்பரத்துக்கும், இலங்கைக்கும் உள்ள தொடர்பு ஆறுமுகநாவலராய் மேலும் உறுதி பெற்றது. பள்ளிக்கூடம், அச்சுயந்திரசாலை, முதலியவற்றை ***ஆறுமுகநாவலர்*** சிதம்பரத்தில் நிறுவியமை, இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்பு மேலும் வலுவூட்டு வதாக அமைந்தது.

சோழர் ஆட்சியையும் ஆடலையும் நினைவு படுத்தும் இடநிலையங்கள் இலங்கையிலே காணப்படுகின்றன.

ஆடியபாதம், திருவடிநிழல், முகமாலை, தட்டுவான் கொட்டி, தாவடி, அளவெட்டி (அளவடி) முதலாம் பல இடநிலையங்கள் ஆடல்மரபை நிலைநிறுத்தியவண்ணமுள்ளன.

சோழர்காலத்தில் சமூகவர்க்க வேறுபாடு மேலும் கூர்மையுற்றது. சமூகமேலடுக்கினருக்கே வரன்முறைக்கல்வி வழங்கப்பெற்றது.

தேவரடியாரின் முகிழ்ப்பு ஆடலை மேலும் வலுவான பயில்வுக்குச் சோழ மன்னர் உட் படுத்தினர்.

உழைக்கும் மாந்தர்க்கு, முறைசாரா (Non Formal) வகையில் கல்வி கிடைக்கப்பெற்றது. தாம் மேற்கொள்ளும் தொழில்கள் வாயி லாகவும், கூத்துக்கள் வாயிலாகவும், சடங்குகள் வழியாகவும் அவர்கள் அறிவைத் திரட்டிக் கொண்டனர்.

மகாபாரதம், இராமாயணம் சிலப்பதிகாரம், முதலாம் கதைகளையும், அவை உள்ளடக்கிய அறிவார்ந்த கருத்துக்களையும் கூத்து வழியாகக் கற்றுக் கொண்டனர்.

எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் கூத்து என்ற ஊடகமே அவர்களுக்குரிய கல்விச் சாதனமாக அமைந்தது.

முகிழ்ப்பு ஆடலில் மேலடுக்கினருக்குரிய சிருங்காரச்சுவையும், அதனோடிணைந்த கருத் தாடலும், பாவங்களும், முத்திரைகளும் மிகுதி யாக இடம்பெற்றன.

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின்னர் வலுவான ஆட்சியதிகாரம் நிலை குலைந்தது. ஆயினும் தளிச்சேரி தேவரடியாரே முகிழ்ப்பு ஆடலைச் சிதையவிடாது பாதுகாத்து வந்தனர்.

அரசரால் பாதுகாக்கப்பட்டும் வளர்க்கப் பட்டும் வந்த ஆடற்கலையின் பாதுகாவலராக கிராமங்களில் உள்ள பண்ணையாரும் ஜமீன் தாரும் மேலெழுந்தனர். தேவரடியார் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளடக்கப்பட்டனர்.

படிப்படியாக அந்தப் பெண்களின் வாழ்க்கை நிலை மேலாதிக்கத்தின் பணபலத்தால் சிதைவும் சீர்குலைவும் பெற்றது.

தேவரடியார் ஆடல் சதிர் (அதன் பொருள் அழகு) என்ற பெயரால் அழைக்கப்படலாயிற்று. அதீத வறுமையிலும் தேவரடியார்கள் தமது ஒழுக்கத்தையும் மாண்பையும் நிலை நிறுத்தி வந்தனர்.

பணபலமும் ஆண்மேலாதிக்கமும் அவர்களின் மாண்பைச் சிதைக்க முயன்றன. பிற்காலத்தில் அவ்வாறான சிதைப்புக்கு எதிரான போராட்டத்தை தேவரடியார் மரபில் வந்த ***மூவலூர் இராமாமிர்தம்*** முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

காலவோட்டத்தில் இலங்கை காலனித்துவ ஆட்சிக்கு உட்படலாயிற்று. கத்தோலிக்க மதப் பரவலில் ஆடலும் கூத்தும் பிறகலைகளும் அழிவுக்கு உள்ளாக்கப்படவில்லை. தமிழர் கலை மரபையும் பண்பாட்டு மரபையும் கத்தோலிக்கர் பாதுகாத்தனர். கூத்துமரபு இன்றும் அவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

புரெட்டெஸ்தாந்து மதத்தினர் தூய்மை வாதத்தை வலியுறுத்தினர். உருவ வழிபாட்டு முறைமையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தேவாலய வளாகத்தில் கலைச் செயற்பாடுகள் இடம்பெறுவதையும் நிராகரிக்கலாம். மதம் பரப்புவதில் தீவிரமான எழுகை அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

சிவவழிபாடும், கிராமியத் தெய்வ வழிபாடும் அவர்கள் ஆட்சியில் மறைவாகவே நிகழ்த்தப்பட்டன. அதேவேளை முகிழ்ப்பு ஆடலும் கூத்தும் கலைஞர்களின் விடாமுயற்சியினால் மறைவாகவே பாதுகாக்கப்பட்டு வந்தன. வாய்மொழியாகப் பாடப்பட்ட கூத்துப் பாடல்களை ஏட்டில் எழுதி வைத்து ***அண்ணாவிமார்*** பாதுகாத்தனர். ஆங்கிலேயராட்சியில் கடும்போக்கு நிகழ்த்தப்படவில்லை. ஆயினும் மதமாற்றம் தொடர்ந்து இடம்பெற்றது.

இங்கிலாந்தில் எழுச்சி கொள்ளத் தொடங்கிய மக்களாட்சிக் கருத்தியலின் வளர்ச்சி இலங்கையிலும் சுவறத் தொடங்கியது.

ஆங்கிலேயர் ஆட்சியில் ஆடற்கலையில் இருமைநிலை வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. ஒருபுறம் கலைப்பெறுமானம்மிக்க முகிழ்ப்பு ஆடலும், கூத்தும் நிகழ, இன்னொருபுறம் ***“சின்னமேளம்” என்ற மலினமான ஆடலும் வளரத் தொடங்கியது***.

சின்னமேளம் என்பது வர்த்தக நோக்கையும் சுரண்டல் நோக்கையும் அடிப்படையாகக் கொண்டது. பணமுடையோரே அதற்குரிய பாதுகாவலராக இருந்தனர். ஆடற்குழு ‘‘சின்னமேளம் செற்’’ என அழைக்கப்பட்டது. கோயில்களில் அந்த ஆடல் நிகழ்த்தப்பட்டது.

வரன்முறையான ஆடற் பயிற்சியின் இணக்கல் *(Improvisation)* முறையிலும் அந்த ஆடல் நிகழ்த்தப்பட்டு வந்தது. மலினமான திரைப்படப் பாடல்களுக்கு ஆடுமாறும் அவர்கள் பணிக்கப்பட்டனர். ஆண் மேலாதிக்கம் ஆடலில் தொடர்ந்தது.

***ஆங்கிலேயர் ஆட்சியில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்ச்சி இந்து சமய மறுமலர்ச்சி ஆறுமுகநாவலரே*** அதன் முன்னோடியாக மேலெழுந்தார். கோயில்களில் வேதாகம முறையிலான வழிபாடுகளுக்கு வழிவகுத்தார். ஆலயச்சூழல், ஒழுக்கத்தின் உறைவிடமாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி, அறிவு வழங்கலுக்குப் பிரசங்க முறையை முன்னெடுத்தார்.

இந்து சமய சீர்திருத்தவாதிகள் ஆலயங்களில் மிருக பலியிடலை நிறுத்தினர். கோயில் விழாக்களில் சின்னமேளம் ஆடுதலையும் தவிர்க்கச் செய்தனர்.

***இந்திய விடுதலை இயக்க அருட்டலோடு, தேவரடியார் நிகழ்த்திய திருச்சதிர் ஆடலுக்கு “பரத நாட்டியம்” என்ற பெயரை கிருஷ்ணஐயர் சூட்டினார்.*** ஆடை அணிகலன் உள்ளடங்கிய புதிய மாற்றங்களும் ஆடலில் மேற்கொள்ளப்பட்டன. கோயிலில் ஆடப்பெற்ற அந்த ஆடல், பொது அரங்குகளிலும் நிகழ்த்தப்படலாயிற்று. திரைப் படங்களிலும் அது இடம்பெறத் தொடங்கியது.

இலங்கைக் கலைஞர்கள் தமிழகம் சென்று பரதக் கலையைப் பயிலும் எழுநிலை மீண்டும் தோற்றம்பெற்றது.

யாழ்ப்பாணத்து இணுவில் கிராமத்தைச் சேர்ந்த **கே.தவமணிதேவி** என்ற பெண் தமது பன்னிரண்டாவது வயதிலே சென்னைக்குச் சென்று, பரதக் கலையையும் இசையையும் வரன்முறையாகப் பயின்றார்.

அவரது தந்தையார் ***கார்த்திகேசு*** ஒரு வழக்கறிஞர். அவரது தளரா ஊக்கம் தவமணி தேவிக்குக் கிடைத்தது.

தவமணிதேவியின் ஆடல் ஆற்றலைக்கண்ட திரைப்படத்துறையினர் அவரை நடிப்புக்கு வருமாறு வேண்டினர். அவர் பன்னிரண்டு படங்களில் நடித்தார். எம்.ஜி.ஆர். உடன் சேர்ந்தும் நடித்தார்.

இந்தி, மலையாளம், தெலுங்கு முதலாம் படங்களில் நடிப்பதற்கும் அவருக்கு அழைப்புத் தரப்பட்டது. ஆனால் அவற்றை அவர் ஏற்கமறுத்து, இறைவழிபாட்டில் ஈடுபடலானார். பெருங்கோயில்கள் எங்கும் சென்று, தாம் கற்ற இசையாற்றலைப் பயன்படுத்தித் திருமுறைகள் பாடி வழிபடலானார்.

***இலங்கையில் பரதநாட்டிய வளர்ச்சி பற்றிப் பேசுவோரும் எழுதுவோரும் தவமணிதேவியின் இணையிலாப் பங்களிப்பைக் குறிப்பிடாதிருக்கும் பாரிய இடைவெளி இடம்பெற்று வருதல்*** குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ***ஏரம்பநாதர், சுப்பையா, கீதாஞ்சலி நல்லையா, லீலா செல்வராசா, வீரமணி ஐயர்*** முதலாம் பெரும் கலைஞர்கள் தமிழகம் சென்று பரதக் கலையைப் பயின்று வந்தனர். அவர்களால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் அகிலப் பரப்பில் தமது ஆடற்பணியைத் தொடர்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஆடற்பள்ளியை ***இரச நாயகம்*** என்பார் முதன்முதல் ஆரம்பித்தார். தொடர்ந்து கலைச்செல்வர் ***ஏரம்பநாதர் சுப்பையா*** கலாபவனத்தை நிறுவினார். ***கீதாஞ்சலி நல்லையாவும்***, தனித்துவமான ஆடற் கல்லூரியை அமைத்தார். ***இராமநாதன் நுண்கலைக் கழகம் நிறுவப்பட்டமையும் அதனைப் பல்கலைக்கழகம் உள்ளீர்ப்புச் செய்தமையையும் ஆடல் வளர்ச்சிக்கு பெரும்விசையைக் கொடுத்தது.*** இக்கட்டுரை ஆசிரியர் அதன் தலைவராகப் பணியாற்றிய வேளை, ஆடலிலும் இசையிலும், சித்திரம் வடிவமைப்பிலும், பட்டப்படிப்பு ஆரம்பிக்கப் பட்டமை பெருவளர்ச்சியின் முன்னெடுப்பாயிற்று.

பலர் அத்துறைகளில் பட்டம் பெறும் எழுகை தோற்றம் பெற்றுள்ளது. இன்றைய இலங்கையில் நாற்பது வரையிலான ஆடல் கற்பித்தல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. பின்வரும் ஆடல் மரபுகளும் வளர்ந்து வருகின்றன.

(அ) ஏரம்பநாதர் சுப்பையா, சாந்தினி சிவநேசன் மரபு.
(ஆ) கீதாஞ்சலி நல்லையா மரபு.
(இ) லீலா செல்வராசா மரபு
(ஈ) கிருஷாந்தி இரவீந்திரா மரபு
(உ) மேலும் பல மரபுகள் இலங்கையில் உள்ளன.

***பேராசிரியர் சு. வித்தியானந்தன்*** பல்கலைக் கழகத்தில் கூத்துக்கலையை அறிமுகப் படுத்தியமையைத் தொடர்ந்து, கூத்துக்கலை மேலும் எழுச்சி கொள்ளலாயிற்று. ***பேராசிரியர் மௌனகுரு*** அதனை மேலும் செழிப்புடன் முன்னெடுத்து வருவதுடன், ஆற்றல்மிக்க மாணவர் பங்களிப்பையும் நீண்டெழச் செய்து வருகிறார்.

கூத்துக்கலையை வளர்ப்பதில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பணிகள் தனித்துவ மானவை. கூத்துக்கலையும் பரதக் கலையும் சமூக நிலையில் ஒப்பியல் ஆய்வுக்குரியவை. பரதம், சமூகத்தின் மேலெடுக்கினருக்குரிய கலையாகவும் அஸ்தஸ்துக்குறியீடாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சமூகத்தின் அடிநிலை மாந்தரின் வாழ்வோடும் உணர்வுகளோடும் இணைந்த ஆடலாகக் கூத்து உயிர்ப்பு நிலையில் உள்ளது.

❍❍❍

# கவிதை நோக்கி

நீங்கள் எந்த திசையில் பயணிக்கிறீர்கள்
இடது? இல்லை
பின் எந்த திசையில்
தெற்கு நோக்கியா?
இல்லை
வடக்கு... தெற்கு... திசையிலா?
மேற்கு... கிழக்கு... திசைகளிலா?
இல்லை இல்லை

நான் கவிதை நோக்கி செல்கிறேன்

நீ எந்த பாதையில் செல்கிறாய்
நான் எல்லா பாதைகளிலும்
செல்கிறேன்...
சகல வழிகளும்

கவிதையை நோக்கி செல்கின்றன.

**அபிட் அஸாட்:– வங்காள தேசம்**
**சிங்கள மூலம்:– பராக்கிரம கொடிதுவக்கு**
**தமிழ் வடிவம்:– கலாபூஷணம், மாவனல்லை எம். எம் . மன்ஸூர்**

சிறுகதை



ஸ்ரீரஞ்சனி
(கனடா)

# நிலவின் மொழி புரிவதில்லை

கண்விழித்த விக்ரமின் முகத்துக்கு முன், இரண்டு கோடுகளுடன் இருந்த test kitஐ ஊசலாட்டியபடி மலர்ந்து சிரித்தாள் வர்ஷி. "Oh, my god!" என்றவண்ணம் குதித்தெழுந்தான் அவன். எழுந்தவேகத்தில், உணர்ச்சிப் பெருக்குடனான முத்தங்களை அவள் மேல் மழையாகப் பொழிந்தான். அவளின் நரம்பு முனைகள் ஜில்லிட்டன. பரவசமாகிப்போன அவளுக்குள் ஆயிரமாயிரம் பட்டாம்பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன. அவனின் இதயம் சலங்கைகட்டி ஆர்ப்பரித்தது. அந்த மகிழ்வின் உச்சம் மிகுந்த நெகிழ்ச்சியுடனான கலவிக்கு அவர்களை அழைத்தது. முதல் கலவியைவிட இது இத்தனை மகிழ்ச்சியானதாக இருக்கிறதே என அவர்கள் கிறங்கிப்போனார்கள். உள்ளங் காலிலிருந்து உச்சம்தலைவரை அவளுக்குச் சிலிர்த்தது.

"எனக்குள்ள ஒரு உயிர்! நம்பேலாமலிருக்கு. I love you so much... Oh, my darling, we made it happen!" அவனுக்குள் தன்னை அவள் இறுகப் பிணைத்துக்கொண்டாள்.

"சாத்தியமில்லை எண்டார் டொக்டர், ஆனா, நாங்க சாத்தியப்படுத்தியிருக்கிறம்! I am ecstatic! We will celebrate it the whole day!" மீளவும் கலவிக்குத் தயாரானான் அவன்.

அப்போது அவளின் தொலைபேசி சிணுங்கியது. அவர்களோ மீண்டும் மீண்டும் முத்தமிடுவதும், கட்டியணைப்பதுமாகக் கட்டிலில் புரண்டுகொண்டிருந்தார்கள். ஆனால், தொலைபேசியோ ஓய்வதாய் இல்லை. கடைசியில், விக்ரமைத் தனது இடது கையால் அணைத்தபடி, வலது கையால் தொலைபேசியை எட்டியெடுத்தவள், "அப்பா!" என்றாள் குதூகலமாக.

"வர்ஷி, அம்மாக்குச் சூலகத்திலை... கான் சராம்...," சொற்களிடையே இடைவெளி விட்டு அப்பா சொன்னார்.

"என்ன? கான்சரோ?..." அவளின் குரல் அதிர்ந்தது.

"நாலைஞ்சு நாளா சரியான முதுகு வலியில அவதிப்பட்டுக் கொண்டிருந்தா, ஒண்டும் சாப்பிடுறதுமில்லை. என்ன ஏதெண்டு பாப்பமெண்டு ஆஸ்பத்திரிக்குப் போனனாங்க. Ultrasound செய்தவை. அதிலை கான்சரெண்டு காட்டுதாமெண்டு டொக்டர் சொல்றார்," எதற்கும் அழாத அப்பா அழுதார்.

"ஓ, அப்பா... அம்மாட்டைப் போனைக் குடுங்கோ? அம்மா, இண்டைக்கே நான் வெளிக்கிடுறன், ஒண்டுக்கும் யோசிக்காதேயுங்கோ." அம்மாவின் விம்மல்தான் அவளுக்குக் கேட்டது.

"கான்சரா இருக்கலாமெண்டுதானே சொன்னவை. நல்லதை நினைப்பம். கொழும்புக்குக் கூட்டிக்கொண்டுபோய்ச் சோதிச்சுப் பாப்பம்." அவளின் கண்ணீரைத் துடைத்தபடி அவளை அணைத்து ஆறுதல்சொன்னான், விக்ரம்.

✠ ✠ ✠

வருகிறேன் எனச் சொல்லிவிட்டாலும், அதிசயமாகக் கருக்கட்டியிருக்கும் தன் நிலையைப் பற்றி யோசிக்க வேண்டாமா என்ற குழப்பத்திலான திரிசங்கு நிலை அவளை ஒரு கணம் ஸ்தம்பிக்கச் செய்தது. அடுத்த கணம் கண்ணீர் நிறைந்திருந்த கண்களுடனும், கனத்த மனத்துடனும் பயணப்பையை ஆயத்தம் செய்யத் தொடங்கினாள் அவள்.

வாழ்க்கையின் இடுக்குகளுக்குள் ஒளிந்திருந்த விசித்திரங்களின் பாதிப்பிலிருந்து மீளமுடியாத இரண்டும் கெட்டான்நிலையில், அன்றிரவு மெல்பேர்னிலிருந்து இலங்கை நோக்கிப் புறப்படும் விமானத்தில் இரண்டு ரிக்கற்றுக்களைப் பதிவுசெய்து கொண்டான், விக்ரம். பொறுப்பின்கனம் அவன் தோள்களை அழுத்தியது.

சிறிதுசிறிதாக வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கீரை, peppers mushroom கலந்திருந்த பாத்திரத்துக்குள், நான்கு முட்டைகளை உடைத்து ஊற்றினான். பின்னர் அந்தக் கலவையைக் குண்டுத்தோசைச் சட்டியில் ஊற்றிக் குண்டுத்தோசைகள்போலச் செய்தான். வர்ஷிக்குப் பிடித்தமாதிரி நிறையச் சாயமும், இஞ்சியும், ஏலக்காயும் போட்டுத் தயாரித்த பால்த் தேநீருடனும், கிழக்கும் மேற்கும் சந்திக்கும் புள்ளி என வர்ஷி விரும்பிச் சாப்பிடும் அந்த உணவுடனும் அவளிடம் வந்தான் விக்ரம்.

சூட்கேஸ் திறந்தபடியே இருக்க, சட்டை ஒன்றைக் கையில் பிடித்திருந்தபடி சுவரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் வர்ஷி. விக்ரம் அவளின் தோளை மெதுவாகத் தொட்டான். திடுக்கிட்டுத் திரும்பியவள், ''தாங்ஸ் விக்ரம். ஆனா, எனக்குப் பசிக்லேல்லை, நீங்க சாப்பிடுங்கோ.'' என்றாள்.

''வர்ஷி, பிளீஸ், எனக்காண்டி ஒரு வாய் சாப்பிடும்,'' என்றபடி அவளுக்கு அவன் அவற்றை ஊட்டிவிட்டான்.

''நான் சந்தோஷமாயிருக்கிறது கடவுளுக்குப் பொறுக்கேல்லையா?'' சத்தமாக அவள் அழுதாள்.

''எனக்கு நம்பிக்கையிருக்கு, வர்ஷி. கான்சர் எண்டவுடனை முந்திமாரிப் பயப்படத் தேவையில்லை, இந்தக் காலத்திலை அதற்கான சிகிச்சைகள் இருக்கு.''

''இன்னொரு அதிசயம் நடக்கலாமெண்டு நம்புறியளா?'' கண்கள் அகல அவனைப் பார்த்தாள் அவள்.

"Yes! அதோடை அங்கையிருக்கேக்கை virtualஆக வேலைசெய்யக்கூடியதா எல்லாத்தையும் தயார்படுத்திக்கொண்டு போவம். அப்பிடியெண்டால் கனநாள் நிக்கவேண்டி வந்தாலும் உதவியாயிருக்கும்.''

கொரோனா வந்ததன் பின் கிடைத்ததொரு வரப்பிரசாதமான வீட்டிலிருந்தும் வேலை செய்யலாம் என்பதற்கான முன்னேற்பாடுகளில் அன்றையநாள் போனதே தெரியவில்லை. அப்படியே எப்படி யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கினார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. எல்லாமே ஒரு கனவுபோல இருந்தது.

✠ ✠ ✠

விடிந்ததும் விடியாததுமாயிருந்த அந்தப் பொழுதில், தெருநாய்கள் ஒன்றையொன்று துரத்தியபடி ஊளையிட்டுக் கொண்டிருந்தன. தன் வீட்டின் முற்றத்தில் சடைத்திருந்த வேப்ப மரத்திலிருந்து உதிர்ந்திருந்த காய்ந்த இலைகளைப் பக்கத்து வீட்டு அன்ரி சரோ கூட்டி அள்ளிக்கொண்டிருந்தா. வர்ஷியைக் கண்டதும், ''ஓ, வர்ஷியே, நீ வாறாயெண்டு எனக்குத் தெரியாது, எப்படியிருக்கிறாய் பிள்ளை,'' குண்டுகள் தகர்த்திருந்த அந்த வீட்டின் முன்னிருந்த பிய்ந்த வேலிக்குகூடாக ஆச்சரியத்துடன் கேட்டா அன்ரி, ''இருக்கிறன் அன்ரி, நீங்க எப்படியிருக்கிறீங்க, நினைச்சாப்போல ஒழுங்குசெய்த பயணம்தான், பின்னேரம் உங்களிட்டை வாறன்,'' என்றாள் அவள்.

வீட்டுக்குள் காலடிவைத்த வர்ஷிக்கு மனம் திக்கென்றது. அவளின் மனதின் அடியில் பேணிப் பாதுகாத்துக்கொண்டு வந்திருந்த நம்பிக்கைக் கீற்றின் ஒளி மங்கியது. எதிர்பார்த்ததைவிட அதிகமாக அம்மா ஒடிந்துபோயிருந்தா. அவளைக் கண்டதும் எழுந்தோடி வந்து கட்டிக் கொள்ளும் அம்மா, சாய்மனைக் கதிரையிலே இருந்தபடி உயிர்ப்பின்றிச் சிரித்தா. அந்தச் சிரிப்பின் பின்னிருந்த வேதனையை அவவின் முகம் காட்டியது. அவவின் அடிவயிறு வீங்கியிருந்தது.

அப்பா, அம்மாவின் முதுகை மசாஸ் செய்து கொண்டிருந்தார். சூட்கேசைக் கீழே போட்டுவிட்டு, ''அப்பா, விடுங்க, நான் செய்யிறன்,'' என மசாஸ் செய்ய ஆரம்பித்தவளின் கண்ணீர் அம்மாவின் முதுகிலும் பட்டுத் தெறித்தது.

''அம்மா, சலமும் அடிக்கடி போகுதே?'' பயணத்தின்போது, சூலகப் புற்றுநோய் பற்றி அவள் இணையத்தில் நிறைய வாசித்திருந்தாள்

"பிள்ளை, சலரோகமிருந்தா சலம் அடிக்கடி போகும்தானே, ஆனா கான்சராயிருந்தால் என்ன செய்யிறது? அப்பிடி ஏதெணுமெண்டால் நான் உயிரோடை இருக்கமாட்டன்," என்றாள் குரல் தழுதழுக்க.

"அம்மா... நாளைக்கு நாங்க கொழும்புக்குப் போறம், ஸ்பெசலிஸ்ற்மாரைப் பாக்கிறம். அவை சொல்லுறதெல்லாம் செய்கிறம். உங்கடை வருத்தம் மாறும்வரைக்கும் நான் திரும்பிப் போமாட்டன்." அம்மாவின் கண்கள் கசிந்தன. உதடுகள் விம்மின.

"மாமி, தேவையெண்டா இந்தியாவுக்கும் போகலாம், பயப்படாதேயுங்கோ," விக்ரமும் அம்மாவை ஆசுவாசப்படுத்தினான். இருந்தாலும், அம்மாவின் கண்ணீர் நிற்கவில்லை.

"அம்மா, இங்கை என்னைப் பாருங்கோ. ஆறு வருஷமாய் அலைஞ்சம், பாக்காத டொக்டர் இல்லை, செய்யாத சிகிச்சையில்லை. இனிப் பிள்ளை தங்கிறது சாத்தியமில்லை, முதல் நான் போயிடக்கூடாதெண்டும் நேத்தி வைக்கோணும். ரண்டு மூண்டு நாளிலை போவம், என்ன?"

"சரி, உங்கட விருப்பப்படியே செய்வம்."

அமாவாசை இருள் வானத்தை அப்பி யிருந்தது. படுக்கைக்கு வந்த விக்ரம் "கான்சர் பரவுற வருத்தமெல்லே. கொழும்புக்குப் போறதை ஏன் தள்ளிப்போடுவான்?" என்றான்.

"அம்மான்ர நம்பிக்கையை ஏன் கெடுப்பான், ஏதோ நடக்கிறதுதான் நடக்கும்... எங்களுக்குப் பாரமாயிருக்கக்கூடாதெண்டு அம்மா எவ்வளவு கவனமாயிருந்தா. நேரத்தோடை சாப்பிடுறது, நடக்கப் போறதெண்டு தன்னைக் கவனிச்சுக் கொண்ட அவவுக்கு இப்பிடி ஒரு நிலைமை வந்திருக்கே,"

விக்ரம் வர்ஷியின் தலையை ஆதரவுடன் வருடிக்கொடுத்தான். "அதிகமாய்க் கவலைப் பட்டால் எங்கட குட்டியுமெல்லோ கவலைப்படும். பொசிற்றிவ்வாக நினையும்," என்றான். சற்று



வேறை வழிகளைத்தான் பாக்கோணும் எண்டினம். ஆனா, அதிசயம் நடந்திருக்கம்மா. உங்களுக்கு இன்னொரு பேரப்பிள்ளை பிறக்கப் போகுது!"

அம்மாவின் முகம் சட்டென மலர்ந்தது.

"ஆ, அப்படியே! அம்மன் எங்களைக் கைவிடமாட்டா."

"எங்களுக்கு இப்ப நல்ல காலம் அம்மா. உங்களுக்கும் ஒண்டும் நடக்காது."

"அப்ப, நாளைக்குக் கொழும்புக்குப் போ வேண்டாம், அம்மனுக்கு ஒரு அபிஷேகம் செய்யோணும். உன்ர பிள்ளையைப் பாக்கிறதுக்கு நேரத்தில் அவனின் இதமான அணைப்பில் அவள் உறங்கிப்போனாள்.

அடுத்த நாளிலிருந்து நெல்லண்டை அம்மனுக்கு பால் அபிஷேகம், தும்பளை முருகனுக்கு சகஸ்ராம அர்ச்சனை, பருத்தித் துறை ஞானவைரவருக்கு வடை மாலை, வல்லிபுரக் கோவிலில் அன்னதானம் என்று சூழவிருந்த கோவில்களை எல்லாம் அம்மா மெதுமெதுவாகச் சுற்றிவந்தா. ஐந்தாம் நாள் வெளிக்கிட முன்பாக, மாமியைக் கூப்பிட்டு, தான் வரும்வரைக்கும் தென்னைக்கு, வாழைக்கு, தோடைக்கு, பூக்கன்றுகளுக்கெல்லாம் இரண்டு

# நாட்காட்டியை அசைத்தவள்

இளைய அப்துல்லாஹ்
லண்டன்

பச்சை கனகாம்பரம் பூக்களை கொய்தபடி
அம்மாச்சி போனாள்.
காலடித்தடம் நீவி நீவி அவளுக்கான ரேகை
சாத்திரம் பின்தொடர
அடி மணல்புதைந்தொழுக பாதடிப்பாவையாய்
படர்ந்தேகினாள் அவள்.
பூக்களை அவள் தனதான பதின்ம வயதிருந்து
நேசிக்கத்தொடங்கினாள்.
பாம்படத்தின் மீதும் பூக்களை
வைக்க தானாகவே அவள்
அறிந்திருந்தாள்.
பச்சை, மஞ்சள், சிவப்பு ,ஊதா
காட்டுப்பூவின் தரிப்பிடங்களில்
வசிக்க தொடங்கிய ஆதிகாலத்தாயின்
ஒன்பதாவது மகளாய் அவள்.
சர்ப்பத்தின் பூவையும் தனதாக்க
தெரிந்த சாகசக்காரியானாள்.
விண்மீனை தன் சட்டைக்குள்
செருகி அழகு பார்த்தாள் பாம்படத்தாள்.
முடியத்தொடங்கிய பாதையை
நீட்டி நடந்தாள்.
பாதை விரிந்தபடியேயான முடிவிலியில்
ஒருநாள் அதனை தொடவேண்டும்.
தேவதையின் சிறகசைத்து
சொன்ன சேதியையும் உள்வாங்கினாள்
தூதுவர்கள் கடக்க அவளுக்கான
மாலையை அவள் கட்ட தொடங்கினாள்.
கடவுள் சிரித்தார்
பொல்லாத மனிசியென்று போற்றவும்
செய்தார்.
அம்மாச்சி இனி விறகொடிக்க
தயாரானாள்.
தனது சிதையை தானே மும்முரமாய்
மூட்டத்தொடங்கினாள்.
பெண் தேவதை தானாகவே
இறங்கி வருவதை அம்மாச்சி
பார்த்தாள்.
பால்ய காலத்தின் காதலொன்றை
அம்மாச்சி நினைக்கவும்
நொடித்து விட்டுப்போனது வெக்கையின்
அருகு.
இரண்டுதரம் வானத்தை அண்ணார்ந்தாள்.
பரிசாரகரை அழைத்தாள்
உயர் சித்தமாய் தொடர்ந்த
பேய் மனதை உலுக்கினாள்
எல்லாவற்றையும் உதறினாள்
எல்லாம் உதிர்ந்தன.
அம்மாச்சி அம்மாச்சியாகவே அமர்ந்தாள்
எந்த சாட்சியும் அங்கில்லை.

நாளுக்கொரு தடவை தண்ணீர் பாய்ச்சும்படிக் கேட்டுக்கொண்டா.

✠ ✠ ✠

வர்ஷியின் அண்ணா தீபன் குடும்பத்துடன் கொழும்பில் இருந்தான். அங்கு புற்றுநோய் நிபுணர் ஒருவரைச் சந்திப்பதற்கு அவர்களுக்கு இரண்டு வார காலமானது. அம்மாவின் நிலை மெல்ல மெல்ல மோசமாகிக்கொண்டிருந்தது, இருந்தாலும் அந்தச் சிங்கள டொக்டரின் செந்தளிப்பான முகமும், சாந்தமான சிரிப்பும் அம்மாவுக்குப் பிடித்துக்கொண்டன.

தனியார் வைத்தியசாலை ஒன்றில் தன் பரிசோதனைகளை முடிந்த அந்த நிபுணர், கான்சர் சூலகத்திலிருந்து ஈரல்வரை போய்விட்டது, எனக் குண்டைத் தூக்கிப்போட்டார். நான்காம் கட்டத்துக்கு வந்துவிட்டது என்பதால் சூலகத்தை அகற்றுவதில் இனிப் பயனில்லை. கீமோதிரெபி கொடுத்துப் பார்க்கலாம். ஆனால், அதுவும் எவ்வளவுதூரம் பயன்படுமெனத் தெரியவில்லை என்றார். பரவாயில்லை, செய்துபார்ப்போமென முடிவெடுத்த அவர்கள் அம்மாவுக்கு நோயின் தீவிரம் பற்றி எதுவும் தெரியவேண்டாம் என்றும் தீர்மானித்துக் கொண்டனர்.

வெளியில் பௌர்ணமி நிலவு ஒளிவீசிக் கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் நட்சத்திரங்களும் தகதக என்று மின்னிக்கொண்டிருந்தன. சென்ற வருடம் இலங்கைக்கு வந்திருந்தபோது பௌர்ணமி நிலவிலிருந்து அம்மாவுடனும் அப்பாவுடனும் தானும் விக்ரமும் கார்ட்ஸ் விளையாடிக்கொண்டிருந்தது வர்ஷிக்கு நினைவுக்கு வந்து கண்களை நனைத்தது.

கீமோகான்சரை விரைவில் குணமாக்கி விடுவாவென வர்ஷி அம்மாவுக்கு ஆறுதல் சொன்னாலும், அம்மா ஓயாமல் கேள்விகள் கேட்டுக்கொண்டேயிருந்தா.

“ஏன் பிள்ளை எனக்கு ஒரே நித்திரைத் தியக்கமாக இருக்குது?”

“நீங்க சாப்பிட்டால்தானே, சாப்பிடாட்டில் களைப்பாயிருக்கும்தானே.” அவள் விளக்கம் சொன்னாள்.

“உனக்கு ஆசைப்பண்டம் ஏதாவது செய்து தரோணும். கொஞ்சம் இனிப்பா, கொஞ்சம் காரமா..., அதுக்கிடையிலை நான் சுகமாயிட வேணும்” அம்மா கண்ணை மூடிப் பெருமூச்செடுத்தா.

முதலாவது கீமோதிரெபி, மார்ச் 1ம் திகதி, அம்மாவின் திருமண நாளன்று நடந்தது. வழமைபோல் அன்று கோவிலுக்குப் போக முடியாதது, கீமோதிரெபியைவிட அதிகமான வேதனையை அம்மாவுக்குக் கொடுத்தது. கீமோ முடிந்து மூன்றாம்நாள் வயிற்றைப் பிரட்டுகிறது, கைகள் எரிகின்றன, பாதங்களில் ஊசிகுத்துவதுபோல வலியாயிருக்கிறதென அம்மா துடிதுடித்தா. அந்தப் பக்கவிளைவுகள் இரண்டு மூன்று நாள்களில் போய்விடுமென அவள் அம்மாவுக்கு தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தாலும், தன் கண்ணீரை வர்ஷியால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இரண்டாவது கீமோவின்போது பக்க விளைவுகள் மேலும் மோசமாக இருந்தன. கான்சரின் பெருக்கத்துடன் கீமோதிரெபியால் போட்டிபோட முடியவில்லை. நாளடைவில் நடக்கும் சக்தியையும் அம்மா இழந்துபோனா. அவவின் வயிற்றில் தேங்கும் திரவத்தை துவாரம் போட்டு எடுக்கவேண்டியிருந்தது. அதற்காக அன்றிரவு அம்மாவை ஆஸ்பத்திரிக்கு சக்கர நாற்காலியில் கூட்டிச்சென்றார்கள். இப்படியாக ஹொஸ்பிற்றல் பில்லுடன் போட்டி போட்டுக்கொண்டு நோயின் தாக்கமும் அவவில் கூடிக்கொண்டேயிருந்தது.

“மெல்பேர்னுக்குப் போகோணுமெண்டு அடம்பிடிச்சுப் போனாய். பிறகு கலியாணம் நடந்தாப்போலை இனி எங்கை என்னோடை இருக்கப் போறாயெண்டு எனக்குக் கவலையாயிருந்துது. ஆனா, இப்ப அதாலைதான் இப்பிடிச் செலவழிக்கேலுது. எல்லாத்துக்கும் ஏதோவொரு காரணமிருக்குத்தான்,” என்றபடி அம்மா நித்திரையாகிவிட்டா.

எதிர்பாராமல் கொட்டிய பெருமழையும், சுழன்றடித்த காற்றும் வெளியே ஓலமிட்டுக் கொண்டிருந்தன. மழையை ரசிக்கும் வர்ஷிக்கு அந்த மழை சரியான எரிச்சலைத்தான் கொடுத்தது.

அடுத்தநாள் காலையில் தென்னை மரங்கள் சில அவர்களின் யாழ்ப்பாண வீட்டில் சாய்ந்து விழுந்துவிட்ட கதையை தொலைபேசியில் சொன்ன மாமி, அம்மாவுடன் கதைக்கலாமா எனக் கேட்டபோது, அம்மா நித்திரை கொள்கிறா என வர்ஷி அவவுக்குச் சாட்டுச்சொன்னாள்.

முடிவில் கீமோதிரெபி பயனளிக்காததாலும், வேறு சிகிச்சைகளுக்கான தெரிவில்லாததாலும் நோயறிகுறிகளைத் தணிப்பதற்கான மருத்துவரிடம் அம்மாவை ஒப்படைப்பதாக முடிவானது. சில நாள்கள்தான் அம்மாவுக்கு மிஞ்சியுள்ளன என்ற அதிர்ச்சியான செய்தியைக் கூறிய அந்த மருத்துவர், அம்மாவை வீட்டுக்குக் கூட்டிச்செல்லலாம் என்றார்.

வீட்டுக்கு வந்த அம்மாவுக்கு, ஆஸ்பத்திரியில் இல்லாமல் இருப்பது பெரும் ஆறுதலாக இருந்தது. வலி நிவாரணிகளின் செயற்பாடும் உதவியாக இருந்தது. நீண்ட நாள்களின் பின் வர்ஷியின் உதவியுடன் அவவால் கதிரையில் இருக்க முடிந்தது. அன்று மின்சாரம் தடைப்பட்டிருந்ததால் மேசை விளக்கின் அருகில் தீபனின் குடும்பத்தினரும், வர்ஷியும் விக்ரமும் அம்மாவைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். அப்பா அருகிலிருந்த சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தார்.

“உனக்குக் குழந்தை பிறக்கேக்கை ஒத்தாசையாக இல்லாமல் போயிடுவனோ? பிள்ளையைப் பாக்கத்தன்னும் கிடைக்குமோ எண்டெல்லாம் எனக்குப் பயமாயிருக்கு,” அம்மா கலங்கினா.

“உங்களுக்குக் கெதியிலை சுகம் வருமம்மா. சும்மா அதை இதையெல்லாம் யோசிச்சுக் குழம்பாதேயுங்கோ” வர்ஷியும் தீபனும் ஒரே நேரத்தில் கதைத்தனர்.

பின்னர், தன் அறைக்குப் போய் விக்கி விக்கிக் குரலெடுத்து அழுத வர்ஷியை எப்படி ஆற்றுவதென விக்ரமுக்குத் தெரியவில்லை. நிலைமை அவனுக்கு அசௌகரியத்தைக் கொடுத்தது. இரண்டு நாள்களில் அம்மாவுக்கு வலி மீளவும் அதிகரித்தது. தண்ணீர் குடிக்கக்கூட அவவால் முடியவில்லை. ஜேர்மனியில் நர்ஸ் ஆகவிருந்த அம்மாவின் தங்கை நிர்மலாவுக்கு, அம்மாவுக்கு நிலைமை தெரியவேண்டாமென வேண்டுகோளுடன் நிலைமையை அறிவித்து ஆலோசனை கேட்டார்கள்.

வட்ஸ்அப் வீடியோவில் வந்த நிர்மலா அம்மாவைப் பார்த்ததும் "அக்கா! எனக் கத்தியழுதா. கண்கள் உள்ளுக்குப் போய், தோலெல்லாம் இறுகி அம்மாவின் கோலம் அத்தனை மோசமாக இருந்தது. அம்மாவும் சேர்ந்து அழுதா.

"அழாதை அக்கா. நாளைக்குக் காலைமை நான் கோல் பண்ணேக்கே சிரிச்சுச் சிரிச்சுக் கதைக்கிற, பகிடி விடுற பழைய அக்காவை நான் பாக்கோணும். நல்ல மனிசனும் அன்பான பிள்ளையளும், கரிசனைமிக்க மருமக்களும் கிடைத்திருக்கினமெண்டு ஆறுதல்கொள்," என்ற நிர்மலாவுக்கே தான் சொன்னதன் அர்த்தமென்னவெனத் தெரியவில்லை.

"கடவுள் என்னை வாழவிடுறார் இல்லை! நான் ஆருக்கும் எந்தத் துரோகமும் செய்யேல் லையே. நிர்மலா, நீ என்னைக் காப்பாத்த மாட்டியோ?"

அம்மாவின் அழுகையைப் பொறுக்க முடியாத அப்பா இணைப்பைத் துண்டிக்கச் சொன்னார். மிகுந்த ராங்கியுடன் வாழ்ந்த அம்மா, அப்படிக் கெஞ்சியதை வர்ஷியாலும் ஜீரணிக்க முடியவில்லை.

'அக்கா கேட்ட அந்தக் கேள்விக்கு, அந்தப் பரிதாபமான இரங்கலுக்கு அர்த்தம்தான் என்ன? அப்பிடிக் கேட்கிறளவுக்கு அவ்வளவு நிர்கதி யாகவா இருக்கிறா?' குழம்பிய நிர்மலா, கணவர் காணாமலாக்கப்பட்ட நாட்டுக்கு வாழ்க்கையில் போவதில்லை என்ற தீர்மானத்தைக் காற்றோடு கலக்கவிட்டுவிட்டு இலங்கைக்கு வந்திருந்தா. ஆனால், அவ பார்த்ததோ ஜடமாகிப் போன அம்மா வைத்தான். இயல்புகடந்த ஆழ்ந்த உறக்க நிலையின் தொடக்கத்துக்கு போயிருந்த அம்மா வைப் பார்த்து, "ஆர்தான், இந்தச் சொல்லைக் கண்டுபிடிச்சினமோ? புற்றெடுத்த மாரிப் பரவி அக்காவைக் கொண்டுபோயிட்டுதே!" அரற்றினா, நிர்மலா.

✠ ✠ ✠

படுக்கையில் உழன்று கொண்டிருந்தாள் வர்ஷி. புதனும் ஞாயிறும் காலையில் எழுந்தவுடன் அம்மாவை அழைப்பது அவளின் வழமை. மெல்பேர்னுக்கு வந்ததன் பின்பான முதல் புதன்கிழமை, அது. குளித்துவிட்டு வந்த விக்ரம், "வர்ஷி, இண்டைக்கு வேலைக்குப் போகேல்லையா? என்றான். கண்ணீர் நிறைந்த விழிகளுடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள் அவள்.

"வர்ஷி, மாமி கஷ்டப்படாமப் போயிட்டா, உம்மட கடமைகளைச் செய்யமுடிஞ்சிருக்கெண்டு கொஞ்சம் ஆறுதல்படும்."

விக்ரமின் அந்த அன்பான வார்த்தைகள் வர்ஷியைச் சற்று வருடிக் கொடுத்தன. கான்சருடன் மாதக்கணக்காய்ப் போராடுபவர்களின் பரிதாபத் துடன், வாழ்வின் சாபங்களுடன் அலைக் கழிவோரின் நிலைமையுடன், காணாமலாக்கப் பட்ட கணவர்மார்களை எண்ணித் தினமும் துடிக்கும் நிர்மலாச் சித்தி, பொம்மருக்கு பலியான மகனால் வாழ்வில் நிர்கதியாக்கப்பட்ட சரோ அன்ரி போன்றோர் அனுபவிக்கும் வேதனை யுடன் பார்க்கும்போது, அம்மா பெரிதாகக் கஷ்டப் படவில்லத்தான் என நினைத்தபோது ஒரு கணம் அவளுக்குள் அமைதி ஏற்பட்டது.

அம்மாவுடன் சேர்ந்து இறந்துவிட்ட அவளின் ஒரு பகுதி எப்போதுமே வெற்றிடமாகத்தான் இருக்கப்போகின்றது, மீதி வாழ்க்கையை அந்த வெற்றிடத்துடன் வாழ்ந்துதான் ஆக வேண்டுமென்ற யதார்த்தம் அவளுக்குப் புரிந்தது. விக்ரமின் வலக்கையைப் பற்றி அவளின் வயிற்றில் வைத்தவள் தன் வயிற்றை அவனின் குளிர்மையான கையால் ஆதரவாகத் தடவிக்கொடுத்தாள்.

"இன்னும் பத்துக் கிழமையிலை பிள்ளை துடிக்கிறது தெரியுமெல்லோ?" என்றவன் அவளின் வயிற்றில் மென்மையாக முத்தமிட்டான்.

அறையன்னலுக்கூடாக தெரிந்த பிறை நிலவில் அம்மாவின் முகம் அவளுக்குத் தெரிந்தது.

❍❍❍

# பதிப்புத்துறையின் சிறுகாப்பியச் சூளாமணியும்

ஞானம் பாலச்சந்திரன்

பதிப்புத்துறை பேராசிரியர் **சி.வை.தாமோதரம்பிள்ளை** அவர்களின் வாழ்க்கை பற்றியும், ஆளுமைகள் பற்றியும், அவர் தன்னை வழங்கி பதிப்புத்துறைக்கு ஆற்றிய பெரும்பணிகள் பற்றியும் ஏராளமான பதிவுகளும், கட்டுரைகளும், நூல்களும் கடந்த காலத்தில் வெளிவந்துள்ளன. ஓர் இலக்கியத்தை அச்சுவாகனம் ஏற்றி அதன் உயிரைக் காத்தலுடன் அமைதிகாணாமல், அவ்விலக்கியத்தைச் சமூகத்திடம் எடுத்துச்செல்வதற்கு எத்துணையெத்துணை முயற்சிகளை சி.வை.தா. கருத்தூன்றிச் செய்துள்ளார் என்பது நிதானித்து, நோக்கப்பட வேண்டியதொன்றாகும்.

பெருமகனாரின் 'பதிப்புப் பேராசிரியர்' எனும் போர்வைக்குள் அவரின் இத்தகு முயற்சிகள் அமுத்தம்பெறாமல் போய்விடுவதை அவதானிக்கமுடிகிறது.

இந்தப் பின்னணியில் சி.வை.தா. அவர்கள் இலக்கியமொன்றை அச்சுவாகனம் ஏற்றி, அவ்விலக்கியத்துக்குப் புதுரத்தம் பாய்ச்சுவதற்காக மேற்கொண்ட தொடர்முயற்சிகளை அறிமுகப்படுத்தி, ஒளிபாய்ச்சிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இதற்காக தாமோதரம்பிள்ளை அவர்களது சூளாமணி காப்பியம்சார் முயற்சிகளை இங்கு துணைகொண்டுள்ளோம்.



சி.வை. தாமோதரம்பிள்ளை
(1832.9.12 - 1901.1.1)

## 1 சூளாமணிக் காப்பியத்தைப் பதிப்பித்தலுக்கான உந்துதல்கள்

தன் வாழ்நாளில் பெரும்பகுதியை **தொல்காப்பிய**த்தை அச்சுவாகனம் ஏற்றுவதற்காகசி.வை.தா. அர்ப்பணித்துள்ளார், என்பது வெளிப்படை. கி.பி. *1868*ஆம் வருடம் ஆரம்பித்து தொடர்ந்தும் இருபத்தைந்து வருடங்களாக தொல்காப்பியம் பதிப்பு சார்ந்து அவர் இயங்கியுள்ளார்.

தொல்காப்பியத்துக்கு அடுத்து சிறுகாப்பியங்களில் ஒன்றான **சூளாமணி** யுடன் தாமோதரம்பிள்ளை அதிகம் பயணித்துள்ளார் என்பதைக் கணிக்க முடிகிறது.

ஆனால், பிள்ளையின் தொல்காப்பிய பயணத்திலிருந்து சூளாமணிப் பயணம் சற்று வேறுபட்டது. அவ்வேறுபாடுகளை எடுத்துக்காட்டுவதற்கு முன்னதாக, சூளாமணியை தாமோதரம்பிள்ளை பதிப்பிப்பதற்கான உந்துதல்கள் எவையெவை என்பதை முதலில் நோக்குவோம்.

- *1885*களில் **ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணியதேசிகர்** அவர்கள், சூளாமணியை ஓர் அருமையான நூல் என்றும், அது மரணதசை அடைந்துள்ளதாகவும், காப்பியத்தை சி.வை.தா. பதிப்பித்துக் காத்தல் வேண்டும் எனவும் ஆலோசனை கூறியுள்ளார்.
- *1889*ஆம் வருடம்வரை சூளாமணி அச்சில் வந்திருக்கவில்லை.
- சிறுகாப்பியங்களில் ஒன்றான சூளாமணி, **இரண்டாவதாக** நிரற்படுத்தப்பட்டுள்ளதையும் தாமோதரம்பிள்ளை கண்டு கொள்கிறார்.
- பெருங்காப்பியம் சீவகசிந்தாமணிக்கு முன்னதாக சிறுகாப்பியமான சூளாமணி இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என பிள்ளையவர்கள் கருதினார்.
- சி.வை.தா., சூளாமணியை வாசித்தபோது, அது சொற்சுவை, பொருட்சுவை கொண்டுள்ளதையும், பலருக்கும் பரிச்சயமற்ற விருத்தங்களைக் கொண்டிருத்தலையும் அவர் கண்டுகொண்டார்.
- சூளாமணியானது மாணவர்களின் கற்கைக்கு உகந்தது என்பதைக் கணித்து, **சென்னை சர்வகலாசாலை பிரவேஷ பரீட்சைக்கு** உள்ளடக்கல் உத்தமம் என அவர் கருதினார்.

இந்தப் பின்னணியில் தாமோதரம்பிள்ளை அவர்கள், சூளாமணியைப் பதிப்பிக்க வேண்டும் என முடிவுசெய்து, தமது பயணத்தை ஆரம்பிக்கின்றார்.



நூறு பக்கம் அளவு அச்சான பின்பு, தென்தேசப் பிரதி ஒன்று ................ தருவித்தேன். அதற்கும் முதன் மூன்று பிரதிகளுக்கும் அனேக வேறுபாடுகள் இருந்தமையால் இன்னுஞ் சில பிரதி எவ்விடத்தாயினும் இருக்குமாயின் அவற்றையுந் தேடி ஒத்துப் பார்த்துக்கொண்டே அச்சிடுதல் அத்தியாவசியம் என்று உட்கொண்டு, அங்கங்கே சமணர்கள் குடியிருக்கும் இடங்களுக்கெல்லாம் நேரிலே ஒரு சுற்றுப் பிரயாணம் பண்ணிக் காஞ்சிபுரத்தில் மாத்திரம் ஒரு மிகப் பழம் பிரதி கண்டு, அதை வாங்கி வந்தேன். இவ்விரண்டோடும் ஒத்துப் பார்த்ததில் முன்பு அச்சிட்ட அவ்வளவும் மறுபடி திருத்தி அச்சிட வேண்டியதாயிற்று.

**(சூளாமணி பதிப்புரை – 1889)**

## 2 பதிப்புத்துறை முதிர்ச்சியின் ஒரு மைல்கல்லாக சூளாமணி

இரு தசாப்தங்களாகப் பதிப்புத் துறையில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்த பிள்ளையின் பதிப்புத்துறைசார் சிந்தனையிலும் போக்கிலும் **வளர்ச்சி** மாற்றங்கள் வெளிப்பட்ட **பிரதான புள்ளியாக சூளாமணி** பதிப்பு அமைகின்றது.

இதனைப் பேராசிரியர் **பொன். பூலோகசிங்கம்** தெளிவாக அடையாளப் படுத்தியுள்ளார்.

சூளாமணியைப் பதிப்பிக்கும் போது, சந்தர்ப்பத்திற்கும் பொருளுக்கும் இயையுமாறு **பாடல்களில் திருத்தங்களைத் தாமாகவே செய்து** ஆராய்ச்சிப் பதிப்பின் கூறுகளுடன் சூளாமணியை அவர் வெளிக்கொணர்ந்துள்ளார். தான் அவ்வாறு திருத்தங்களைச் செய்ததன் நியாயங்களைப் பதிப்புரையில் பட்டியலிட்டுள்ளார்.

இவ்வாறாக 1889ஆம் வருடம், 2131 பாடல்கள்கொண்ட சூளாமணியின் மூலத்துடன் நீண்டதொரு ஆய்வுப் பதிப்புரையையும் உள்ளடக்கி வெளிக் கொணர்கிறார். இப்பதிப்பு, தாமோதரம் பிள்ளையின் பதிப்புத்துறை பயணத்தில் ஒரு திருப்புமுனையாகும்.

பிள்ளையின் பதிப்புத்துறையின் மைல்கல்லாக அமைந்த **சூளாமணி, அவரை ஒரு வசன இலக்கியப் படைப்பாளியாக உருவாக்குவதற்குத் தொடக்கப் புள்ளியாகவும் அமைந்தது** எனலாம்.

மூலத்தை பதிப்பித்த தாமோதரம் பிள்ளையவர்கள், சூளாமணி காப்பியத்தைத் தமிழ்ச் சமூகத்திடம் எடுத்துச் செல்லும் பயணத்தில் ஈடுபடத் தொடங்குகின்றார்.

இரு தசாப்தங்களுக்கு மேலாகப் பதிப்புத்துறையிலே ஈடுபட்டிருந்த பிள்ளையவர்கள், சூளாமணிப் பதிப்புரையிலே பதிப்புப் பற்றிக் கூறும் கருத்துகளை நோக்கும்போது, அவர் பரிசோதனை செய்துகொண்டிருந்த அகநானூறு வெளிவந்திருப்பின், அ∴து அவரைப் பதிப்பாசிரியராக மட்டுமன்றி ஆராய்ச்சிப் பதிப்பாசிரியராகவும் தமிழுலகிற்கு அறிமுகஞ் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.
பிள்ளையவர்கள் தாம் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய பதிப்புரைகளை வீரசோழியத்திலிருந்து (1881) தொடர்பாக நோக்குமிடத்து, அவர் பதிப்புப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் வளர்ச்சியடைந்துகொண்டே வந்திருப்பதையும் அவ்வளர்ச்சி சுத்தப் பதிப்பாகிய ஆராய்ச்சிப் பதிப்பினை இலக்காகக் கொண்டிருப்பதையும் காணலாம். மரண தசையடையும் நிலையிலிருந்த நூல்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டு பதிப்பாசிரியராக மாறிய பிள்ளை அவர்கள், கலித்தொகைப் (1887) பதிப்பினையொட்டித் தம் பதிப்புகள் சுத்தப் பதிப்புகளாக, ஆராய்ச்சிப் பதிப்புகளாக அமையவேண்டும் என்பதை லட்சியமாக்கிக் கொள்கிறார். சூளாமணி இத்தகைய கருத்து வளர்ச்சியிலே (1889) ஒரு படியினைச் சுட்டுகின்றது.



**பொன். பூலோகசிங்கம்**
**(ஈழத்தறிஞர்களின் பெருமுயற்சிகள்)**

## 3 சூளாமணி காவியத்தை மாணவச் சமூகத்துக்கு எடுத்துச்செல்லல்

*1889ஆம் வருடம் முதற்கொண்டு இயற்கை எய்தும்வரை (1901.1.1) பிள்ளையவர்கள் தொடர்ந்தும் சூளாமணி சார்ந்து இயங்கியுள்ளதைக் காண முடிகின்றது. அதிலும் பிரதானமாக சூளாமணி காப்பியத்தை மாணவர்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்காக அவரால் பல தொடர்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதைக் காணலாம்.*

- **1884–85–சூளாமணியுடன் பிள்ளைக்கு பரிச்சயம் ஏற்படல்:**
  *ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் அவர்கள், பிரதி ஒன்றை வழங்கியுள்ளார்.*
- **1885–89 – சூளாமணி சார்ந்து சமண அறிஞர்களுடன் ஆலோசித்தல்:**
  *இத்தகவலை பதிப்புரையில் கண்டு கொள்ளலாம்.*
- **1885–89 – சூளாமணி பதிப்பித்தலுக்கு பணம் தேடல் :**
  *சூளாமணியை சென்னை சர்வகலா சாலை பிரவேஷ பரீட்சைக்கு நாலைந்து வருடங்கள் உள்ளடக்க முன்மொழிந்து, மூலத்தை அச்சிடுவதற்கு சி.வை.தா. பணம் கோரியுள்ளார்.*
  *சர்வகலாசாலையில் இருந்து சென்னை சம்ஸ்கிருத பரிபாலன சபைக்கு அவரின் வேண்டுகோள் செல்ல, அவர்கள் அச்சிட முன் வந்தனர்.*
- **1889 – சூளாமணி மூலப் பாடல்களை அச்சிடல்:**
  *இருப்பினும் சி.வை.தா.வின் சகோதரர் இளையதம்பிப்பிள்ளையும் வேறு சிலரும் ரங்கூனில் இருந்து அனுப்பிய பணத்தைக் கொண்டு தமது சொந்த முயற்சியில் மூலத்தை அச்சிடுகின்றார். நீண்ட ஆய்வுப் பதிப்புரையுடன் சூளாமணிச் சிறப்புப் பெயரகராதியும் இப்பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.*
- *1889-95-இக்காலப்பகுதியில் சென்னை சர்வகலாசாலை பிரதம பரீட்சைக்கு சூளாமணியின் முதல் மூன்று சருக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதைக் கணிக்க முடிகின்றது.*
- **1895 – முதல் மூன்று சருக்கங்களும் குறிப்புரையும் வெளியிடல்:**
  *மாணவர்கள் புரிந்துகொள்வதற்காக மூலப் பதிப்பில் உள்ளடக்கப்படாத குறிப்புரை இப்பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. முந்தைய பதிப்பில் இருந்த நீண்ட ஆய்வுப் பதிப்புரை நீக்கப்பட்டு மாணவர்களுக்கு உரிய வகையில் காப்பியங்கள் சார்ந்து பதிப்புரையானது சுருக்கப்பட்டுள்ளது.*
- *1895 - 98 - அம்பிகைபாக உபாத்தியாயரைக் கொண்டு மாணவர்களுக்காக சூளாமணியை வசனவடிவத்தில் எழுதி, சென்னை சர்வகலாசங்கத்திற்கு தாமோதரம்பிள்ளை அனுப்பினார். அவர்கள் அவ்வசன வடிவத்தை நிராகரித்து விட்டனர்.*
- **1897 – 98 – வசன சூளாமணியை பத்திரிகையில் எழுதல்:**
  *அம்பிகைபாக உபாத்தியாயரின் வசன வடிவத்தில் இருந்த கோட்பாட்டு குறைபாடுகளை நீக்கி, மொழிகளையும் மாற்றி மஹாராணி பத்திரிகையில் பாகம் பாகமாக பிள்ளை எழுதினார்.*
- **1898 – வசன சூளாமணி முதலாம் பதிப்பு:**
  *மஹாராணி பத்திரிகையில் வெளிவந்த பின்னர் சி.வை.தா.வின் வசனநடையை மெச்சி, மேலும் மெருகூட்டுமாறு பலரும் கூறினர். இதன்படி மேலும் மாற்றங்களுடன் வசன சூளாமணி அச்சில் வெளிவந்தது. பதிப்புரை நீக்கப்பட்டு வசன சூளாமணியின் பின்புலத்தை விளக்கும் புறவுரை உள்ளடக்கப்பட்டுள்ளது.*
- **1900 – வசன சூளாமணி, இரண்டாம் பதிப்பு:**
  *அட்டைப் படத்தில் மாற்றங்கள்செய்யப்பட்டுஇரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது.*



**சி.வை.தா. சிலை, சிறுப்பிட்டி.**




1895 – குறிப்புரையின் ஒரு பகுதி



மஞ்சுடைமலையின்வல்லி தொடரவான்வ ணங்கநின்ற, வஞ்சுடர்க்கடவுட்காத்தவருங்குல மலரத்தோன்றி, வெஞ்சுட லெஃகமொன்றின் வேந்துகண்ணகற்றிநின்ற, செஞ்சுடர் முடியி னாய்நின்கோலிதுசெல்கவென்றார். (௩௨)

அஞ்சுடர்க் கடவுளென்றது இக்ஷுவாகுவை; அருங்குலமென்றது வாகுவலி வமிசத்தை. காத்தல் ஈண்டு வளர்த்தலைக் கருதியது, இக்ஷுவாகுவை வளர்த்துப் போற்றிய வமிசமாதலின். இக்ஷுவாகு பேருந் தவத்தியென்றும் அன்னோன் நெடுங்காலம் நிலைபெயராது தவஞ்செய்துழி அவன் தேகத்தைப் புற்று மூடியும் கொடிகள் சுற்றிப் படர்ந்தும் இருந் தனவென்றும் அவன் தவஞ்செய்த மலையில் அவனது தவப்பெருமையைக்கண்டு வானவர்கள் வந்துவணங்கி னின்றார்களென்றும் புராணக்கதை.

வேந்து கண்ணகற்றியென்பதற்கு மாற்றரசரு டைய பெருமையை அகற்றியென்க. கண்–பெரு மை. அரசு என்றாற்போல வேந்து என்பதை இறை மைப் பொருளிற் கொண்டு தனது இராச்சியத்தை இடமகலச்செய்தெனினுமாம். கண்–இடம்.

## 4 குறிப்புரைப் பதிப்பு

1895ஆம் வருடம், முதல் மூன்று சருக்கத்திற்காக எழுதிய குறிப்புரையில் 120 பாடல்கள் உள்ளன. இவற்றில் பல அருஞ்சொற்களுக்கானப் பொருள்களும் சில பாடல்களுக்கான விரிவான குறிப்புரை விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இது முற்றுமுழுதாக பரீட்சைக்குத் தயார் செய்ய உதவும் நோக்கில் எழுதி பதிப்பிக்கப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

இவ்வாறாக சி.வை.தா. அவர்கள் மாணவர்களிடையே சூளாமணியில் ஏற்படுத்திய நெருக்கம், அவர்கள் மத்தியில் மேலும் சூளாமணி காப்பியத்தை அறிந்து கொள்ளும் அவாவை துளிர்விடச் செய்துள்ளது எனலாம். **அது வசன சூளாமணி எனும் சிந்தனைக்கு வித்திட்டுள்ளதாகக் கருதலாம்.**

# சூளாமணி

## 01 நாட்டுச் சருக்கம்

**- 29 பாடல்கள்**

பரத கண்டத்தில் **சுரமை** எனும் நாடு சிறந்திருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானில வளங்களும் சுரமை நாட்டில் நிறைந்து காணப்பெற்றன.



## 02 நகரச் சருக்கம்

**- 34 பாடல்கள்**

**சுரமை** நாட்டிலேயுள்ள **போதனமா** நகரை **பயாபதி** எனும் அரசன் ஆட்சி செய்தான். மன்னனின் மனைவிமாரில் **மிகாபதி தேவியும்** அவளின் சகோதரியான **சசிதேவியும்** பிரதானமானோர்.



## 03 குமாரகாலச் சருக்கம்

**- 49 பாடல்கள்**

மிகாபதிதேவிக்கு **விசயன்** எனும் மகனும், சசிதேவிக்கு **திவிட்டன்** எனும் மகனும் பிறந்தனர். ஓர் நாள் இரவு 'யானை ஒன்று வானிலிருந்து இறங்கி, தன் இளைய மகன் திவிட்டனுக்கு வெண்தாமரை மலரை அணிவிப்பதாக' அரசன் பயாபதி **கனவு** கண்டான். இதன்பொருள் 'விஞ்சை நாட்டு அரசன் தன் மகளை திவிட்டனுக்கு வாழ்க்கைத் துணையாக்குவான்' என ஒரு **சோதிடன்** அரசனுக்குக் கூறினான். இதன்படி விஞ்சை நாட்டிலிருந்து திருமணச் செய்தி கொண்டுவரும் தூதனை எதிர்பார்த்து பயாபதி மன்னன் காத்திருந்தான்.

## 04 இரதநூபுரச் சருக்கம்

**- 120 பாடல்கள்**



விஞ்சை நாட்டின் தலைநகரான **இரதநூபுர சக்கரவாளத்தில் சுவலனசடி** எனும் அரசன் ஆட்சி செய்தான். மனைவி **வாயுவேகைக்கு அருக்ககீர்த்தி** எனும் மகனும், **சுயம்பிரபை** எனும் மகளும் பிறந்தனர். ஒரு வசந்த காலத்தில் **அருக்கத் தேவனின்** கோயிலையடைந்து சமண **உபதேசம்** கேட்டனர். உபதேசத்தின் தாக்கத்தினால் மகள் சுயம்பிரபை, பல நாட்கள் உணவருந்தாமல் நோன்பை நோற்றாள். **நோன்பு** முடிவடைந்தபின் சுயம்பிரபையின் திருமணம் பற்றி சுவலனசடி அரசன் மந்திரிகளுடன் ஆலோசனை செய்தான்.

## 05 மந்திரசாலைச் சருக்கம்

**- 192 பாடல்கள்**



சுவலனசடி அரசன் மந்திரிகளுடன் ஆலோசனை செய்தபின்னர் நிமித்திகனின் அறிவுரையின்படி தன்மகள் **சுயம்பிரபைக்கு திவிட்டனை** மணம் முடிக்க **போதனமா நகருக்கு வாயுவேகையின்** சகோதரனான **மரீசி** என்பவனை தூது அனுப்பினான்.

## 06 தூதுவிடுச் சருக்கம்

**- 142 பாடல்கள்**



பயாபதி மன்னன், **சுவலனசடி மன்னனின்** திருமணம் பற்றிய திருமுகம் கண்டு மகிழ்ந்து கருத்துக்கு உடன்பட்டான். தூது கொணர்ந்த **மரீசி,** மகிழ்வுடன் **இரதநூபுரம்** திரும்பினான்.

# கதைச்சுருக்கம்

## 07 சீயவதைச் சருக்கம்

**- 254 பாடல்கள்**

நிமித்தகனின் கணிப்புக்கு அமைய திருமணத்திற்கு முன்னர் திவிட்டன், சிங்கம் ஒன்றை கொல்லல்வேண்டும். ஆகவே விஞ்சை நாட்டின் அமைச்சர்கள், **அரிகேதுவை** சிங்க உருவெடுத்து திவிட்டனுடன் போர் செய்யுமாறு கோரினர். போரின்போது சிங்க உருவெடுத்த அரிகேது சிங்கங்கள் வாழும்குகைக்குள் நுழைய, அங்குள்ள சிங்கம் ஒன்று சினம்கொண்டு திவிட்டனுடன் போருக்கு வந்தது. திவிட்டன் சிங்கத்தின் வாயைப் பிளந்து அதனைக் கொன்றான்.



## 08 கல்யாணச் சருக்கம்

**- 304 பாடல்கள்**



போதனமா நகரில் சுயம்பிரபைக்கும் திவிட்டனுக்கும் இனிதே திருமணம் நடந்தது.

## 10 சுயம்வரச் சருக்கம்

**- 286 பாடல்கள்**

திவிட்டனுக்கும் சுயம்பிரபைக்கும் **விஜயன்** எனும் புதல்வனும் **ஜோதிமாலை** எனும் புதல்வியும் பிறந்தனர். இதே காலங்களில் சுயம்பிரபையின் சகோதரனான **அருக்ககீர்த்திக்கு அமிர்தசேனன்** எனும் மகனும், **சுதாரை** எனும் மகளும் பிறந்தனர். சுயம்வரங்களின்போது ஜோதிமாலை, அமிர்தசேனனுக்கும், சுதாரை விஜயனுக்கும் மாலையிட்டனர். திருமணங்கள் இனிதே நடைபெற்றன.



## 09 அரசியற் சருக்கம்

**- 424 பாடல்கள்**



திருமணம் பற்றி அறிந்து கோபம் கொண்டு போர் தொடுத்த **அச்சுவக்கீரீவனை** திவிட்டன் கொன்றான். பின்னர் திக்விஜயம் மேற்கொண்டு பட்டாபிஷேகம் செய்துகொண்டு அரசாட்சி செய்தான். **சக்கராயுதம்** பயன்படுத்தல், **கருட வாகனம், மலையைத் தூக்குதல்** போன்ற கிருஷ்ண அவதாரத்தை ஒத்த நிகழ்வுகளும் திவிட்டனின் வாழ்க்கையில் நடைபெற்றன.

## 12 முத்திச் சருக்கம்

**- 62 பாடல்கள்**

**பயாபதி**, சமண உபதேசங்களை நாட்டு மக்களுக்குக் கூறினான். தன்னுடைய புலன்களை அடக்கி முத்தி நோக்கி தவத்தில் நின்றான். இவ்வுலகிற்றே ஒரு பெரும் சூளாமணியாக விளங்கினான்.



## 11 துறவுச் சருக்கம்

**- 229 பாடல்கள்**



மகன் திவிட்டன் அரசனாகவும், பேரன் விஜயன் இளவரசனாகவும் ஆட்சிசெய்யும் காலத்தில், சமண உபதேசங்களை பயாபதி கேட்டான். 'வீடுபேற்றை அடைய விரைந்து தவம் செய்வேன்' என துறவறம் கொண்டான்.

**சூளாமணி சார்ந்து சி.வை.தா. வெளியிட்ட நூல்கள்**



உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.
இரண்டாவது காவியம்.
தோலாமொழித்தேவர்
இயற்றியருளிய
சூளாமணி.
இஃது
யாழ்ப்பாணம்
சி. வை. தாமோதரம்பிள்ளையால்
பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து
இலங்கையிலிருக்கும்
சில தமிழ்ப்பிரபுக்களது
காருண்யதிரவியோபகாரசகாயத்தினுல்
சென்னபட்டணம்:
வித்தியாநுபாலனயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
விரோதிஞூ கார்த்திகைமீ.
இதன்விலை ரூபா-கஉ.
(Copyright Registered.)
1889.



தோலாமொழித்தேவர்
இயற்றிய
சூளாமணி
கலிகுத்தாசர்வகலாசங்கத்துப் பிரதமகலாபரீக்ஷைக்கு
நியமிக்கப்பட்ட
முதல் மூன்று சருக்கமும்
அவற்றின் குறிப்புரையும்.
யாழ்ப்பாணம்
சி. வை. தாமோதரம்பிள்ளையால்
பதிப்பிக்கப்பட்டது.
MADRAS:
PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY.
1895.



சிவமயம்.
தோலாமொழித்தேவர்
இயற்றிய
சூளாமணிக்காவியத்தை
மாணுக்கர் எளிதிற் கற்றுணரும்படி
கத்தியரூபகமாகச் செய்த
திவிட்டகுமாரன்கதை
அல்லது
வசனசூளாமணி.
"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."—குறள்.
ரூவ் பகதூர்
சி. வை. தாமோதரம்பிள்ளை
பதிப்பு.
PRINTED AT THE V. N. JUBILEE PRESS,
BY A. VAJRAVELU PILLAY.
1898
சென்னபட்டணம்
விளம்பிஞூ ஆவணிமீ.
All Rights Reserved.



உ
சிவமயம்
தோலாமொழித்தேவர்
அருளிச்செய்த
சூளாமணிக்காவியத்தை
மாணுக்கர் எளிதிற் கற்றுணரும்படி
ரூவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை
இயற்றிய
வசனசூளாமணி
அல்லது
திவிட்டகுமாரன் கதை.
"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."—குறள்.
இரண்டாம் பதிப்பு.
Madras:
PRINTED BY THOMPSON AND CO.,
AT THE "MINERVA" PRESS, POPHAM'S BROADWAY.
1900.
சென்னபட்டணம்.
விகாரிஞூ தைமீ
All Rights Reserved.




**சி.வை.தா.வின் ஞாபகார்த்த முத்திரை 1983**




**வசன சூளாமணியை மாதாமாதம் வெளியிட்ட மஹாராணி பத்திரிகை**

## 5 வசன சூளாமணி

*1898ஆம் வருடம், மாணவர்கள் எளிதில் கற்றுணரும் நோக்கில் வெளியிடப்பட்ட வசன சூளாமணியில் பல தனித்துவமான கூறு களைக் கண்டுகொள்ளலாம். இவை யாவும் காப்பியத்தைத் தமிழ் சமுகத்தில் நிலைபெறச் செய்வதற்கான முயற்சிகளாகக் கணிக்கலாம்.*

- *பன்னிரு சருக்கங்களில் 2131 பாடல் களில் அமைந்த சூளாமணிக் காப்பியத் தின் **கதையைச் சுருக்கி** 162 பக்கங்களில் வசன சூளாமணியாகத் தந்துள்ளார்.*
- *வசன வடிவத்தில் 63 பாடல்களைக் கொண்ட நாட்டுச் சருக்கமும் நகரச் சருக்கமும் மாணவர்களுக்குச் சலிப்பு தட்டும் எனும் நோக்கில் கதையினை **மூன் றாவது சருக்கமான குமாரகாலச் சருக்கத்தில் தொடங்குகின்றார்.***

  *ஆனாலும் முதலிரு சருக்கங்களின் பிர தான விடயங்களை வசனநடை கதையில் உள்ளடக்கத் தவறவில்லை.*
- *சூளாமணி காவியத்தின் வசன வடிவத் திற்கு **திவிட்டகுமாரன் கதை** எனும் அடை யாளத்தைக் கொடுத்துள்ளார்.*
- *கதையோட்டத்துக்கு இலக்கியச் சுவை யூட்ட ஆங்காங்கு மூலநூலிலுள்ள பல **சுவையான செய்யுள்களை இடையிடையே உள் ளடக்கியுள்ளார்.***
- *சில இடங்களில் முழு பாடலையும் உள்ளடக்காமல் **பாடலின் பகுதிகளை** (இரு வரிகளை) **கதையின் வசனப் பகுதியின் தொடர்ச்சியாக** உள்ளடக்கியுள்ளார்.*
- *தெரிந்தெடுத்த பாடல்களை சுவைபட விரித்து எழுதியுள்ளார். துறவுச் சருக்கத் தில் வரும் ஓர் உதாரணம் காண்போம் :*

***ஆனை துரப்ப வரவுறை யாழ்குழி***
***நானவீர் பற்றுபு நாலு மொருவனோர்***
***தேனி னழிதுளி நக்குந் திறத்தது***
***மானுட இன்ப மதித்தனை கொண்ணீ (மூலம்)***

பிள்ளையின். வசன சூளாமணி இவ்வாறுள்ளது :–
"அம்மனிதர் அனுபவிக்கும் இன்பமானது, ஒரு வனை ஒரு மதயானை துரத்த, அவன் ஓடிவந்து ஓர் பாழங் கிணற்றில் மறைய, அக்கூபத்தினுட் பாம்பு வதிய, வெளியே ஆம்பலும் நிற்க, இரண்ட னுக்கும் நடுவே அவன் ஒரு புல்லைப் பற்றித் தொங்கும்போது அப்புல்லை எலி அறுக்க, இதன் நடுவில் அவன் தனக்குமேல் இருக்குந் தேன் கூண்டின்று ஒழுகும் மதுவில் ஒரேயோரு துளியை நாக்கினால் நக்கினாற் போலும்."


அதுபோலத் தந்தைதாயாரும் தம்மகளுக்கு அவளுக்கேற்ற சௌந்தரியமுள்ள ஒரு கணவனை விவாகஞ்செய்து வைத்தால் அக்குடும்பஞ் சிறப்புற்று வாழுமென்று நினைத்து, இன்னும்

அந்தணரொழுக்கமு மரசர்வாழ்க்கையும்
மந்திரமில்லையேன் மலருமாண்பில

என்றிருத்தலால் யாமும் இதனை மந்திரிமாரோடு ஆலோசித்தலே அத்தியாவசியகமெனக் கருதிக், குற்றேவலரைநோக்கி நஞ்சொல்லேருழவரை அழைத்து வாருங்களென்று கட்டளையிட்டான்.

**முழு பாடலையும் உள்ளடக்காமல் பாடலின் பகுதிகளை கதை வசனப் பகுதியின் தொடர்ச்சியாக உள்ளடக்கியிருக்கும் நுட்பம்.**

## 6 தலைப்பில் மாற்றங்கள்

சூளாமணியை **இரண்டாவது** சிறு காப்பியம் என 1889ஆம் வருடம் அட்டைப் படத்தில் அடையாளப்படுத்தியவர், அதன்பின்னர் இரண்டாவது என்னும் அடையாளத்தை அட்டைப்படங்களில் தவிர்த்துக்கொள்கிறார். மேலும் 1898இல் ***திவிட்டகுமாரன் கதை*** அல்லது ***வசன சூளாமணி*** என அடையாளப்படுத்தியவர், பிற்காலப் பதிப்பில் இந்த **ஒழுங்கை** வசன சூளாமணி அல்லது திவிட்டகுமாரன் கதை என ***மாற்றியமைக்கிறார்.***

இவையாவும் ஆய்வுப் பார்வை, முறையான அடையாளம் என்பனவற்றைத் தாண்டி, இலக்கியம் சமூகத்திற்குச் சென்றடைவதற்கான முயற்சிகளாகக் கருதலாம்.

1889ஆம் வருடம் மூலப் பதிப்பின் அட்டைப்படத்தில் குறிப்பிட்ட 'இரண்டாவது' காவியம் எனும் அடையாளம், பின்காலத்தில் தவிர்க்கப்பட்டுள்ளதைக் காணலாம்



இரண்டாவது காவியம்.

தோலாமொழித்தேவர்

இயற்றியருளிய

சூளாமணி.





தோலாமொழித்தேவர்

இயற்றிய

சூளாமணிக்காவியத்தை

மாணுக்கர் எளிதிற் கற்றுணரும்படி

கத்தியரூபகமாகச் செய்த

திவிட்டகுமாரன்கதை

அல்லது

வசனசூளாமணி.

சூளாமணியை கத்தியரூபமாகச் (வசனம்) செய்து அதன் முதலாம் பதிப்பில் (1898) 'திவிட்டகுமாரன் கதை' எனும் பெயர் சி.வை.தா.வினால் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்ததாக 'வசன சூளாமணி' எனவும் தரப்பட்டுள்ளது.



தோலாமொழித்தேவர்

அருளிச்செய்த

சூளாமணிக் காவியத்தை

மாணுக்கர் எளிதிற் கற்றுணரும்படி

முவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை

இயற்றிய

வசன சூளாமணி

அல்லது

திவிட்டகுமாரன் கதை.

முதலாம் பதிப்பில் (1898) கொடுக்கப்பட்ட 'திவிட்டகுமாரன் கதை' எனும் பெயரானது பெரிதும் நெருக்கமும் பிரபல்யமும் அடையவில்லை போலும். அதன் காரணமாக இரண்டாம் பதிப்பில் (1900) 'வசன சூளாமணி' என்பதை முதலாவதாகவும் அதற்கு அடுத்து 'திவிட்டகுமாரன் கதை' என்றும் ஒழுங்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் முதலாம் பதிப்பிலிருந்த 'கத்தியரூபம்' எனும் சொல் 'இயற்றிய' எனவும் மாற்றப்பட்டுள்ளது.

## 7 சிறுகாப்பியங்கள் சார்ந்த தெளிவு

சூளாமணி ஒரு சிறுகாப்பியம் எனும் தெளிவு, *1889ஆம்* வருடம் பிள்ளைக்கு இருந்தாலும் **ஐஞ்சிறுகாப்பியங்கள் எவை எனும் தெளிவு அவருக்கு இருக்கவில்லை.** இதனை அவரின் பதிப்புரையில் கண்டு கொள்ளலாம்.

*1885ஆம்* வருடம் சிறுகாப்பியங்கள் ஐந்தின் பெயர்களை, உதயண காவியம் முதற்கொண்டு தந்து, சிலர் நாககுமார காவியத்தை தவிர்த்து மேருமந்தர புராணத்தை உள்ளடக்குவாரும் உளர், எனக் குறிப்பிட்டுள்ளார். அவரின் பதிப்புரைகளில் முதன்முறையாக சிறுகாப்பியங்களைப் பட்டியலிடுவதை இங்கு காணலாம். இருப்பினும் பட்டியலை அறுதியிட்டு அவரால் கூறமுடியவில்லை. ஆனால், ***முன்னை யதிலும் ஒப்பிடுகையில் சிறு காப்பியங்கள் சார்ந்த தெளிவினை அவர் பெற்றுள்ளதைக் காணலாம்.***

*1898ஆம்* வருட வசன சூளாமணியில், நீலகேசி தொடங்கி சூளாமணி, உதயணன் கதை, நாககுமார காவியம், யசோதர காவியம் ஆகிய **ஐந்துமே சிறுகாப்பியங்கள் என உறுதிபடக் கூறுகின்றார்.** இங்கு தரப்பட்ட வரிசைக்கிரமமானது *1885இல்* தரப்பட்டதிலிருந்து மாறுபட்டுள்ளதைக் காணலாம்.

இக்குறிப்புகள் யாவும் சூளாமணியுடனும் சிறுகாப்பியங்களுடனும் சி.வை.தா. தொடர்ந்தும் பயணித்துள்ளார் என்பதையும், தொடர்ந்தும் தகவல்களைத் திரட்டியுள்ளார் என்பதையும், தமது தெளிவினை காலத்துக்குக்காலம் சமூகத்துக்கு எடுத்துச் சொல்லி வந்துள்ளார் என்பதையம் எடுத்துக் காட்டுகின்றன.

பிள்ளையின் இவ்வாய்வுச் செயன்முறை மெய்ச்சுதலுக்குரியதுடன், காப்பிய உலகில் சூடாமணிக்குரிய இடத்தினை உறுதிப் படுத்தியுள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

**1889**

சூளாமணி இரண்டாவது காவியம் என அதன் பிரதிகளில் இருக்கும் குறியீட்டினாற் தெரியவருகின்றது. முதலாவது காவியம் எதுவென்றும் மற்றைய காவியங்களின் வரிசைக்கிரமம் இன்னதென்றும் விளங்கவில்லை. ஆயிரத்து நீலகேசி என் கைக்கு அகப்படவில்லை. ஆயிரத்து நானூற்றுச் சொச்சஞ் செய்யுளுள்ள மேருமந்தர புராணத்தில் முதற் பாகமும், யசோதர காவியமுங் காஞ்சிபுரத்திலிருந்த ஸ்ரீ பாகுபலி நயினரால் அச்சிடப்பட்டன.

**1895**

சிறுகாவியம் ஐந்து. அவை உதயண காவியம், சூளாமணி, நீலகேசி, நாககுமார காவியம், யசோதர காவியம் எனச் சிலர் சொல்லினும் அதற்கு நல்ல ஆதாரம் காணோம். நாககுமார காவியத்தை ஒழித்து மேருமந்தர புராணத்தைச் சேர்ப்பாரும் உளர்.

**1898**

தமிழிலே சிறந்த இலக்கியங்கள் என நிலைபெற்றன சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி எனும் பெருங்காப்பியங்கள் ஐந்தும், நீலகேசி, சூளாமணி, உதயணன் கதை, நாககுமார காவியம், யசோதர காவியம் என்னுஞ் சிறுகாப்பியங்கள் ஐந்துமே.



## 8 தொகுப்புரை

சூளாமணி சார்ந்த பிள்ளையின் தொடர் முயற்சிகளைக் கூர்ந்து நோக்கும்போது ஆய்வுலகத்தினால் **அதிகம் கண்டுகொள்ளப்படாத அவரின் பணிகளும் சிந்தனைப் பரிணாமப் போக்குகளும் வெளிப்படுவதை**க் கண்டுகொள்ளலாம்.

சூளாமணி பிரதிகளைத் தேடல், காவியத்தைக் கற்றல், பாடல்களை ஒப்பு நோக்கல், பாடல்களைத் திருத்துதல், சமணர்களுடன் கலந்தாலோசித்து விடயங்களை உறுதிப்படுத்தல், மூலத்தை அச்சிடல், சிறப்புப் பெயரகராதி உருவாக்கி உள்ளடக்கல், அருஞ் சொற்களுக்கு பொருள் குறிப்பிடல், மாணவப் பரீட்சைக்குச் சூளாமணியை உள்ளடக்க முயற்சிகள் மேற்கொள்ளல், சருக்கங்களுக்குக் குறிப்புரை எழுதல், அம்பிகைபாகரைக் கொண்டு சூளாமணியை வசன ரூபத்தில் எழுதுவித்தல், அந்த வசன ரூபத்தை சர்வகலாசாலைக்கு அனுப்பி வைத்தல், வசன ரூபத்தை தாம் மேம்படுத்தி மஹாராணி பத்திரிகையில் தொடராக எழுதல், மஹாராணி பத்திரிகையில் வெளியாகிய வசன ரூபத்தை மேலும் மேம்படுத்தி திவிட்டகுமாரன் கதையாக வெளியிடல், அதன் இரண்டாம் பதிப்பை வெளிக்கொணரல், ஐஞ்சிறு காப்பியங்களில் சூளாமணியின் இடத்தை உறுதிப்படுத்தல் என சூளாமணிசார் சிந்தனைகளும் முயற்சிகளும் நீள்வதைக் காணமுடிகின்றது.

பதிப்புத்துறை பேராசிரியராக நின்று சூளாமணியை செம்பதிப்பாக அச்சுவாகனம் ஏற்றியதுடன் அவரின் மனம் அமைதி கண்டிருக்கவில்லை.

சூளாமணியின் **மரபு**சார் அடையாளத்தைக் காத்து, அதேவேளை காலத்துக்குத் தேவையான **நவீன** கூறுகளை உள்ளடக்கி **இருமரபும் துய்ய சூளாமணிக்கு புதுரத்தம் பாய்ச்சியுள்ளமை** போற்றுதலுக்குரியது.

இதன்மூலமாக **சி.வை.தா.வின் பிம்பம் மேலும் உயர்ந்து வளருவதை உணர்ந்து கொள்ளலாம்.**



## 9 125ஆவது நினைவு ஆண்டு

தாமோதரம்பிள்ளை இயற்கையெய்தி 125ஆவது வருடத்தை எட்டியுள்ள இத்தருணத்தில், பெருமகனார் சார்ந்த ஆய்வுகள், எல்லைகளை எட்டிவிட்டனவா? என்பது கேள்விக்குரியது.

பிள்ளையின் பதிப்புரைகள் பல பதிப்புகளைக் கண்டுவிட்டன. ஆனால், ஒவ்வொரு நூலிலும், **நூல்களுக்குள் அவர் எழுதியுள்ள அடிக்குறிப்புகள்** இன்னமும் சரிவர ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை எனலாம். அவை சொல்லிநிற்கும் செய்திகள் அனேகம்.

**சி.வை.தா.வின் கவிகள்** திரட்டப்பட்டு தொகுத்து வெளிவந்துள்ளபோதும் அதில் உள்ளடக்கப்படாத கவிகள் இன்றும் கிடைத்தவண்ணமே உள்ளன.

சி.வை.தா. பற்றி கூறியதை மீண்டும் கூறுவதும், தொகுத்தவற்றை மீண்டும் தொகுப்பதும் தேவையான பணிகள்தான். காலத்தின் போக்கில் அவரை மீண்டும் அடையாளப்படுத்துவதற்கு இவை இன்றியமையாதவை. இருப்பினும் **தாமோதரம்பிள்ளை சார்ந்த ஆய்வுகள், இன்னமும் தமிழுலகினால் செய்வதற்கு உள்ளன** என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

○○○

**செயற்கை நுண்ணறிவு செயலிகளின் துணைகொண்டு சி.வை.தா.வின் படங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.**

# அனல் உமிழும் போதி

புத்தன் என் கபாலம்
விண் விண்ணென்று வலித்தது.
விதம் விதமாய்க் காட்சிகள்
என் சலனத்துத் திரையில்
வந்து வந்து போயின.
நித்திரையில் இருந்து விழித்தல் போல
சித்தார்த்தன் நான் திடீரெனக்
கண்விழித்துக் கொண்டேன்
வேவித்த தின்பண்டங்களின் மணம்
என்தியானத்தைக் கலைத்திருக்கலாம்.
சில காவல் வீரர்களைத் தவிர
வேறு யாரையும் காண முடியவில்லை.
கிழிந்திருந்த என் ஆடையை
இப்போதுதான் பார்க்கிறேன்.
சில நாட்களுக்கு முன் நடந்த
இழுபறியில் அவை கிழிந்திருந்தன.
காலக்காற்று என்னைப்
பின்னோக்கித் தள்ளியது.
கோலப் பெருவடிவு தேயும் மூப்பும்
எல்லோர்க்கும் தோன்றும் பிணியும்
ஞாலத்தினைத் துறக்கும் சாவும் என
இந்த மூன்றினையும் கண்டு
போதியை நாடிய என்னை
உனக்கு உகந்த இடம் இதுவென
இத்தீவில் இருத்தி விட்டீர்கள்.
புனைவுகளை அகற்றிய எனது
நினைவுகள் கடலெற்றும் அலையாய்
வந்து வந்து போயின.
உறைந்திருகிப் போன என்
புன்னகையின் கீழ் அடங்கிக்கிடக்கிறது.
சிலரது நெடிய பெருமூச்சுகள்.
விண்ணதிரும் ஒளியில்
இருள் தூளாக வெளித் தெரிந்த
எனது ஞானம் வானேகிறது.
நானோ ஆசையை அறுத்தேன்.
உங்கள் ஆசையில் அனல் மூழ்கிறது.
கண்ணில் பெருகியதுயரம்
புத்தன் எனக்குப் புதிய பாரமாகியது.
என்னைப் பற்றிய உங்களின் பாடல்களில்
குருதியின் வாடை வீசுகின்றது.
வன்மத்தின் சக்கரம் சுழலும்போது
தர்மச்சக்கரத்தைச் சுழற்றுவதற்கு
என் பலமிழந்த கைகளால் முடியவில்லை.
போதியின் கிளைகளை நம்பித்
தலை சாய்க்க விரும்பவில்லை.
நிழல்கள் யாவும் அனல் உமிழும்
வெளிகளாய் மாறிப் போயின.
மௌனமே மருந்தென்றேன்.
என்மௌனத்தையே சத்தமாய்
விற்றுப் பிழைக்கிறீர்கள்.
பலரது பிலாக்கணங்களின் மீது
மீண்டும் மீண்டும் என்னை இருத்தி
அலங்கோலம் செய்கின்றீர்கள்.
நான் விழித்திருந்த போது நீங்கள்
உறங்கிக் கொண்டிருந்தீர்கள்.
உங்களின் பெருவிழிப்பால்
இன்று நான் உறங்குகிறேன்.
நிர்க்கதியான என் நிலையை எண்ணி
மீண்டும் கண்களை மூடிக் கொள்கிறேன்.
உங்களுக்காக துன்பத்தின் மூலத்தை
மீண்டும் ஒருமுறை லும்பினி வனத்தில்
தேடிக் கொண்டிருக்கிறேன்.

நவாலியூர்
**சாந்தகுமார்**






# இராவணன் அரக்கனா?

**பூதம்**

**எ**ங்களது எங்களது புராணங்களிலும், இதிகாசங்களிலும் **பூதம்**, **அசுரர்**, **அரக்கர்** முதலான சொற்கள் உள்ளன. சிவபெருமானின் சேனையை பூத சேனை என்கின்றன புராணங்கள். பூதங்கள் மிகுந்த ஆற்றல் படைத்தவை என்றும், மலைக் குன்றுகள் போன்ற பெரிய தோற்றம் கொண்டவை என்றும் புராணங்களில் சொல லப்பட்டுள்ளது.

சின்னப் பிள்ளைகளைப் பயமுறுத்தும்போது பேய், பிசாசு, பூதம் என்று சொல்லிப் பய முறுத்துவது இன்றும் உண்டு. பொதுவாக பெரிய தோற்றம் கொண்டவர்களைப் பூதம் என்று கேலி செய்வதும் உண்டு. பேய், பிசாசு என்பவை ஒத்த கருத்துள்ள சொற்கள். பேய், பிசாசு வரிசையில் பூதத்தை ஏன் வைத்தார்கள்?

நாடகங்களிலேயும், திரைப் படங்களிலேயும் பூதங்கள் காட்சியாகக் காட்டப்படும்போது இரண்டு கொம்புகளைக் கொண்டவைகளாகவும், வெளியே நீண்டு வளைந்திருக்கும் பற்களைக் கொண்டவைகளாகவும் குள்ள வடிவம் கொண்டவைகளாகவும் அச்சத்தைத் தரும் பெரிய தோற்றம் கொண்டவைகளாகவும் மனித உருவிலேயே காட்டப்படுகின்றன.

முருகப் பெருமான் சூர சங்காரம் செய்யப் புறப்பட்டபோதும் விநாயகப் பெருமான் கஜமுகாசுர வதம் செய்யப் புறப்பட்டபோதும் பூத சேனைகளுடனேயே போருக்குச் சென் றார்கள் என்கின்றன புராணங்கள்.

பூதங்கள் சிவபெருமானுக்கும் விநாயகப் பெருமானுக்கும், முருகப் பெருமானுக்கும் நல்ல காரியங்களுக்கே துணை போயிருக்க விலங்குகளுக்குப் போல கொம்புகளையும் அரக்கர்கள், அசுரர்களுக்குப் போல வளைந்த பற்களையும் கொடுத்து பயங்கரமான தோற்றம் கொண்டவைகளாக பூதங்களுக்கு ஏன் உருவம் கொடுத்தார்கள். யார் உருவம் கொடுத்தார்கள்.

இராவணன், சூரபன்பன் முதலானவர்களுக்கு அச்சத்தைத்தரும் தோற்றத்தைக் கொண்டவர்கள் என்று அவர்களை வெற்றி கொண்டவர்கள் கதை சொல்லியிருக்கலாம். ஆனால் பூதங்கள் எந்த யுத்தத்திலும் தோல்வி அடையவில்லை. அப்படியிருக்க தோல்வியடைந்த எதிரிகளாகிய அசுரர்களால் பூதங்கள் பயங்கரமான தோற்றம் கொண்டவைகள் என்று உருவம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை.

பெரிய பெரிய அணைக்கட்டுக்களையும் குளக்கட்டுக்களையும் பூதங்கள் கட்டியவை என்று சொல்கின்ற வழக்கம் இன்றும் உண்டு. மனிதர்களால் முடியாத பிரமாண்டமான கடினமான வேலைகளை பூதங்கள் சுலபமாகச் செய்து முடித்துவிடும் என்று முன்னோர்கள் பல கதைகளைச் சொல்லியிருக்கிறார்கள். “கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல” என்ற பழமொழி இந்த அடிப்படையிலேயும் வந்திருக்கலாம். அல்லது ஒரு நல்ல காரியம் செய்தபோது



தமிழ்மணி அகளங்கன்

விரும்பாத எதிர் விளைவு ஏற்பட்டது என்ற கருத்திலும் வந்திருக்கலாம். இந்தக் கருத்தில் பார்த்தால் பிள்ளைகளுக்குப் பூதத்தைக் காட்டிப் பயமுறுத்துவதோடு இது சம்பத்தப் பட்டதாகத் தெரிகிறது. எப்படி இருப்பினும் பூதம் பற்றிய மாறுபாடான கதைகள் பல இன்றும் உண்டு.

பூதங்கள் ஆயுதங்களைக் கொண்டு போர் செய்யாதவைகளாக மரம். மலை இவை களைப் பெயர்த்தெடுத்து எறிந்து போர் செய்பவைகளாகவே கந்த புராணத்தில் சொல் லப்படுள்ளது. முருகப் பெருமானின் தம்பி களான வீரவாகு தேவர் உள்ளிட்ட இலட்சத்து ஒன்பது வீரர்களும் முருகப் பெருமானும் மட்டுமே ஆயுதங்கொண்டு போர் புரிந்ததாகக் கந்தபுராணம் விரிவாகச் சொல்கிறது.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் இவற்றைப் பஞ்ச பூதங்கள் என்பது புராணமரபு, எமது உடம்பு பஞ்ச பூதச் சேர்க்கையால் ஆனது என்பது இந்து சமயக் கோட்பாடு. பஞ்ச பூதங் களினால் ஆகாதது ஒன்றும் இல்லை. எனவே சிவபெருமான் பஞ்ச பூதங்களையும் தனக்குத் துணையாக வைத்திருக்கிறார் என்பது இதன் தத்துவ விளக்கம். இருப்பினும் பூதங்களின் துணையில்லாமலும் வெற்றி பெறுவார் என்பதே முப்புரம் எரித்தகதை,

அசுரர், அரக்கர் முதலானவர்கள் கெட்ட வர்கள், இரக்கம் இல்லாதவர்கள். பெரும் பலம் படைத்தவர்கள், உலக நன்மைக்குத் தடை யாக இருப்பவர்கள் என்று புராணங்களும் இதிகாசங்களும் சொல்கின்றன. ஆனால் அவர்களை உயர்திணையிலே சொன்ன புரா ணங்கள் இதிகாசங்கள் பூதங்களை அ∴றி ணையிலே ஏன் சொல்லின.? பஞ்ச பூதங்களே சிவபெருமானது சேனைகள் என்பதால்தான் பூதங்களை அ∴றிணையில் குறிப்பிட்டார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

பூதங்கள் கடவுளின் படையைச் சேர்ந்த வைகள் நல்லவைகள். வல்லவைகள்.அப்படி யிருக்க இவைகளின் தோற்றம் அச்சத் தைத் தரக்கூடியதாக இருந்தது என்று ஏன் சொன்னார்கள். இஸ்லாமியக் கதைகளில் வரும் பூதத்தின் வடிவத்தை எமது பூதங் களுக்குக் கொடுத்துவிட்டார்களோ? இந்த அடிப்படையிலேதான் பிள்ளைகளுக்குப் பூதத் தைச் சொல்லிப் பயமுறுத்தினார்கள் என்று சொல்லலாமோ?

## அசுரர்

***சுரர்*** என்பது தேவர்களைக் குறித்த சொல். சுரர்களுக்கு எதிரானவர்கள் ***அசுரர்கள்***. இவர்கள் மனிதர்களோடு போரிட்டதாகப் புராணக் கதைகள் இல்லை. ஆனால் இராமாயண இதி காசத்தில் ஒரு சம்பவம் உண்டு.

தசரதனோடு ***சம்பராசுரன்*** என்ற அசுரன் யுத்தம் செய்ததாகவும், அந்த யுத்தத்திற்கு தசரதன் செல்லும்போது கைகேயி தேரோட்டி யதாகவும் இராமாயணம் சொல்கிறது. யுத்தத்தில் களைப்படைந்து எதிரிகளால் கைப்பற்றப்பட இருந்த தசரதனை கைகேயி தந்திரமாகக் காப்பாற்றினாள் என்றும் அதற்குப் பிரதி உபகாரமாகத் தசரதன் கைகேகிக்கு இரண்டு வரங்களைக் கொடுத்தான் என்பதும் இராமாயணத்தில் முக்கியமான சம்பவங்கள்.

கிருஷ்ண பகவான் நரகாசுரனோடு போரிட்டு அவனைக் கொன்றதாக பாகவதம் சொல்கிறது. இந்த நாளையே தீபாவளித் திருநாளாகத் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடத் தொடங்கிய தாகவும் இந்து சமயம் சொல்கிறது.

## தானவர்

சூர்ப்பனகையை இலக்குவன் மூக்கரிந்து அவமானப்படுத்தியபொழுது அவள் பூமியிலே புரண்டு அழுது புலம்பும்போது தனது மரு மகனும் இராவணனின் மூத்த மகனும் பெரும் வீரனுமாகிய ***இந்திரஜித்*** என்ற பட்டப் பெயர் கொண்ட மேகநாதனை

கானமதின் இடை இருவர் காதொடு மூக் குடனரிய
ஈனமதாற் பாவியேன் இவண் மடியக் கடவேனோ
**தானவரை**க் கருவறுத்துச் சதமகனைத் தளையிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ! மருகாவோ!

என்று அழைத்துப் புலம்புகிறாள். இராமனும் இலக்குவனும் சேர்ந்துதான் தனது மூக்கையும் காதையும் அரிந்ததாக கானமதின் இடை இருவர் என்று சொல்கிறாள்.

இந்திரஜித்தின் பெருமையைச் சொல்லும் போது இந்திரனைச் சிறைப்படுத்தியதையும் அசுரர்களை முற்றாக அழித்து முடித்த செய்கையையும் சொல்கிறாள். ***தானவரைக் கருவறுத்து*** என்று கம்பன் இதைக் குறிப்பிடு கிறான். ***தானவர்*** என்பது அசுரரைக் குறித்த சொல். சூரபன்மனை தானவர்க்குத் தலைவன் என்று பல சந்தர்ப்பங்களில் கந்த புராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

தேவர்களை **வானவர்** என்றும் அவர்களுக்கு எதிரானவர்களாகிய அசுரர்களை **தானவர்** என்றும் கச்சியப்பசிவாச்சாரியார் கந்த புராணத்தில் குறிப்பிடுகிறார்.

## அரக்கர், நிருதர், இயக்கர்

கம்பன் இராமாவதாரம் என்று பெயரிட்டுப் பாடி இன்று கம்பராமாயணம் என்று பெயர் வழங்கிவரும் இதிகாசத்தில் இராவணன் முதலியோரை **அரக்கர்** என்றும் **நிருதர்** என்றும் **இயக்கர்** என்றும் ஒரே இனப்பெயர் சொல்லியும் இவர்கள் யாவரும் வேறுவேறு இனத்தவர்கள் என்றும் பல இடங்களில் சொல்லி பல குழப்பங்களை உண்டுபண்ணியிருக்கிறான்.

ஆரண்ய காண்டத்தில் **சூர்ப்பனகைப் படலத்தில்** ஒரே பாடலில் இந்த மூன்று வகை இனத்தவரையும் வெவ்வேறானவர்கள் என்று குறிப்பிடுகிறான் கம்பன். சூர்ப்பனகையின் **மூக்கு**, **காது**, **முலைக்காம்பு** ஆகியவற்றை இலக்குவன் அறுத்து அவமானப்படுத்தித் துயர் செய்தபின் சூர்ப்பனகை இராமனிடம் முறையிடுகிறாள்.

இராமன் இலக்குவனிடம் விசாரிக்கிறான். பின் ''நீ உனக்குத் துணையாக வரக்கூடிய மிகவும் வலிமை பொருந்தியவர்களாக நீ கருதும் அனைவரையும் அழைத்து வா, அவர்கள் அனைவரையும் உன் முன்னிலையிலே கொல்வேன்'' என்று அவளிடம் இராமன் சொல்கிறான்.

நெறித்தாரை செல்லாத **நிருதர்** எதிர் செல்லாதே
நெடிய தேவர்
மறித்தார், ஈண்டு இவர் இருவர் மானிடவர்
என்னாது, வல்லை ஆகின்
வெறித்தாரை வேல் **அரக்கர்** விறல் **இயக்கர்**
முதலினர் நீ மிடலோர் என்று
குறித்தாரை யாவரையும் கொணருதியேல்
நின் எதிரே கோறும் என்றான் (137).

அந்தணரை, பிராமணரை அல்லது மறையோரை, வேதியரை **பூசுரர்** என்று அழைக்கும் வழக்கம் இருந்தது. கவுணியர் குலத்து அந்தணரான திருஞானசம்பந்தர் தன்னை **பூசுரன்** என்று சொல்கிறார். ''புகலி நிலாவும் **பூசுரன்** ஞானசம்பந்தன்.." என்று திருநீற்றுப் பதிகத்தின் திருக்கடைக் காப்புப் பாடலாகிய பதினோராம் பாடலின் சொல்கிறார். பூசுரர் என்பது பூமியிலுள்ள தேவர்கள் என்ற பொருள் கொண்ட சொல். பூஎன்பது பூமியைக் குறித்த சுருக்கமான சொல். பூ உலகம் பூலோகம்.

## அரக்கர்

அரக்கர் என்பது பெயர்மரபிலும் பொருள் மரபிலும் திரிபடைந்த ஒருசொல். ரக்ஷசகர்கள் என்ற சொல் ராக்ஷசகர்கள் ஆக மாறி ராக்ஷசதர்கள் ஆகி தமிழில் இராக்கதர்கள் ஆகி அரக்கர்கள் ஆகியது.

குபேரன் தேவலோகத்திலிருந்து புஷ்பக விமானத்தில் வந்து இலங்கையை ஆண்டதாகவும், பின் தன் தந்தைவழித் தம்பியாகிய இராவணனிடம் இலங்கையைக் காக்கும் பொறுப்பை ஒப்படைத்ததாகவும் இராவணன் மூவுலகங்களுக்கும் சென்று வருவதற்காக தனது புஷ்பகவிமானத்தைக் கொடுத்ததாகவும் ஒருகதை உண்டு. இராவணன் தன் சகோதரனிடமிருந்து இலங்கை இராச்சியத்தையும் புஷ்பக விமானத்தையும் சண்டையிட்டு வெற்றிகொண்டு பறித்தெடுத்தான் என்பது மற்றொரு கதை.

ரக்சித்தல் என்றால் காப்பாற்றுதல் என்று பொருள். இராவணன் இலங்கையை ரக்ஷ்சித்தவன்.. அதாவது அரசனாக இருந்து பாது காத்தவன். ரக்ஷ்சித்தல் என்பதனை தமிழில் இரட்சித்தல் என்போம் ரக்ஷசித்தவர்கள் ரக்ஷசகர்கள். இது திரிபடைந்து தமிழ் மொழி இலக்கணப்படி இராக்கதர்களாகி, இராட்சதர்களாகி, இராட்சசர்களாகி அரக்கர்களா கின-ார்கள் என்று ஆய்வாளர் **அருணா செல்லத்துரை** அவர்கள் தனது ''இராவணனார் லங்கா பாங்கு வரலாறு'' என்ற நூலில் சொல்கிறார்.

இராவணன் முதலியோரை கம்பன் அரக்கர் என்று கவிக்கூற்றாகவும் பாத்திரங்களின் கூற்றுக்களாகவும் பல இடங்களில் சொல்லியிருக்கிறான். வாலி இராமனின் அம்புபட்டு மரணத் தறுவாயில் கிடக்கும்போது தனக்கு இராமன் செய்தது அநியாயம் என்று வாதிடுகிறான்.

அப்போது அவன் இராமனிடம் ஒரு கேள்வி கேட்கிறான். அரக்கர் உனது சொத்துக்கு ஒரு அழிவைச் செய்துவிட்டு அகப்படாமல் தப்பித்துவிட்டால் அரக்கரோடு சம்பந்தமில்லாத வேறு ஒரு இனமாகிய குரங்கு இனத்து அரசனைக் கொல் என்றா மனுதர்ம சாத்திரம் சொல்கிறது? இதனைக் கம்பன்

அரக்கர் ஓர் அழிவுசெய்து கழிவரேல் அதற்கு வேறோர்
குரக்கினத்து அரசைக் கொல்ல
மனுநெறி கூறிற்றுண்டோ?

இப்படி பலபாத்திரங்களும் இராவணனது குலத்தை அரக்கர்குலம் என்றும் இராக்கதகுலம் என்றும் சொல்வதை கம்பராமாயணத்தில் பல இடங்களில் காணலாம். அத்தோடு இவர்களை இயக்கர்கள் என்றும் கம்பன் குறிப்பிடுகிறான்.

தாடகையைப்பற்றி விசுவாமித்திரர் குறிப் பிடும்பொழுது "ஐயிரு நூறு மையல்மா ஒன்றிய வலியினாள்" என்கிறார். அதாவது மிகுந்த வல்லமை பொருந்திய ஆயிரம் யானை களின் வல்லமையைக் கொண்டவள் என்று குறிப்பிடுகிறார்.

மதம் சிந்துகின்ற வலிய பெரிய யானை களை அவற்றின் தும்பிக்கைகளைப் பிணைத்து கழுத்துமாலையாக அணிந்தவள் என்ற பொருளில்

கடங்கலுள் தடங்களிறு கையொடுகை தெற்றா
வடங்கொள நுடங்கும் இடையாள்

என்கிறான் கம்பன். இவளது வழிவந்த சூர்ப்ப னகையைப் பற்றிச் சொல்லும்போது இராகுவின் நிறத்தைக் கொண்டவள் என்கிறான். அதாவது கருநிறம் கொண்டவள் என்கிறான். செம்பட்டை யான தலை மயிர்களைக் கொண்ட வள் என்கிறான். மேல்நோக்கி வளைந்து வெளியிலே தள்ளிக்கொண்டு நிற்கும் இரண்டு பற்களைக் கொண்ட கோர முகம் படைத்தவள் என்கிறான்.

செம்ப ராகம் படச் செறிந்த கூந்தலாள்
வெம்ப ராகுத் தனி விளைந்த மெய்யினாள்.

எல்லா உயிர்களையும் பிடித்து விழுங்கி யிருப்பது போன்ற பெருத்த வயிறுடையவள் என்று நினைத்து இராமன் தன்னை விரும் பாமல் விட்டுவிடுவானோ என்று எண்ணி அழகான உருவை தான் எடுக்கவேண்டும் என்று சூர்ப்பனகை நினைப்பதாகக் கம்பன் சொல்கிறான்.

எயிறுடை அரக்கி, எவ்வுயிரும் இட்டது ஓர்
வயிறுடையாள்..

என்றும் "மேல்வாய் நீங்கி பல் எலாம் உறத் தோன்றும் பகுவாயள்" என்றும், இராவணனை சிவந்த கண்களைக் கொண்டவன் என்றும் அச்சப்படத்தக்க கொடிய உருவத்தைக் கொண்ட வன் என்றும் சொல்கிறான்.

செங்கண் வெவ்வுரு அமைத்தோன்

என்று பல சந்தர்ப்பங்களிலும் சொல்கிறான். இராவணனது தம்பியாகிய கும்பகர்ணனைப் பற்றிக் குறிப்பிடும்போது ஆயிரத்தி இருநூறு எருமைக் கடாக்களையும், அறுநூறு வண்டில் நிறைந்த உணவையும் (சோற்றையும்) சர்வ சாதாரணமாகச் சாப்பிடுபவன் என்றும்பத்தாயிரம் குடம் கள்ளைக் குடித்தாலும் அடங்காது ஏறுகின்ற பசிகொண்டவன் என்றும் சொல்கிறான்.

ஆறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங்களும் நுங்கினான்
ஏறு கின்ற பசியை எழுப்பினான்
சீறு கின்ற முகத்திரு செங்கணான்.
எருமை ஏற்றை ஓர் ஈர் அறு நூற்றையும்
அருமை இன்றியே தின்று இறை ஆறினான்.

என்றெல்லாம் சொல்கிறான் கம்பன். யுத்த களத்துக்கு வந்து நின்ற கும்பகர்ணனைப் பார்த்து இராமன் வியந்துபோய் விபீடணனைப் பார்த்து, இவன் யார் என்று கேட்கின்றான். மகாமேருமலை இரண்டு கால்கள் பெற்று பூமியின் நடுவில் வந்து நிற்பதுபோல இருக்கிறது. இவனது ஒரு தோளிலிருந்து மற்றைத் தோளைத் தொடர்ச்சியாகப் பார்த்தாலும் பார்த்து முடிக்கப் பல நாட்கள் பிடிக்கும். யுத்தம் செய்ய விரும்பி வந்துநிற்கும் ஒருஆள் என்று இவனை என்னால் உணரமுடியவில்லை.

தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால். நடுவண் நின்றதோர்
தாளுடை மலைகொலாம் சமரம் வெட்டதோர்
ஆளென உணர்கிலேன் ஆர்கொலாம் இவன்?



என்று சொல்லி இராமன் விபீடணனிடம் கும்ப கர்ணனைப் பார்த்து யார் என்று கேட்ப தாகக் கம்பன் சொல்கிறான்.

இவர்களது தாய்வழிப் பாட்டியாகக் கம்பன் சொல்லும் தாடகையை "விலங்குகளின் வல்லமை போன்ற வல்லமை கொண்டவளாகிய இவள் இலங்கை அரசன் இட்ட கட்டளைப்படி எனது யாகத்துக்கு இடையூறு செய்து வருகிறாள்" என்றபொருளில்

இலங்கை அரசன் பணி அமைந்து ஓர் இடையூறா
விலங்கல் வலிகொடு எனது வேள்வி நலிகின்றாள்.

என்கிறார் விசுவாமித்திரர். இவளை இராமன் அம்புசெலுத்திக் கொல்ல இவள் தரையில் விழுந்ததைக் குறிப்பிடும்போது பின்னாளில் இராவணனின் அழிவிற்கு முந்திய கேடுகால அறிகுறியாக பூமியில் விழுந்த வெற்றிக் கொடியை ஒத்தாள். என்ற பொருளில்

"தலைகள் தோறும்
முடியுடை அரக்கற்கு முந்தி அந்நாள் உற்பாதமாக
படியிடை இற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை ஒத்தாள்."

என்கிறார் கம்பர். இராமனின் அம்பினால் தாடகையின் ஒருமகனான சுபாகு கொல்லப் பட்டான். பல அரக்கர்கள் கொல்லப்பட்டனர். தாடகையின் இன்னொரு மகனான மாரீசன் கடலில் வீழ்ந்து ஒளித்துத் தப்பிக்கொண்டான்.

### தாடகை அரக்கியா?

தாடகை **இயக்கர்** குலத்தைச் சேர்ந்தவள். அங்கநாடு என்ற இடத்தில் வாழ்ந்த சத்சரன் என்பவனின் மகனான சுகேதுவின் மகள், இவளது கணவனின் பெயர் சுந்தன். இவன் அகத்திய முனிவரின் ஆசிரமச் சூழலில் மரங் களை அழித்தும் வேறுவகைகளிலும் அகத்தி யருக்குக் கோபத்தை ஏற்படுத்தினான்.

அவனது அழிவுச் செயல்களைப் பொறுக்க முடியாத அகத்தியர் தனது பார்வையால் அவனை எரித்து அழித்தார். அதனைக்கண்டு கோபங் கொண்ட தாடகையும் அவளது புத்திரர் களும் அகத்தியரைக் கொல்ல வந்தபோது அகத்தியர் அவர்களுக்கு அரக்கர்களாகும்படி சாபம் கொடுத்தார்.

தாடகை இராவணது தாய் கைகேசி என் பவளின் தாய் அதாவது தாய்வழிப் பாட்டி என்று சொல்கிறான் கம்பன். ஆரண்ய காண்டம் சூர்ப்பனகைப் படலத்தில் இராமன் சூர்ப்பனகையை அச்சுறுத்தும் விதமாக பின்வருமாறு சொல்கிறான்.

நாடறியத் துயரிழைத்த நவைஅரக்கி
நின் அன்னை தன்னை நல்கும்
தாடகையை உயிர்கவர்ந்த சரம்இருந்தது "

உனது தாயைப் பெற்றவளாகிய அரக்கி யாகிய தாடகையின் உயிரைக் கவர்ந்த அம்பு என்னிடம் இருக்கிறது என்கிறான் இராமன். சூர்ப்பனகை இராவணனின் தங்கை என்பதால் இராவணனுக்கும் தாடகையின் மகளே தாயா கிறாள். மாரீசன் சுபாகு ஆகிய தாடகையின் புத்திரர்கள் இராவணனுக்கு மாமன்மாரா கின்றனர். என்கிறது இராமாயணம்.

அப்படியென்றால் தாடகையாகிய பாட்டி யையும், தாய் மாமனாகிய சுபாகுவையும் மற்றும் தன் இனத்தவராகி தன் கட்டளைகளை நிறைவேற்றிக்கொண்டிருந்த பல அரக்கர் களையும் கொன்ற இராமனோடு இராவணன் ஏன் எதிர்த்துப் போர் செய்யவில்லை. பழி வாங்கவில்லை. இவர்கள் கொல்லப்பட்டது இராவணனுக்குத் தெரியாதா? அவ்வளவு கேவலமான ஆட்சியையா இராவணன் மேற் கொண்டிருந்தான் என்று எண்ணத் தோன்று கிறதல்லவா?

இதன்படி பார்க்கும்போது இயக்கர் வேறு அரக்கர் வேறு என்பது போலத் தெரிகிறது. சூர்ப்பனகையை கம்பன் அறிமுகப்படுத்தும் இடத்தில் இராவணனைப்பற்றிக் குறிப்பிடும் போது நிருதர் வேந்தன் என்கிறான்.

நீலமா மணிநிகர் நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்.

என்கிறான். கருமாணிக்கம் போன்ற நிற முடைய நிருதர் வேந்தன் என்று இராவணனதும் அவனது குலத்தின் நிறத்தினையும் குறிப்பிடு கிறான். இராவணனது குலம் இயக்கர் குலம். அல்லது நிருதர் குலம். தாடகை அகத்தியரின் சாபத்தால் அரக்கியாகியதால் அவளது குலத்தில் வந்த இராவணன் அரக்கர் குலத்தைச் சேர்ந்தவனாகின்றான். என்பது கம்பனின் முடிவு?

**நா**ன் அந்த பிரமாண்டமான பல்கலைக் கழகத்தில் காலடி வைத்தபோது இனிப்பை மொய்க்கும் ஈக்கள் போல மனிதர்கள் மொய்த்துக் கிடந்தார்கள். அங்குமிங்குமாய் முளைத்துக் கிடந்த கட்டடங்களோடு மரங்கள் இரகசியம் பேசிக்கொண்டிருந்தன. காலைப் பனித்துளி புற்களில் மகுடம் தரித்திருந்தது. சில்லென்ற காற்று உடலை கூசச் செய்தது. பதாதைகளை கண்களால் துழாவிக்கொண்டே நான் நடந்து கொண்டிருந்தேன். என் கணவர் செல்லிட தொலைபேசியின் குறுஞ் செய்திகளை நோட்டமிட்டவாறே என்னோடு நடந்து கொண்டிருந்தார். அந்தப் பல்கலைக்கழகத்துக்கு பல்வேறு வாயில்கள் இருப்பதாக அந்த ஆட்டோ டிரைவர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. எந்தப் பக்கமாக திரும்பி எந்த கட்டடத்துக்குள் எங்களை உள்நுழைப்பது என்று தெரியாமல் நான் நடந்து கொண்டிருந்தேன்.

எதிரே வந்து கொண்டிருந்த இரண்டு பெண்களைப் பார்த்ததும் பதிவு செய்தல் அலுவலகம் எங்கிருக்கிறது என்ற கேள்வியை தொடுத்து விடலாம் என்ற எண்ணம் எனக்குள் உதித்தது. ஆனாலும் எனக்குள் ஒரு தவிப்பு. நான் கல்வி முதுமாணிப்பட்டத்தை இங்குதான் கற்க வேண்டும் என்று முடிவெடுத்ததற்கு காரணம் உண்டு. ஒரு ஆங்கில ஆசிரியையாக பணிபுரியும் எனக்கு ஆங்கிலத்தின் அவசியம் புரியாமலில்லை. உயர்கல்வியை ஆங்கிலத்தில் தொடர்வதற்கு வாய்ப்பு வழங்கும் பல்கலைக் கழகங்கள் பல இருந்தபோதும் இதன் நற்பெயர் என்னை ஈர்த்திருந்தது. இங்கு வாய்ப்பு கிடைப்பதொன்றும் அவ்வளவு எளிதல்ல. நுழைவுப்பரீட்சையில் சித்திபெற்று நேர்முகத் தேர்வில் நேருக்கு நேர் கேள்விகளை எதிர் கொண்டு பதிலளித்து இன்று பதிவு செய்தலுக்கான மின்னஞ்சல் குறுஞ்செய்தியோடு இங்கு நின்று கொண்டிருக்கிறேன்.

இரவுப் பேருந்து எங்களைச் சுமந்து காலையில் தான் கொழும்பு மாநகரை அடைந்திருந்தது. வாரநாட்களில் இங்கு வந்து பதிவு செய்தலை மேற்கொள்ளுமாறு பிறப்பிக்கப்பட்ட கட்டளை சோர்வை அளித்தது. என்னவோ உண்மை தான். ஏனெனில் இன்றிரவே நாங்கள் புறப்பட வேண்டும். சொந்த விடுமுறையில் எத்தனை தடவை இங்கு வந்து செல்வதென்பதும் நாளை அதிபரை சந்திக்கும்போது அவருடைய



முகபாவங்களும் என் மனக்கண்முன் மங்கலாய் தெரிந்தன.

என் நண்பர்கள் தேவைக்கு மட்டும் தொடர்பு கொள்பவர்கள். முதுமாணிப்பட்டம் பற்றிய என் கனவை சொன்னபோது எதற்கு இந்த வேண்டாத வேலை என்ற கேள்வியோடு நிறுத்திக் கொண்டார்கள். மட்டக்களப்பிலிருந்து ஒரு நண்பியையாவது என்னோடு முதுமாணிப் பட்டத்தை அதுவும் ஆங்கிலத்தில் பெற வைக்க வேண்டும் என்ற எனது ஆசை உதிர்ந்து போயிருந்தது. தனியாகவே இந்த சவாலையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியிருந்தது. இருந்தாலும் ஆறுதல் மந்திரமாய் எனக்கு கை கொடுத்தது என் கணவர்தான்.

"எத்தின மணிக்கு ரெஜிஸ்டேசன் முடியும்?" என் சிந்தனைப்பட்டம் அறுந்தது. என் கணவர் ஆவலாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"தெரியல்லயே........... ஒபிஸ் எங்க எண்டு கண்டுபிடிச்சு அங்க போய் பாத்தாதான் தெரியும். இன்னும் எவ்வளவு தூரம் நடக்கிற?"

"இன்னும் கொஞ்ச தூரம்தான். அந்த போர்டில ஒபிஸ் எண்டு போட்டிருக்கு...." சொல்லியபடி உற்சாகமாக நடக்கும் என் கணவரைப் பார்த்தேன். எனக்காக விடுமுறை எடுத்து என்னோடு கை கோர்த்து என் உயர் கல்விக்காக உறுதுணையளிக்கும் துணை வரப் பிரசாதம்தான். ஒரு மெல்லிய கவலைக்கோடு இதயத்தில் தோன்றியது.

"REGISTERATION" என்ற எழுத்துக்களை தாங்கியபடி இருந்த பகுதி தொலைவில் ஒரு புள்ளியாக தெரிந்தது. நான் எத்தனையோ மைல் தொலைவில் நின்று கொண்டிருந்தேன். நிறைந்து வழிந்தார்கள் ஆட்கள். இத்தனை பேர் உயர்கல்வியை நேசிக்கிறார்களா?கல்வி இத்தனை ஆட்களின் சிந்தனையிலும் தன் தடத்தைப் பதித்திருக்கிறதா???

நான் இறுதியாக இந்த வரிசையில் நின்று கொண்டிருந்தேன். உண்மையைச் சொன்னால் இந்த வரிசை எதற்கானது என்றுகூட எனக்குத் தெரியாது. என் உடுப்புப் பையை கணவரிடம் ஒப்படைத்துவிட்டு நான் நின்று கொண்டேன். இரண்டு பைகளையும் சுமந்தவாறு அவர் கொஞ்சம் தள்ளி நின்று கொண்டார். முன்னுக்கு நின்ற பெண் என்னைப் பார்த்து விட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள். சுற்றும்முற்றும் பார்த்தேன். என்னைப் போன்றவர்களை பெரும் பாலும் பார்க்க முடியவில்லை. கையில்லாத பனியன் ஒன்றை அணிந்தவாறு கல்வி முதுமாணிப் பட்டத்தை கற்க வந்திருந்த அவளை நினைக்க ஆச்சரியமாயிருந்தது. அவளை மட்டுமல்ல.... அவர்களையும்....

கல்வி...... ஒழுக்கத்தையும் விழுமியங் களையும் விதைப்பதாக டிப்ளோமாவில் புண்ணியமூர்த்தி சேர் கற்பித்தது நினைவுக்கு வந்தது.

"எக்ஸ்கியூஸ்மீ......மெ லைன் எக்கே மொகடத இன்னே.... ரெஜிஸ்டேசன் கரண்ணத மெதன இன்னே?" (இந்த வரிசையில் ரெஜிஸ்டேசன் செய்யவா நிக்கிறீங்க) அவளிடம் கேட்டுவிட்டேன். சிங்கள மொழியில் எனக்கு தேர்ச்சியுண்டு. சாதாரணதரப்பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களத்தில் நான் சித்தி பெற்றிருந்தேன்.

"ஒவ்.... ஒயா சல்லி கெவுவாத....??சல்லி கெவண்ண வென தனகட்ட யண்ண ஓணே"(ஓம் காசு கட்டியாச்சா? இல்லாட்டி காசுகட்ட வேற இடத்த போகோணும்)

அவள் சொல்லிவிட்டு என்னைப் பாராமல் செல்லிடத் தொலைபேசியை காதில் பொருத்திக் கொண்டாள்.

எழுபதாயிரங்களை வைப்பிலிட்டு வங்கிப் பற்றுச்சீட்டோடு சமூகமளிக்குமாறு எங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் நான் நிகழ்நிலையில் பணத்தை வைப்பிலிட வில்லை. நேரடியாக இங்கேயே பணத்தை வைப்பி லிடலாம் என்று வந்திருந்தேன். பணத்தை வைப்பிலிட வேறு இடத்துக்கு செல்லவேண்டும் என அவள் சொன்னதும்தான் பணம் தொடர் பான எண்ணமே வந்தது. அந்த வேறு இடம் எங்கிருக்கிறது??? என்ற பயம் தொற்றிக் கொண்டது.

நான் வரிசையிலிருந்து விலகுகிறேன்.

"காச கட்டி ரிசிட்ட எடுத்துதான் இங்க வந்து லைனில நிக்கோணுமாம். வேற கோர்ஸ் ஆக்களும் இந்த லைனிலதான் நிக்கிறாங்க போல கிடக்கு....... எல்லாரயும் இண்டைக்கித் தான் வரச் சொன்ன போல........" நான் சொல்லியபடி என் கைப்பையிலிருந்த ஆயிரங்களை எண்ணத் தொடங்குகிறேன்.

"யாரு சொன்ன உங்களுக்கு?"

"அந்த கேர்ளிட்ட கேட்டனான்"

“நீங்க அவங்களிட்ட கதச்சி என்ன செய் யோணும் எண்டு கேளுங்க”

“நான் கதைக்க ரெடி.. அவங்க ரெடி இல்ல… நம்மட நாட்டில இது புதுசில்லயே…….?????”

நானும் என் கணவரும் “CASHIER” பீடத்தை அடைந்தபோது அங்கு ஒரு வரிசை நீண்டு கிடந்தது. பெருமூச்சொன்று எனக்குள்ளிருந்து வெளியேறியது. வரிசையில்நின்று பணத்தைச் செலுத்திபற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டேன். பற்றுச் சீட்டோடு நான் மீண்டும் பதிவு செய்தல் பகுதிக்குள் நுழைந்த போது அங்கு பதட்டம் பரவிக்கிடந்தது.

அனைவரும் அவசரமாய் அலைந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. முதுமாணிப் பட்டத்துக்காக பெயர்களைப் பதிவுசெய்வது இவ்வளவு கொடுமையானது என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இந்த உயர் கல்வியை ஒரு வருடத்துக்குள் நிறைவேற்றுவது சாத்தியமானதா என்ற கேள்வி இதயத்தை பிசைய ஆரம்பித்தது.

பிறப்புச் சான்றிதழ் பட்டச்சான்றிதழ் திருமணச் சான்றிதழ் புகைப்படங்கள் இரண்டு என்பவற்றோடு மீண்டும் நான் வரிசையில் இணைந்து கொண்டேன். எனக்கு முன்னே நின்று கொண்டிருந்தவர் மெல்லிய புன்னகையோடு திரும்பிக் கொண்டார். நான் என்னைப்போன்ற யாரும் தென்படுகிறார்களா என விழிகளால் தேடினேன். ஆங்காங்கே சிலர்……

வரிசை நகர்ந்தபோதுதான் பல கிளை வரிசைகள் அதனோடு இணைவது எனக்கு தென்பட்டது.. வரிசைகளில் காத்திருப்பு என்பது எங்களைப் பொறுத்தவரை புதிதல்ல……கடந்த காலங்களில் வரிசைகளில் நாங்கள் நீண்டு கிடந்தோம் அத்தியாவசியப் பொருட்களில் தொடங்கி அத்தனைக்கும்….. அப்போதும் பல கிளை வரிசைகள் தோன்றி நேர்மையின்றி நடந்து கொண்ட சம்பவங்கள் எனது அனுபவத்திலேயே நிரம்பி வழிந்தன. நாட்டில் நியாயம் கேட்பவர்கள் காணாமல் போனது பற்றி படித்ததுண்டு நான் மௌனம் காப்பதா, இல்லை நியாயத்தை காப்பதா என்ற போராட்டத்தோடு முன்னோக்கி நகர்ந்து கொண்டிருந்தேன்.

பதிவுசெய்யும் அலுவலகத்தில் பலர் நிறைந்திருந்தார்கள். பலர் இருக்கிறார்களே….. ஆகவே வேலை இலகுவாக முடியும் என்று நீங்கள் நினைத்தால் நான் பொறுப்பல்ல… பெயர்களை பதிவு செய்ய பொறுப்பாயிருந்த அவனின் முகத்தில் பலரை காணும்போது முறுவலும் சிலரை காணும் போது வெறுப்பும் படர்ந்திருந்தது.அவன் அருகில் சென்று பதிவிலக்கத்தை கூறியவுடன் கணனியில் பதிவு செய்த பற்றுச்சீட்டொன்றை வழங்குவான். அந்த பற்றுச்சீட்டை அருகிலுள்ளவனிடம் செலுத்தினால் பதிவுப்புத்தகம் வழங்கப்படும். அதன் பின் இலத்திரனியல் புகைப்படம் பெறும் பகுதிக்கு சென்று புகைப்படத்தை கணனியில் பதிவு செய்த பின் முதுமாணிப்பட்டத்திற்கான பதிவு சட்டதிட்டங்களுக்கமைவாக செல்லுபடியாகும். இதுதான் பதிவு செய்தலுக்கான செய்முறை என்பது வரிசை நகரும் போதே எனக்கு புலனாகியது. ஆனால் கிளை வரிசைகளோடு நடந்த போட்டியில் எங்கள் வரிசை தோற்றுப்போக, கிளை வரிசைகள் வேகமாக நகர்ந்து கொண்டிருந்தன.

மண்ணை முட்டி மோதி முளைக்கும் வித்துப்போல நான் முட்டி மோதி அவன் அருகில் சென்றேன். நான் காகிதங்களை அவனிடம் கொடுக்க எத்தனித்தபோது என் கைகளைத் தாண்டி பல கைகள் அவனருகில் சென்று வந்தன. வியர்த்துப்போன முகம்



**பொட்டைக் கழற்றினால் வேலை நடக்கும் என்ற வரி, நெஞ்சின் அரியாசனத்தில் வீற்றிருந்தது.**
**“நான்” என்ற சுயமிழந்து அடையாளங்கள் தொலைத்து**
**கல்வியில் உள்நுழைய வேண்டியது அவசியம்தானா? என்ற கேள்வி என்னைக் குடையத் தொடங்கியது.**

உலரத் தொடங்கியிருந்தது. ஓங்கிய கைகளில் சான்றிதழ்களை ஏந்தியவாறு நான் நின்று கொண்டிருந்தேன். அவன் விழிகள் வேறு கைகளை மட்டுமே கவனித்தன போலும். நகப் பூச்சு பூசிய கைகள் அவன் பார்வைக்கு விருந்தளிக்க அவற்றிலிருந்து வேறுபட்ட ஒரு கறுப்புக் கை என்னுடையது.

இதோ!... என் கைகள் பெருமையாக என்னை உற்று நோக்கின. அவன் என் கைகளிடமிருந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டான். பெற்றுக் கொண்ட வேகத்திலேயே அவன் குரல் உயர்ந்தது.

“காகெத மேக?.... மேக கறியண்ணக... அரங் யண்ண.......” (யாருடையது இது.... இது சரிவராது...... எடுத்திட்டு போங்க) அவன் என் முகத்தைப் பார்த்தவாறு சான்றிதழ்களை மேசையில் கோபமாக வீச அவை நிலத்தை வந்தடைந்தன.

காலையிலிருந்து இந்தக் கட்டடத்துக்குள் பொழுதைக் கழிக்கும் எனக்கு நான் செய்த தவறு என்ன என்ற கேள்வி உண்டானது. நிலத்தில் கிடந்த என் சான்றிதழ்கள் அவற்றைப் பெற நான் கடந்து வந்த பாதையை ஒருகணம் நினைவூட்டின. நான் அவற்றைப் பொறுக்கி எடுப்பதற்குள் பலரது காலடித்தடங்கள் அவற்றில் பதிந்தன. இயலாமையின் வெளிப் பாடு எனக்குள் எட்டிப்பார்க்க கண்கள் துளி களை ஆயத்த நிலையில் வைத்திருந்தன.

நான் “கொஞ்சம் விடுங்க எண்ட சேர்டி பிகேட்ஸ்” என்றவாறு சான்றிதழ்களை கை களில் அள்ளிக்கொண்டேன். நான் பேசிய தமிழ் யாருக்கும் புரிந்திருக்க வாய்ப்பில்லை... புரிந்தாலும்...

வலியில் நிற்கிறேனா........... இல்லை வரிசையில் நிற்கிறேனா புரியவில்லை. நான் ஒட்சிசனை யாசித்தவாறு வெளியேறுகிறேன். விழிகள் என் கணவரைத் தேடுகின்றன. நான் அழவேண்டும்..... ஆனால் எதற்காக?????

நீண்டு கிடந்த இருக்கைகளில் ஒன்றில் அமர்கிறேன். சான்றிதழ் ஈரத்தில் நனைகிறது. என்ன செய்ய வேண்டும் என்று யாரிடம் கேட்பது??

“செஞ்சிட்டீங்களா எல்லாம்?.......” கேட்டபடி அருகில் அமர்ந்த அவளைப் பார்த்தேன். அவள் மிடுக்கான தோற்றத்தில் காட்சியளித்தாள். அவள் என்னைப் போன்றவளா??? இல்லை அவர்களைப் போன்றவளா??

“நானும் எம்ஈடீ செய்யத்தான் வந்தன்... இங்க எதுக்குள்ள போகணும் என்ன செய்யோ ணும் ஒண்டும் விளங்குதில்ல.....ரெக்கோட்புக் எடுத்திட்டீங்களா?”

“இல்ல............”

“அந்தா இருக்காங்களே மிஸ், அவங்க ளிட்ட பொயிட்டு ரெஜிஸ்டேசன் நம்பர் சொன்னா அவங்க கம்பியுட்டரில பதிஞ்சு ஒரு போர்ம் தருவாங்க.. அத மூணாக் கிழிச்சி ரெக்கோட் புக்கில ஒட்டிட்டு போய் அவனிட்ட குடுத்தா அவன் சீல் அடிச்சித் தருவான். அத எடுத்திட்டு வந்து கியூவில நிண்டு போட்டோ புடிக் கோணும்.”

எனக்குப்புரிந்து விட்டது. நான் என் பதி விலக்கத்தை சொல்லி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை. கைகளில் வைத்திருக்கிறேன். அவள் சொன்னது போல் அதை மூன்றாகக் கிழித்து பதிவுப்புத்தகத்தில் ஒட்டவில்லை. ஆனால் எனக்கு பதிவுப்புத்தகமே தர வில்லையே.............

“ரெக்கோட்புக் எங்க எடுக்கிற???”

“அந்த மிஸ்ஸிட்ட கேட்டா தருவாங்க....”

“நான் அவங்களிட்ட தானே இப்ப பதிஞ் சனான்... அப்ப அவங்க ஒண்டும் சொல்லல் லயே”

“அவங்க சொல்ல மாட்டாங்க... நாம தான் கேக்கணும்”

“தெரியாத ஒண்ட எப்பிடி கேக்கிற?”

அவள் சிரித்தாள். நான் அவளைப் பார்த்தேன்.

“நீங்க ரொம்ப நேரமா நிக்கிறீங்க இல்லயா லைனில??? அதான் சொன்னன். சிங்களம் தெரியுமா? இங்கெல்லாம் கதைக்க தெரியாட்டி ஒரு வேலயும் பார்க்க ஏலா.... நான் போட்டோ எடுக்கணும் இனி.. அவங்க லஞ் பிரேக் எண்டு சாப்பிடப் பொயித்தாங்க. அதான் வெயிட் பண்றன்.. சரி வந்திட்டாங்க போல” அவள் விரைவாக எழுந்து செல்வதை இமைக்காமல் நான் பார்த்தேன். அவள மீண்டும் திரும்பி வந்தாள்.

“பிழையா நினைக்காதிங்க..... பொட்டக் கழட்டித்துப் போய் கேட்டுப் பாருங்க.... கெதியா வேல நடக்கும்” அவள் விரைந்து கொண்டி ருந்தாள்.

நான் அவள் சொன்ன வார்த்தைகளை அசை போட்டபடி அமர்ந்திருந்தேன். பொட்டைக்

கழற்றினால் வேலை நடக்கும் என்ற வரி நெஞ்சின் அரியாசனத்தில் வீற்றிருந்தது. நான் என்ற சுயமிழந்து அடையாளங்கள் தொலைத்து கல்வியில் உள்நுழைய வேண்டியது அவசியம் தானா என்ற கேள்வி என்னைக் குடையத் தொடங்கியது. பட்டிமன்றத்தில் நடுவராய் வீற்றிருந்து தீர்ப்பு சொல்ல இப்போது எனக்கு நேரமில்லை... ஈரமான விழிகளை ஒற்றியபடி நான் எழுகிறேன்.

அந்த மிஸ்ஸிடம் சென்று பதிவுப்புத்தகத்தை பெற்றுக்கொண்டேன். சான்றிதழ்களை இறுகப் பற்றியவாறு மீண்டும் அவனிடம் சென்ற போது எனக்குப் பின் நின்றவர்கள் வேலை முடித்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். வரிசை யின் இறுதியில் நான் இணைந்து கொண்டேன். அவனருகில் சென்றபோது அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற அச்சம் எனக்குள்..

மூன்றாய் கிழித்த காகிதங்களையும் பதிவுப் புத்தகத்தையும் நான் அவனிடம் நீட்டியவாறு அந்த நெருக்கத்துக்குள் நசுங்கிக் கொண்டி ருந்தேன். வரிசையில் எல்லோரும் ஒழுங் காய் வந்திருந்தால் எல்லாம் சுலபமாய் முடிந்திருக்கும்.

"அய்யே.... அப்பி கொச்சர வெலா பலங் இன்னவாத?? அப்பிட்ட ககுல் ரிதெனவா... மேக்க கரலா தென்டகோ அய்யே........."
(அண்ணா.... நாங்க எவ்வளவு நேரமா பா-த்துக் கொண்டிருக்கிறம்... எங்களுக்கு கால் வலிக்குது... இத செய்து தாங்களன் அண்ணா)

"அய்......... அவிதுவே??? தென்னகோ.... மம கரலா தென்னம்" (ஏன் நடந்தனீங்க? தாங்க நான் செய்து தாறன்)

அவன் அந்தப்பெண்கள் மூவரதும் பதிவுப்புத் தகங்களை வாங்கி புகைப்படத்தை ஒட்டி அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தான். உரையாடலின் போது அந்தப்பெண்கள் மூவரும் கொழும்பைச் சார்ந்தவர்கள் என்பதும் பதிவு செய்வதற்கு தற்போது ஒரு மணித்தியா லத்திற்கு முன்தான் வந்தவர்கள் என்பதும் எனக்கு புரிந்தது.

"அய்யே.... மென்ன... மகே பொத்த...." (அண்ணா... இந்தாங்க எண்ட புத்தகம்) நான் அவர்கள் உரையாடலையும் சிரிப்பையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் கைககளை நீட்டினேன்.

"பொட்டக் இன்ன.... ஓயாட்ட பேன்னத்த.... மம மொகக்த கரண்ணே கியலா.....இன்ன" (கொஞ்சமிருங்க.... உனக்கு தெரியல்லயா நான் என்ன செய்றன் எண்டு...இருங்க)

அந்தப்பெண்கள் மூவரும் ஒரு அலட்சியப் பார்வையை உதிர்த்திவிட்டு அவன் வட்ஸ் அப் இலக்கத்தை வாங்குவதில் மும்முரமா யிருந்தார்கள். நான் முதுமாணிப் பட்டக் கனவை குழியில் புதைப்பதா இல்லை???........

அவர்களை வழியனுப்பிவிட்டு அவன் என்னை நிமிர்ந்து பார்க்காமலே புத்தகத்தை வாங்கிக் கொண்டான். புகைப்படத்தை என்னிடமே திருப்பித்தந்து கிழித்த காகிதங்களின் மூன்று பகுதிகளையும் அதில் ஒட்டுமாறு கூறினான். என்னை நோக்கி பசைப்போத்தலை நகர்த்தினான். நான் ஒரு கணம் யோசித்தேன். அந்தப் பெண்களுக்கு அவனே ஒட்டி அனைத் தையும் செய்து கொடுத்தது எனக்கு நினைவி லிருக்கிறது. என் பின்னால் நின்ற மற்றைய ஆணின் புகைப்படத்தை ஒட்டுவதில் அவன் ஈடுபட்டிருந்தான். நான் ஏன் புறக்கணிக்கப் படுகிறேன்?????

"இக்மணட்ட கரண்ண.... பறக்கு வெனவா...." (கெதியாச் செய்யுங்க நேரம் போகுது)

நான் மெதுவாக என் புகைப்படத்தை ஒட்டுகிறேன். புகைப்படத்தில் நான் சிரித்துக் கொண்டிருந்தேன். அனைத்தையும் ஒட்டி அவனிடம் கொடுத்தபோது அவன்

"கறி....... ஓயா போட்டோ எக்க அரகெண என்ன... மம சீல் எக்க ககலா தென்னம். தேரென வாத மம கியண தெ?" (சரி நீங்க போட்டோ எடுத்திட்டு வாங்க.... நான் இதில் சீல் அடிச்சி தாறன்.. விளங்குதா நான் சொல்றது?)

"எனக்கு விளங்கிறது இருக்கட்டும்.. உனக்கு விளங்குதா.. நீ சரியா நடக்கல்ல எண்டு.. அப்போதே எண்ட சேர்டிபிகேட் எல்லாத்தயும் கீழ போட்டனீ... இங்க என்ன செய்யோணும் ஏது செய்யோணும் எண்டு சொன்னனீயா? பிறகு எங்களுக்கு எப்பிடித்தெரியும்? அந்தப் பிள்ளைகளுக்கு ஒட்டிக்குடுத்தனீ தானே.. எனக்கு மட்டும் என்னட்டயே ஒட்டு எண்டு தந்த.... முகத்த கூட நிமிர்ந்து பாக்கஏலா எண்டா... நான் என்ன... தீண்டத் தகாத இனமா????"

உமிழ் நீரோடு வார்த்தைகளையும் உமிழ் கிறேன். நான் பேசவில்லை.. பேச நினைக் கிறேன்.

ஆட்சி மாற்றங்கள் மனங்களில் மாற்றங்களை விதைத்திருக்கும். உயர் கல்வி உயர் சிந்தனைகளை மானிடருக்கு வழங்கியிருக்கும் என்பதெல்லாம் வெறும் கற்பனை....கொழும்புக்குச் சென்று ஒரு நிறுவனத்தில் வேலை முடிக்க மொழிப்புலமை தான் அவசியம் என்று அறிந்திருக்கிறேன். ஆனால்...

மௌனமாக பதிவுப்புத்தகத்தை எடுத்துக் கொண்டு நகர்கிறேன். உயர்கல்வி உயர்ந்து நிற்கிறது. இலத்திரனியல் புகைப்படப்பகுதிக்கு செல்கிறேன். பசி வயிற்றைப் பிசையத் தொடங்குகிறது. கைப்பையைத் துழாவி செல்லிடத் தொலைபேசியை பார்க்கிறேன். நேரம் மூன்று மணி.... வயிறு தன் கடமையைச் சரியாகச் செய்கிறது. ஆனால் மனிதர்கள்................

பொருத்தப்பட்டிருந்த புகைப்படக்கருவிக்கு முன்னால் உள்ள முக்காலியில் அமர்ந்து புகைப்படம் எடுக்கவேண்டும். இங்கு என்ன ஆகப்போகிறதோ???

வரிசையில் நின்றுகொண்டேன். பின்னால் நின்று கொண்டிருந்த பெண் என் தோளைத் தட்டினாள்.

"எம்புட்டு நேரமாகுதோ தெரியல்ல எனா??... ரொம்ப நேரமா நின்னுக்கிட்டிருக்கம்... லைன் முன்னுக்கு போகல்ல போல எனா?"

"தெரியல்லயே....."

"நான் முன்னுக்குதான் நிண்டன்.. புள்ள அழுவுதுன்னு வெளியில பொயிட்டு வந்தன். திருப்பி பொயிட்டு லைணில நிக்க ஏலாதே..... வேற ஒருநாள் செஞ்சுக்க விடமாட்டாங்க என"

"இண்டைக்கு செய்தே ஆகணும்... நீங்க எந்த இடம்?"

"மாத்தளை... புள்ளய பாத்துக்க யாருமில்லங்க... அதால புள்ளயோட வந்தம்.. எனக்கு இஞ்ச பேசிற ஒண்ணுமெ விளங்குதில்ல. உங்களுக்கு சிங்களம் பேச முடியுமா?"

"இல்ல... தெரியாது"

தெரிந்தால் மட்டும் என்ன மாற்றம் நிகழ்ந்து விடப்போகிறது?? நான் சிங்களத்தை ஆசையாக கற்றுக்கொண்டேன். மொழி இணைக்கும் பாலமாக தொழிற்படும் என்றும் நம்பியிருந்தேன்.

என் செல்லிடத் தொலைபேசி அலறுகிறது. கணவரின் அழைப்பு.

"இன்னும் முடியல்லயா?"

"இல்ல... முடியல்ல.. லேட் ஆகும் போல..."

"பஸ் புக் பண்ண அப்ப என்ன செய்ற?... நேரத்தோட போனாத்தானே கொஞ்சம் படுத்து எழும்பி ஸ்கூல் போகலாம். திரும்ப ஆறரைக்கு போகோணுமே நீங்க"

"வேல முடிச்சிதானே வரலாம். முடிச்சிட்டு பாப்பம்.. அப்ப என்ன பஸ் இருக்கோ அதில போவம்... நான் வைக்கிறனப்பா"

புறப்படுவது கேள்விக்குறியாய் இருப்பதை விட பதிவு முற்றுப்பெறுமா என்பதே கேள்விக் குறிதான்.

நான் புகைப்படக் கருவியை தெளிவாக பார்க்குமிடத்துக்கு வந்து விட்டேன். இதோ! என் முன்னால் அது...

"மெசின் எக்க வட கறன்க... கொடக் ஸ்லோ வெலா மெசின் எக்க... வெண தவசட்ட அவித் கறகண்ண" (மெசின் வேல செய்யுதில்ல.. சரியான ஸ்லோவா இருக்கு... வேறொரு நாளைக்கு வந்து செஞ்சி கொள்ளுங்க)

"எக்ஸ்கியூஸ்மீ.... மம மடகளப்புவ இந்தலா ஆவே... ஆப்பகு வென தவசகட்ட என்ன பரிவெய்" (நான் மட்டக்களப்பில இருந்து வாறன்... வேறொரு நாள் வர முடியாது"

"ஒயா ஓரியண்டேசன் எக்கட்ட எனவானே... ஏ தவச கறகண்ண... யண்ண யண்ண......" (நீங்க ஓரியண்டேசனுக்கு வருவீங்க தானே... அப்ப செய்து கொள்ளுங்க.. போங்க போங்க.."

கூட்டம் கலைகிறது. நான் தலைவிதியை நொந்தவாறு நடக்கிறேன். கணவரிடம் சென்று என் பையைப் பெற்றுக்கொள்கிறேன். உமிழ் நீரும் உலர்ந்து போயிருந்தது. பசி, தாகம், வியர்வை, கோபம், விரக்தி, சோகம், இயலாமை போன்ற அனைத்து வார்த்தைகளும் எனக்காக படைக்கப்பட்டிருப்பதாய் உணர்கிறேன்.

என்னைக் கடந்து போன அவளைப் பார்க்கிறேன். அவள் கையில் ஒட்டி வைத்திருந்த ஸ்டிக்கர் பொட்டை நெற்றியில் ஒட்டிக் கொண்டாள்.

"நான் போட்டோ எடுத்திட்டன்... வாறனா.... பொயிட்டு" என்னைக் கடந்து போகையில் அவள் உதிர்த்திச் சென்ற வாசகம் கீழே கிடந்தது. நான் என் பொட்டை ஒரு விரலால் நெற்றியில் அழுத்திக்கொண்டேன்......

❍❍❍

# மழை பிடித்திருந்தது...

**சமரபாகு சீனா உதயகுமார்**
வல்வெட்டித்துறை.

மழை போ வெயில் வா என்று
வயல்வெட்டை மாலை பொழுதுகளிலும்
மழை வா வெயில் போ என்று
பள்ளிக்கூட காலை பொழுதுகளிலும்
பாடி ஆடி ஓடும்போது
மழை பிடித்திருந்தது..!

கடும் மழை பெய்த காலப்பொழுதொன்றில்
தொடுத்துவிட்ட பட்டத்தில்
வடலிநீள்மட்டை நார் எடுத்து
விதானையப்பு நீவித்தந்த விண் கட்டி
விண்ணிலே பறக்கவிட்டபோது
ஊரே கேட்டிருந்த விண்சத்த நாதம்
மனதை குதூகலம் செய்தபோது
விரைவாய் விட்டுப்போன
மழை பிடித்திருந்தது..!

ஊரெல்லாம் மழை பெய்த வெள்ளம்
மனசெல்லாம் உயரமாய் துள்ளும்
வெறுங்கால் முழங்கால்வரை நனைய
வெள்ளமழைந்த புழுகுகள்
மனமெங்கும் நிறையும்
காலில் நீர்ச்சிரங்கு தொற்றி
விடியவிடிய சுவர்புட்டி கால் உரசி
வகைவகையாய் சொறிஞ்சு களைக்க
அம்மாவும் முழிப்பிருப்பார்
ஏலாமல் போன ஒருகட்டத்தில் விறகுமூட்டி
அடுப்பினை அம்மா சூடாக்கிவிட
சொறிஞ்ச சிரங்குகால் மென் சூடுபட
ஆ... ஆ... என ஓர் ஆவலாய்
துன்பத்திலும் ஒரு சுகமாய்
மனம் நீண்டு களைக்கும்போது
மழை பிடித்திருந்தது..!

தேசம் உணர்விழந்து
உயிர்கள் தொலைந்து
சோகங்களை உண்டுவிட்டு
உருக்குலைந்து போனதை கண்டபோது
மழை பிடிக்கவில்லை என்று
ஒற்றைச்சொல்லில் சொல்லிவிட்டு செல்ல
எத்தனிக்கிறேன், ஆனாலும்
முடியவில்லை
முடிந்துபோன இந்தமழை தந்த கவலைகளை
மறந்துவிட..!



இரவின் பனியில் நனைந்த 'அக்பர்' பாலத்தின் மீது, நான்கு பெண்கள் நடுங்கிய படி பொறியியல்பீடம் நோக்கி வந்து கொண்டி ருந்தார்கள்.

மகாவலி நதிக்குக் குறுக்காக இரண்டு தூண் களின் உதவியுடன் கம்பீரமாக நிற்கும் அந்தப் பாலம் இடிந்து விழக்கூடும் என்ற நடுக்கம் அல்ல அது. எதிராக வந்து கொண்டிருக்கும் ஐந்து ராக்கிங் பூதங்களைக் கண்டுவிட்ட பயப்பீதி அது.

"பெயர்களை ஒவ்வொருத்தராகச் சொல்லுங் கள்!.."

"பரமேஸ்வரி, கௌசி, பல்லவி, தாரினி"

இந்த விளையாட்டு கடந்த இரண்டு வாரங் களாக நடைபெற்று வருகின்றது.

"பல்லவி மாத்திரம் இதிலை நிக்கலாம். மற்ற மூண்டு பேரும் எங்களோடை வாருங்கள்" சொல்லிவிட்டு அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்த பூதங்களில் நான்கு போயின.

கருணா மாத்திரம் பல்லவியுடன் நின்றான். சந்தித்த முதல்நாளே கருணாவின் கண் அவள் மீது பட்டுவிட்டது.

ஹந்தான மலைச்சாரலில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளிக்கற்றைகள் பல்லவியின் மீது படர, முகம் ஜோராக ஜொலித்தது. சினிமாப் படங் களில் வருவதுபோல தென்றல் அவள் கேசங் களைச் சிலிர்க்க வைத்தது. பல்லவி குள்ள உருவம் என்றாலும், அழகுராணிதான். இரட்டைப் பின்னலை முன்னாலே தூக்கி வாகாக வீசி யிருப்பாள். அதில் கருணாவின் மனம் ஏறி இருந்து ஊஞ்சல் ஆடும்.

"என்னைத் திருமணம் செய்வாயா?" நிஜத்தைப் பகிடியாகத் திரித்து கேள்வியாக்கித் தூது விட்டான் கருணா.

"நான் என்ரை அப்பா அம்மா சொல்லுற படிதான் கேட்பேன்" ஒவ்வொரு தடவையும் இப்படிச் சொல்லி சிரித்து மழுப்பி விடுவாள் அவள்.

"அப்ப உன்னுடைய பெற்றோர் என்னைத் திருமணம் செய்யச் சொன்னால் செய்வாயா?" இந்தத் தடவை ஒரு தீர்க்கமாகவே வந்திருந்தான் கருணா.

அவள் நிலத்தைக் கீறி பாலத்தை நோக வைத்தாள். இவன் மகாவலியைப் பார்த்து மகா வலியில் துடித்து நின்றான்.

"சரி... நீ யாரையாவது எப்பவாவது விரும்பு வதாக இருந்தால், என்னிடம்தான் முதலில் சொல்லவேண்டும்" அப்படியொரு திட்டத்தைப் போட்டுவிட்டு, அவளின் பெற்றோர்களைச் சந்திக்கலாம் என்பது கருணாவின் எண்ணம்.

"சரி என்றால் இந்த இடத்தைவிட்டுப் போகலாம். இல்லாட்டி பின்னேரம் உன்ரை கூட்டாளிகள் வரும்வரைக்கும் நானும் நீயும் இதிலைதான்."

பல்லவிக்கு தற்காலிகமாகத் தப்பித்துக் கொண்ட புளுகம்.

பாலத்தின் ஒரு கரையில் இருந்து மறுகரைக்குத் தாவி, அந்த வழியே ஓடினாள். அவளின் ஓட்டத்தினால் 'அக்பர்' பாலம் குலுங்கியது.

சிறுகதை

# கங்கைக் கரையோரத்து மயக்கங்கள்





- கே.எஸ்.சுதாகர்

இந்த 'அக்பர்' பாலம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மிகவும் பிரசித்திபெற்றது. அது பொறியியல் பீடத்தையும், ஏனைய அனைத்துப் பீடங்களையும் இணைக்கும் பாலம். 'அக்பர் ஹோலையும்' ஏனைய அனைத்து விடுதிகளையும் இணைக்கும் பாலம்.

அடுத்த தடவை சந்திக்கும்போது, "இந்தா பிடி என்ரை அட்றஸ்" என அவளின் கையிற்குள் தனது முகவரி அடங்கிய துண்டொன்றைத் திணித்து அவளின் கையைத் தீண்டினான் கருணா. எப்பொழுதாவது காதல் கடிதம் எழுதுவாள் என்பது அதன் உள்நோக்கம்.

முதல் வருடம் ஜேம்ஸ்பீரிஸ் ஹோலில் இருந்த காலங்களில் கருணாவும் அவன் கூட்டாளிகள் தவராஜா, நேசன், குலம் போன்றவர்களும் செய்யும் சேட்டைகள் பலவாறாக இருந்தன. ஜேம்ஸ்பீரிஸ் ஹோல் மலையில் இருந்தது. அதன் ஒரு அந்தத்தில், கலஹா வீதியை நோக்கி சீமெந்தினால் ஆன ஒரு இருக்கை இருந்தது. அதில் இருந்து கீழே பார்த்தால் கிஸ்ஸிங் பெண்டும் (kissing bend), எட்டத் தூரப் பார்த்தால் லவ்வேர்ஸ் பார்க்கும் (lovers park) தெரியும். மாலை வேளைகள் ப்ளஸ் விரிவுரைகள் இல்லாத சமயங்கள் இவை இரண்டும் போதை தரும். பைனாக்குலர் கொண்டு லவ்வேர்ஸ் பார்க்கை தரிசிக்கும் குறுகுறுப்பு சொல்லமுடியாதது.

லவ்வேர்ஸ் பார்க்கிற்கு சோடி சோடியாக காதலர்கள் வந்து, ஒரு சோடிக்கு மற்றச் சோடி தெரியா வண்ணம் மரவேர்களில் அமர்வார்கள். ஒருவர் கையை மற்றவர் கோர்த்து ஊஞ்சலாடுவார்கள். செக்கியூரிட்டி - கூடத் தேவைப்படும் காலங்களில் குடையும் கூட வரும். குடையின் கீழ் அவர்கள் காட்டில் மழைதான். இந்தக் காட்சிகளை பார்ப்பதற்கு, பைனாகுலர் சூடாகும்வரை அங்கு ஒரு போட்டி நடக்கும். லவ்வேர்ஸ் பார்க்கிற்குள் இனவிரோதம் மதவிரோதம் என்றெல்லாம் நடந்தமாதிரிப் பல்கலைக்கழகச் சரித்திரத்தில் இல்லை. அங்கே எல்லாம் சமத்துவம்தான். சமரசம் உலாவும் இடம்தான் அது.

ஆறேழு மாதங்கள் கழிந்திருக்கும். ஒருநாள் முதலாம் ஆண்டு மாணவன் ஒருவனுடன், பாலத்தருகே சடைத்து வியாபித்திருக்கும் மரத்தின் பின்னால் பல்லவி ஒதுங்குவதை தவராஜா கண்டுவிட்டான். எட்டிப் பார்த்த தவராஜாவின் தவம் கலைந்து போனது. ஏகப்பட்ட சோடிகள் பட்டாம்பூச்சிகளாக சிற கடித்துப் பறந்து கொண்டிருந்தனர்.

கருணா பல்லவியையும் அவள் குடும்பத்தையும் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்த போது, அவள் தீவிரமாக இன்னொருவனுடன் சுற்றித் திரிந்தாள்.

கருணாவின் காதில் நெருப்பை ஊதிப் பற்ற வைத்தான் தவராஜா.

"எட விசரா.... அவள் யாரை விரும்பினாலும் என்னட்டைப் பெர்மிஷன் கேட்பேன் என்று சத்தியம் செய்து தந்திருக்கின்றாள்" என்றான் உள்ளூரப் பதட்டத்துடன் கருணா.

அவள் தன்னுடன் படிக்கும் சகமாணவன் குகநேசனுடன் சுற்றுகின்றாள் என்று ஒரு வதந்தி உலாவியது. சத்தியமா அது வதந்திதான் என கருணா அடித்துச் சத்தியம் செய்தான்.

ஒருநாள் குகநேசனை இடைமறித்து,

"உன்னுடன் படிக்கும் பெண்களில் யார் அழகு?" என்று அவனிடம் ஒரு கணிப்பீடு செய்தான் கருணா.

"பல்லவிதான் நல்ல முகவெட்டு" என்றான் அப்பாவித்தனமாக குகநேசன்.

"முகவெட்டோ? அவளுக்குப் பின்னாலை அலைஞ்சியோ உன்ரை முகத்தை வெட்டுவன்" என்றான் கருணா.

அதன்பின்னர் கொஞ்சக் காலம் அவன் அவள் பின்னால் சுற்றவில்லை.

ஒருநாள் குகநேசன் ஒரு பெண்ணைத் தள்ளிக் கொண்டு லவ்வேர்ஸ் பார்க்கிற்குள் பரபரவென மின்னி மறையும் வேகத்தில் நுழைந்ததை தவராஜா கண்டுவிட்டான். அன்று கருணாவிற்கு நல்ல காலம். கூட வரவில்லை. மறைந்து மறைந்து குலமும் தவராஜாவும் வேறும் சிலரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

"குகநேசன் போனாப் போகட்டும். பெம்பிளப் பிள்ள யாரெண்டு பார்க்க வேணுமல்லே!"

அவர்களுக்குத் தண்ணி காட்டியபடி சென்ற இவர்களில் குலம் ஒரு மரத்துடன் மோதி விட்டான். குலம் போட்ட சத்தத்தில், மரத்தின் பின்னால் இருந்த ஒரு சிங்களச் சோடி மரணத்தின் வாசலுக்குச் சென்றுவிட்டது. அவன் கத்தத் தொடங்கினான். காதலி அருகில் இருந்தால் ஒரு ஆணுக்கு வரும் ஆக்ரோஷ உணர்வை அவர்கள் தரிசித்தார்கள்.



**இதை எல்லாம் அறிந்தால், கருணா இப்ப தூக்கு மாட்டிச் சாகப் போறானே எனப் பயந்தார்கள். ஒரு திட்டம் தீட்டினார்கள்.**

''இஞ்சை சோடியில்லாமல் தனியாகவோ கூட்டமாகவோ வரப்படாது'' கல்லுகளைத் தூக்கி இவர்கள்மேல் வீசத் தொடங்கினான் அவன்.

அந்தச் சத்தம் கேட்டு பல்லவி எட்டிப் பார்த்தாள். இவர்கள் பல்லவியைக் கண்ட அதிர்ச்சியில், கழிவுச் சாக்கடைக்குள்ளால் ஓடி சரிவு மீது ஏறித் தப்பித்தார்கள்.

அன்று இரவு அவர்கள் அவசர அவசரமாக ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். மந்திராலோசனை செய்தார்கள். தவராஜாதான் கூட்டத்திற்கும் ராஜா. இதை எல்லாம் அறிந்தால் கருணா இப்ப தூக்கு மாட்டிச் சாகப் போறானே எனப் பயந்தார்கள். ஒரு திட்டம் தீட்டினார்கள். யாரின் கையெழுத்து ஒரு பெண்ணின் மணிமணியான கை எழுத்தைப் போல வரும் எனச் சோதனை செய்தார்கள்.

இரண்டுநாட்கள் கழித்து விசிலடியுடன் விரிவுரைக்கு வந்த கருணாவை காலை பதினொரு மணியின் பின்னர் ஒருவரும் பார்க்கவில்லை. மாலை விரிவுரைகள் முடித்து வந்த, அவனின் றூம்மேற் துஸ்யந்தன் கதவைத் திறந்தபோது அறை இருட்டாக இருந்தது. கட்டிலில் தலை வரைக்குப் போர்த்தபடி பேய்க் கோலத்தில் கருணா படுத்துக் கிடந்தான்.

''என்ன மச்சான் சுகமில்லையோ?'' என நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான் துஸ்யந்தன்.

''அது உள் காய்ச்சல்'' என்றான் கருணா.

அவனால் அந்தக் கொடுந்துயரத்தைத் தாங்க முடியவில்லை. கடைசியில் அந்தக் கடிதத்தை துஸ்யந்தனிடம் கொடுத்துவிட்டு ஓவென்று அழுதான்.

அன்புடன் கருணா அண்ணனுக்கு,

வணக்கம்.

உங்களுக்கு என்னுடன் படிக்கும் குகநேசன் என்பவரைத் தெரியும் என நினைக்கின்றேன். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மனதார விரும்புகின்றோம். நீங்கள் முன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தத் தகவலை உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

இனிமேல் என்னைப் பார்ப்பதற்கு விடுதிக்கு வரவேண்டாம். வழியில் தனியே கூப்பிட்டுக் கதைக்காதீர்கள். உங்கள் தங்கையாக ஏற்றுக் கொண்டு எங்கள் இருவரையும் வாழ்த்துங்கள்.

நன்றி அண்ணா.

அன்புள்ள

பல்லவி குகநேசன்.

''நாசங்கட்டு கலியாணம் முடிய முதலே அவனை கணவனாக்கிப் போட்டாள்'' என்று சத்தமிட்டபடியே கருணாவிற்கு தேறுதல் சொல்லி விட்டு கன்ரீனுக்கு சாப்பிடப் போனான் துஸ்யந்தன்.

''உனக்கு ஏதாவது வேணுமா மச்சான்?''

''ஏதாவது பார்த்து ஒரு சாப்பாட்டுப் பார்சல் வாங்கி வா''

துஸ்யந்தன் கன்ரீனில் இருந்து வரும் போது பார்சலுடன் மட்டும் வரவில்லை, ஒரு பட்டாளத்துடன் வந்தான்.

எல்லாரும் செத்தவீடு கொண்டாடினார்கள். கடிதத்தை அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்தார்கள்.

''மச்சான் விடு. விட்டுத் தள்ளு. என்ன இருந்தாலும் உனக்கு மதிப்பு மரியாதை தந்திருக்கிறாள் பல்லவி. நீ கேட்டபடி கடிதம் போட்டிருக்கின்றாள். அதுவே உனக்குப் போதும்'' என்றான் குலம். அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போது தவராஜா குலத்தின் முதுகில் கிள்ளினான்.

''என்ன மச்சான் பல்லவியின்ரை கையெழுத்தும் உன்ரை கையெழுத்தும் ஒண்டாப் பொருந்துது போல கிடக்கு'' குலத்தின் காதிற்குள் கிசிகிசுத்தான் துஸ்யந்தன்.

குலம் தன் வாயில் சுட்டுவிரலை வைத்து 'உஸ்' என்றான்.

○○○



# உலக மக்களை ஆட்டிப் படைக்கும் அனர்த்தங்கள்



**கலைமாமணி**
**கா. தவபாலன்**
**(தம்பசிட்டி)**



**ம**னித வாழ்க்கையை மோசமாகப் பாதிக்கும் பல்வேறு அனர்த்தங்களில் முக்கியமான இரண்டு அனர்த்தங்களையிட்டு சுருக்கமாக கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முதலாவது இயற்கையான அனர்த்தங்கள், மற்றது செயற்கையான அனர்த்தங்கள். முதலாவது இயற்கையாக நடைபெறுவது, மற்றது மனிதனால் வேண்டுமென்றே உருவாக்கப்படுவது. புயல், வெள்ளம், மண்சரிவு, சுனாமி, கடலரிப்பு, தொற்றுநோய்கள் போன்றவை முக்கியமான இயற்கை அனர்த்தங்களாகக் கருதப்படுகின்றன. போர், அரசியல் கலவரங்கள், தனிப்பட்ட கலவரங்கள், பாசிசம், சுரண்டல், சதிப்புரட்சி, அடக்குமுறைகள் போன்றவை செயற்கையான அனர்த்தங்கள் ஆகும்.

முதலில் இயற்கை அனர்த்தங்கள் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம். புயற்காற்று அடித்தால் பயன்தரு மரங்களும், ஏனைய நிழல்தரும் மரங்களும் முறிந்து, வீடுகள் மீது வீழ்ந்து பாரிய பொருளாதார இழப்புகளையும் உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தும். புயலுடன் பெரும் மழையும் பெய்தால் வெள்ளம் பெருக்கெடுத்தோடி ஊர்களையும், வீதிகளையும், வீடுகளையும் அழிக்கும். இதனால் போக்குவரத்து தடைப்படும். பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டு பஞ்சநிலை உருவாகும். மக்கள் பட்டினியால் இறப்பர். விவசாயம் முற்றாக அழிவடையும். பொருளாதாரம் வீழ்ச்சியடையும். கடந்த நவம்பர் மாதம் இந்நாட்டில் வீசிய புயலையும், பெய்த கடும் மழையையும், அதனால் ஏற்பட்ட சேதங்களையும் நேரில் கண்டோமல்லவா? 2004 டிசம்பர் மாதத்தில் இலங்கையிலும் சுமாத்ரா தீவுகள் உள்ளிட்ட ஏனைய நாடுகளிலும் ஏற்பட்ட **சுனாமி** காரணமாக சமுத்திரம் பொங்கி எழுந்து நகரங்களுக்குட் புகுந்து நாச வேலைகளில் ஈடுபட்டது. கிராமங்களும், பட்டணங்களும் தரை மட்டமாயின. தெருக்களெல்லாம் உருத்தெரியாமல் அழிந்து போயின. ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் நீத்தனர். சாதாரண காலங்களிலும் கடல் அலைகள் பலமாக அடித்து கடலரிப்புகளை ஏற்படுத்துவதும் உண்டு. கடலரிப்பால் ஏற்படும் சேதம் சிறிதாயினும் இதனையும் ஒரு இயற்கை இடராகக் கருதுவதில் தவறேதும் இல்லை.



இலங்கையின் மலைகளில் தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்கள் வளர்க்கப்படுவதுடன் அத்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மலைகளின் மீது அமைக்கப்படும் **லயன் காம்புரா** என அழைக்கப்படும் வசிப்பிடங்களில் வாழ்ந்து வருவதைக் காணமுடியும். மண் சரிவு ஏற்படும் காலங்களில் இத்தகைய வீடுகள் அடியோடு சரிந்து மலையடியில் வீழ்ந்து மாயமாகிவிடுவதால் உயிர்ப்பலிகளும் பொருளாதார இழப்புகளும் ஏற்படுகின்றன.

இனி மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் செயற்கை அனர்த்தங்கள் எவை எனவும் பார்த்து விடுவோம். நாடுகளிடையே நடைபெறும் ஆக்கிரமிப்புப் போர்கள்தான் முக்கியமான செயற்கை அனர்த்தம் ஆகும். இத்தகைய யுத்தங்களில் துப்பாக்கி, கைக் குண்டுகள், விமானக் குண்டுகள், எறிகணைகள், ஏவுகணைகள் மற்றும் பல்வேறு ஆயுதங்கள் ஈவிரக்கமின்றிப் பாவிக்கப்படுகின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பான் நாட்டின் மீது அமெரிக்காவால் போடப்பட்ட அணுக் குண்டுகளால் ஹிரோஷிமா, நாகசாகி போன்ற பாரிய நகரங்கள் எரிந்து சாம்பலாயின.எதிரி, நாட்டு மக்கள் மீது இரசாயனங்களையும், நச்சு வாயுக்களையும், நோய்க்கிருமிகளையும் வீசிவிடும் கேவலமான செயல்களை செய்யும் நாடுகளும் உலக அரங்கில் வெட்கமின்றி உலா வருகின்றன. இனக் கலவரங்களாலும், அரசியல் மற்றும் ஏனைய கலவரங்களாலும், சதிப்புரட்சிகளாலும் மக்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்படுகின்றனர்.

உலக மக்களின் அடிப்படை மனித உரிமைகள் பற்றி ஐ. நா சபையின் மனித உரிமைச் சாசனம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இதை அனுசரித்து நடந்தால், உள்நாட்டுப் போர்கள், அரசியல் கலவரங்கள், இனக் கலவரங்கள், சதிப்புரட்சிகள் போன்றவற்றை கணிசமான அளவிற்குத் தடுக்க முடியும். அணுக்குண்டு வீசுவதை முற்றாகத் தவிர்த்து அணுக்குண்டு உற்பத்தியையும் முற்றாகத் தடை செய்ய வேண்டும். நாடுகளின் எல்லைகளைத் தெளிவாக வரையறுப்பதன்மூலம் நாடுகளுக்கிடையிலான யுத்தங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஐ. நா சபைக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம் நாடுகளுக்கு கடிவாளம் போட வேண்டும். இவ்வாறு ஐ. நா. சபை ஊடாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உலக சமாதானத்தை உறுதிசெய்தால் பல்வேறு செயற்கை அனர்த்தங்களையும் தடுக்கலாம் என்பதில் சந்தேகமில்லை.

பூமியதிர்ச்சி, சுனாமி, எரிமலை வெடித்துக் குமுறுதல், மழைக்காலத்தில் இடி விழுதல், புயல் வீசுதல், கடும் மழை பெய்வதாலும், பனிமலைகள் உருகுவதாலும் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்படுதல் போன்றவற்றைத் தடுத்தல் மனிதனால் இயலாத காரியமாகும். எனவே மனிதன் முடிந்தவரை இயற்கையுடன் நெருங்கியிருந்து ஆன்மிகத்தில் ஈடுபடுவதும் அவசியமாகும்.

○○○

# அவர் அருளால்...




**வி.அபிவர்ணா**
முல்லைத்தீவு


புத்தரின் முகத்தில்
எத்தனை ஆனந்தம்

ஒவ்வொரு இடமாக
அமர்ந்தமர்ந்து
சத்தமேதுமில்லாமல்
அருள் பாலிக்கிறார்

அவர் அருளால்
இழந்திழந்து
கடுகளவேனும்
சொந்தமில்லா மண்ணில்
இரத்தம் சிந்த ஆசைப்படுகிறார்

இனி
இருந்தால் என்ன..?
மடிந்தால் என்ன..?

அதோ நாளை
நான்காம் சந்திப் பிள்ளையார் கோயிலடியில்
புத்தரின் வருகையால்
புதிதாக மின்குமிழ்கள் ஒளிர்கின்றன...

"மக்கள் தமது வரலாற்றை முதுகில் சுமந்தவண்ணமே முன்னோக்கிச் செல்கின்றனர்"

**– புரட்சிக்கவிஞர் அல்லாமா இக்பால்**



**யாழ் அஸீம்**

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்கும், கடந்த கால அனுபவத்துக்கும் இடையிலான இணைப்புப் பாலமாகவே வரலாறு காணப்படுகிறது. நிகழ்கால, எதிர்கால சமூக மேம்பாட்டை ஏற்படுத்துவதில் கடந்தகால வரலாறுகளும், படிப்பினைகளும் பெரும் செல்வாக்குள்ளவையாகும்.

இந்த உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, தென்கிழக்காசியாவின் முதல் வானொலி என்ற பெருமைக்குரிய இலங்கை வானொலி, தனது நூற்றாண்டைக் கொண்டாடும் இத்தருணத்தில், இலங்கை முஸ்லிம் சேவையின் வரலாற்றுடன் தொடர்புடைய இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பாரம்பரியம்' எனும் வரலாற்று நூலை எம்.எஸ்.எம் ஜின்னா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

கடந்த பல வருடங்களாக இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலிருந்து வானலைகளில் தவழ்ந்து வந்த அவரது "பாரம்பரியம்" என்னும் நேர்காணல் நிகழ்ச்சியை ஒரு வரலாற்று ஆவணமாகத் தொகுத்து எம் கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் எம்.எஸ்.எம் ஜின்னா.

இலங்கை வானொலி 1925ம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பமானதாகக் கருதப்பட்ட காலத்திலேயே முஸ்லிம் நிகழ்ச்சிகள் ஓரளவு ஒலிபரப்பாகி வந்துள்ளன. 1953ம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி **அல்லாமா எம்.எம். உவைஸ்** அவர்கள் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கான பகுதி நேரப் பொறுப்பாளராக நியமனம் பெற்றார். 1956ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கான முதலாவது உத்தியோகத்தராக **ஏ.எம். காமில் மரைக்கார்** நியமிக்கப் பட்டார்.

இலங்கை ஒலிபரப்பு வரலாற்றில் ஒரு விதையாக வீழ்ந்த முஸ்லிம் நிகழ்ச்சியானது, பெரும் விருட்சமாக வளர்ச்சியடைந்த முஸ்லிம் சேவைக்குப் பங்களிப்புச் செய்த பகுதி நேரப் பொறுப்பாளர் அல்லாமா எம்.எம், உவைஸ், முதல் அதிகாரி ஏ.எம். காமில் மரைக்கார், முன்னாள் பணிப்பாளர்களான எம்.எச். குத்தூஸ், வீ.ஏ. கபூர், இஸட்.எல்.எம். முஹம்மத், நூராணியா ஹஸன், எம். அஹமத் முனவ்வர், ஹாபிஸ் எஸ். எம். ஹனிபா தற்போதைய பணிப்பாளர் எம்.ஜே.எம் ரினோஸியா மற்றும் ஏனைய அமைப்பாளர்கள், கட்டுப்பாட்டாளர்கள், தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள் சன்மார்க்க அறிஞர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், கவிஞர்கள், பாடகர்கள் எனப் பல்வேறு தரப்பினரையும் "பாரம்பரியம்" நிகழ்ச்சித்தொடரில் அவர் நேர்காணல் செய்த ஒலிபரப்புக்களை அச்சு வடிவில் பதிவுசெய்து "இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பாரம்பரியம்" என்றும் இந்நூலைப் பெரும் பொக்கிஷமாக எமது கரங்களில் எம்.எஸ்.எம். ஜின்னா ஒப்படைத்திருக்கிறார்.



வழமையான நேர்காணல் நிழ்ச்சிகளைப் போலன்றி அரைமணிநேர இடைவேளையில், ஒரு முழுமையான வரலாற்றுத் தகவல்களைப் பெறக்கூடிய வகையில் ஆழமான, அர்த்த முள்ள, ஆய்வுரீதியான கேள்விகள் மூலம் நிகழ்ச்சியை நெறிப்படுத்தி பெறப்பட்ட பெறுமதி மிக்க தகவல்களை கல்வெட்டுக்கு நிகரான ஓர் ஆவணமாகப் பதிவுசெய்துள்ளார்.

ஜின்னா அவர்களது இந்நூல் பற்றி ஜின்னாவின் நண்பரும் உலக அறிவிப்பாளருமான **பீ.எச். அப்துல் ஹமீத்** அவர்கள்

"பாரம்பரியம் எனும் வானொலி நிகழ்ச்சி யூடாக பெறுவதற்கரிய தகவல்களையெல்லாம் திரட்டி அடுத்த தலைமுறைக்கு அறிமுகப் படுத்தும் அருந்தொண்டினை கடந்த ஏழு ஆண்டு களுக்கும் மேலாக வானொலியில் வழங்கிவரும் ஜின்னா அவர்கள், 150க்கும் மேற்பட்ட அதிதிகளை, நேர்காணல் செய்துள்ளதுடன், 1000க்கும் மேற்பட்ட கலைஞர்களை, எழுத்தாளர்களை நினைவுபடுத்தி அவரவர் பற்றிய சின்னச் சின்ன குறிப்புக்களையும் "பாரம்பரியம்" நிகழ்ச்சி யில் பதிவுசெய்துள்ளார். மேலும் ஒரு தொழில் முனைவராக வளர்ந்த பின்னரும்கூட வாழ்வின் பெறுமதியான தருணங்களில் ஒரு பகுதியை சமூகத்துக்காக அர்ப்பணித்து அவர் ஆற்றி யுள்ள இப்பணியானது இனிவரும் தலைமுறை களும் நன்றியுடன் பாராட்ட வேண்டிய அருந் தொண்டாகும்" என அவரது வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி செவ்வாய் இரவு 8.15 மணிக்கு முஸ்லிம் சேவையில், "பாரம்பரியம்" நிகழ்ச்சி முதன் முறையாக ஒலிபரப்பானது. இதில் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான அண்மையில் மறைந்த காதிபுல் ஹக் சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் மர்ஹூம் **எஸ். ஐ.நாகூர்கனி** கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவரும், பேராசிரியருமான **எம்.எஸ், எம், அனஸ்** அவர்கள் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பாரம்பரியம் என்னும் இந்நூலின் முக்கியத்துவம் பற்றியும் அதனைத் தொகுத்து வழங்கிய ஜின்னா பற்றியும் கூறுகையில்,

"காற்றலைகள் காவிச் செல்லும் செய்திகளும், கதைகளும், பாடங்களும் காற்றுக்குச் சொந்தமாகி விடுகின்றன. இதுதான் வானொலியின் நிலை. பாரம்பரியம் எனும் நூல் இவற்றை மீட்டித் தருகிறது".

நிகழ்ச்சி பற்றியும், நிகழ்ச்சிகளை வழங்கிய வர்களின் அனுபவங்களின் கலவையாகவும் 'பாரம்பரியம்' நூல் சிறந்துவிளங்குகின்றது.

ஜின்னா "பாரம்பரியம்" நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய விதத்தினாலும், அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளாலும் 'பாரம் பரியம்' அதிக நேயர்களின் கவனத்தைப் பெற்ற நிகழ்ச்சியாகியது. 'பாரம்பரியம்' என்ற அர்த்தத்தை மையப்படுத்தியதாக நிகழ்ச்சியை அவர் எடுத்துச் சென்றதில் அவர் தொகுப்பா ளராக மட்டுமன்றி, ஓர் ஆய்வு மாணவனைப் போல் செயற்பட்டுள்ளார்.

மேலும் நிகழ்ச்சியின் தரம், நம்பகத்தன்மை, ஜனரஞ்சகம் ஆகிய மூன்று துறைகளிலும் ஜின்னா கவனம் செலுத்தி இருந்தார். ஒவ்வொரு துறையிலும் பேசவல்ல, கருத்து வெளியிடத் தகுதியுள்ளவர்களைத் தேடி அவர்களைக் கலையகத்துக்குக் கொண்டு வந்தார். இதன் காரணமாக நிகழ்ச்சியின் தரம் பேணப்பட்டது. மேலும் இத்தொகுப்பு நூல், அரை நூற் றாண்டுகளுக்கும் மேற்பட்ட முஸ்லிம் சேவை யின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் ஒரு கைநூலாக இருப்பதுபோல் 'பாரம்பரியம்' வானொலி ஒலிப்பதிவுகளும் பாதுகாக்கப்பட வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப் பாளர் எஸ்.எம் ஹனீபா அவர்களது பதவிக் காலத்தில், அவர் தயாரித்தளித்து வந்த 'பாரம் பரியம்' நிகழ்ச்சியானது 2018ஆம் ஆண்டு அவர் ஓய்வுபெற்ற பின்னர், தற்போதைய முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் சகோதரி **பாத்திமா ரினூஷியா** இந்நிகழ்ச்சியின் இரண்டாவது பொறுப்பாளராக பதவியேற்று, திறம்பட பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்.

முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர் **எஸ்.எம் ஹனீபா** அவர்கள் இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில்,

"முஸ்லிம் சேவைக்குப் பங்களிப்புச் செய்த முஸ்லிம் கலைஞர்களோடு பிறமதக் கலைஞர் களையும் ஒலிபரப்பாளர்களையும் வரவழைத்து நேர்காணல் செய்து அவர்களது தகவல்களையும் பதிவிட்டுக் கொண்டார் ஜின்னா."

பெருமனதோடும் பெருமையோடும் அன்ன வர்களும் வந்து கலந்து சென்றதுடன், நூல்

வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்டமை யானது இந்நூலின் வெற்றியின் விலாசங்களில் ஒன்றானது.

இந்தவகையில் சிரேஷ்ட ஒலிபரப்பாளர்களான வீ. என் மதியழகன், மயில்வாகனம் சர்வானந்தா, விசாலாட்சி ஹமீட், எஸ் விஸ்வநாதன், பிரபல சிங்களப் பின்னணிப் பாடகி சுஜாதா அத்தநாயக, இசைக் கலைஞர் வீ. முத்தழகு, இன்னுமொரு இசைக்கலைஞர் திருமதி கலாவதி சின்னசாமி, தமிழ் நாடகக் கலைஞர் எஸ் சந்திரசேகரன் போன்றவர்களும் பாரம்பரியத்தில் இடம்பிடித்தது மட்டுமன்றி, முஸ்லிம் சேவையையும் அதன் தரத்தையும் பாராட்டிவிட்டுச் சென்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுகதை, நாவல்கள் எழுதுவது போல் வரலாறு எழுதுவது என்பது சாதாரண விடய மல்ல. ஆதாரத்துடனும் உசாத்துணையுடனும் எழுதப்பட்ட வரலாறுகளே நம்பகத்தன்மை யுடையவையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 'இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பாரம்பரியம்' எனும் இந்நூலானது அச்சுவடி விலும் ஒலிவடிவிலும் மட்டுமன்றி வெளியீட்டு விழாவின் வீடியோப்பதிவுகளாகவும் ஆவணப் படுத்தப்பட்டுள்ளமையானது இந்நூலின் சிறப்பம்ச மாகும்.

எமது சமூகத்தில் பொதிந்துள்ள அறிவை யும், வரலாற்றையும் பதிவுசெய்து கொள்ளும் ஓர் ஆவணமாக்க முறையே வாய்மொழி வரலாறு ஆகும். இம் முறையைப் பயன்படுத்தி நேர்காணல் செய்தவர்களின் ஒலிபரப்புக்களை அவர்களின் வாக்குமூலமாகப் பதிவு செய்தமையானது நம்பகத் தன்மையுடைய ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை

எந்தவொரு துறையிலும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடனும், தியாகத் துடனும் செய்யப்படும் முயற்சிகளே ஒருவரை சாதனையாளராக மாற்றுகிறது. அந்த வகையில் இலங்கை வானொலியில் நாடகப்பாணியில் கதை சொல்வதில் நேயர்களின் வரவேற்பைப் பெற்று முத்திரை பதித்த ஒரு கதை சொல்லியாக வானொலிப் பயணத்தை ஆரம்பித்த எம்.எஸ். எம். ஜின்னா அவர்கள் "இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பாரம்பரியம்" என்னும் இந்நூலின் மூலம் சிறந்த ஆய்வாளராகவும், எழுத்தாளராகவும், நூலாசிரியராகவும் முத்திரை பதித்துள்ளார்.

○○○

# நேசி

கப்பலும் கடலில் தான்,
மீனும் கடலில் தான்.
கண்ணோட்டமே தீர்மானிக்கிறது
பயணத்தையும் வாழ்வையும்...

ஒவ்வொன்றும் மாறும் போது
ஒவ்வொன்றும் மாறுகிறது,
இலக்கு கூட...

மாறு ... உனக்காக,
மத்தவனுக்காக அல்ல.

மாற்றத்தை நேசி,
மற்றவன் மாற வேண்டும் என
திணிக்காதே.

மற்றவர் நேசிக்க வேண்டும் என
எண்ணும் முன்,
உன்னை நீயே நேசி.

நீயே உனக்கு பலம்,
உன் பலவீனமும்.

நீ உன்னை அறி ...
உலகம் உன்னை அறியும்...

**– அம்பிகை சண்முகலிங்கன்**

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



**பேராசிரியர் துரை.மனோகரன்**

### அரசியல் நடிகர்கள்

**இ**லங்கையில் ஏற்பட்ட பெரும் புயலின் பின், அமைதி நிலை ஒன்று ஏற்படத் தொடங்கியுள்ளது. அரசு தன்னாலான நலத் திட்டங்களைச் செயல்படுத்திவருகின்றது. சுவாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காத சம்பவங்களும் ஆங்காங்கே நிலவுகின்றன. புயல் வந்ததுதான் தாமதம், எதிர்க்கட்சி முக்கியஸ்தரும், ராஜ வம்சத்து இளவரசரும் மிகச் சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கிவிட்டனர். பாதிக்கப்பட்ட மக்களைத் தேடித்தேடிப் போய், நலம் விசாரிக்கின்றனர். எல்லாம் சரியாக நடக்கிறதா, கிடைக்கிறதா என்று மக்களை விசாரணை வேறு செய்துவருகின்றனர். இத்தனைக்கும், இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒரு சதம் கூடச் செலவழிக்கவில்லை. தங்கள் சொத்துப் பத்துக்களைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டு, சுகம் விசாரித்து வருகின்றனர். நாட்டின் முன்னாள் முக்கியஸ்தராக இருந்த ஒரு பெண்மணி மாத்திரம் குறிப்பிட்ட ஒருதொகைப் பணத்தைப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கியுள்ளார். நாட்டின் மற்றைய முன்னாள் முக்கியஸ்தர்கள் யாரும் மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் உதவுவதுபற்றிச் சிந்தித்தே பார்க்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எவ்வாறு ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்ற "உயரிய" சிந்தனையில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக்காலத்தில் தமிழ் அரசியலில் ஒரு "முக்கிய" நிகழ்வு இடம்பெற்றுள்ளது. "சைக்கிள் காரர்கள்" வேலை மினைக்கெட்டு ஒரு பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகத் தமிழ்நாட்டின் முக்கியஸ்தரை இவர்கள் சந்தித்திருக்கிறார்கள். தற்போதைய தமிழ்நாட்டின் முக்கியஸ்தரின் தந்தையார் முன்னர் ஆட்சியில் இருந்தபோது, பந்தல் அமைத்து உண்ணாவிரத நாடகம் ஒன்றை நடத்தினார். தற்போதைய தமிழ்நாட்டின் முக்கியஸ்தரைப் பொறுத்தவரை, "சைக்கிள்கார"ருடனான சந்திப்பு என்பது, ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி. அவ்வளவுதான்.

இலங்கைக் கடல்தொழிலாளர்களின் பிரச்சினை பற்றிப் பேசும்போதுகூடப் பாணில் பட்டரைத் தடவுவது போலத்தான் "சைக்கிள் காரர்கள்" பேசியிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் மற்றைய கட்சிக்காரர்களையும் சந்தித்து இவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்களும் ஒரு காதால் கேட்டு, மறுகாதால் மறந்துவிடுவார்கள். இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதென்றால், அயல்நாட்டின் மத்திய அரசுடன் பேசவேண்டும். அரசியல் செய்வதற்கு ஒரு பதிவு வேண்டுமே!

### நினைவழியாத ஒரு நிகழ்ச்சி

அண்மையில் கொழும்பில் எழுத்தாளரும், விமர்சகரும், பதிப்பாளருமாகிய புலோலியூர் ***ஆ. இரத்தினவேலோனின்*** நினைவழியா நூல்கள் என்னும் நூலின் வெளியீட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. ***பேராசிரியர் துரை. மனோகரன்*** தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் ***திருமதி அபிராமி கயிலாசபிள்ளை*** கலந்துகொண்டார். வாழ்த்துரைகளைக் ***கலாநிதி த. முத்துக்குமாரசாமி***யும், பத்திரிகையாளர் ***வீரகத்தி தனபாலசிங்கமும்*** வழங்கினர். நூல் வெளியீட்டுரையைக் கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் ***திருமதி சுகந்தி இராஜ குலேந்திரா*** நிகழ்த்தினார். நூல் நயவுரைகளை எழுத்தாளர் ***பிரமிளா பிரதீபனும், காரைக்கவி கந்தையா பத்மானந்தனும்*** வழங்கினர். எல்லோருடைய கருத்துகளும் நூல் வெளியீட்டு விழாவைச் சிறப்பித்ததோடு, நூலாசிரியரின் சிறப்புகளையும் வெளிப்படுத்தின. நூலாசிரியர்

ஏற்புரையும், நன்றியுரையும் வழங்கினார். ***ஜீவநதி*** வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. அத்தோடு, ஜீவநதி புலோலியூர் இரத்தின வேலோனின் சிறப்பிதழையும் வெளியிட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இந்த நிகழ்வில் கடவுள் வாழ்த்துப் பாடிய இரு மாணவிகளும் பாராட்டுக்கு உரியவர்கள். வரவேற்பு நடனத்தையும், இன்னொரு நடனத்தையும் வழங்கிய ***கலாசூரி திவ்யா சுஜேனின் அபிநயக்ஷேத்ரா*** நடனப்பள்ளி மாணவிகள் அருமையான நடனங்களை வழங்கினர். ஆசிரியையையும், மாணவிகளையும் நிச்சயம் பாராட்டியே ஆகவேண்டும். நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கிய ***வித்தியா***வும் பாராட்டுக்கு உரியவர்.

புலோலியூர் இரத்தினவேலோன் முக்கியமாக இரண்டு தளங்களில் செயல்படுகிறார். ஆக்க இலக்கியத்துறை, விமர்சனத்துறை ஆகிய இரண்டு துறைகளும் அவருக்கு இரு சிறகுகள் போன்றவை. அதனாலேயே இலக்கியத் துறையில் அவரால் உயரப் பறக்க முடிகிறது. நினைவழியா நூல்கள் என்ற இந்நூலோடு அவரது 16 நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இந்நூல் மூலம், வவுனியூர் இரா. உதயணன் முதல் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் வரையில் இருபது இலக்கிய ஆளுமைகளின் படைப்புகள் பற்றிய தமது பார்வைகளை அவர் வெளிக் கொணர்ந்துள்ளார். ஒவ்வொருவரது படைப்புகள் பற்றியும் அறிமுகக் குறிப்புகளாக அமையாமல், அவர்கள் பற்றியும், அவர்களது படைப்புகள் பற்றியும் ஆழமான பார்வையை மேற்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. அதுவே இரத்தினவேலோனின் சிறந்த பலம் எனலாம். சிறுகதைத்துறையிலும், விமர்சனத் துறையிலும் அபரிமிதமான பங்களிப்புகளைச் செய்துவரும் புலோலியூர் இரத்தினவேலோன், எதிர்காலத்தில் நாவல்துறையிலும் தமது பங்களிப்பை மேற்கொள்ளவேண்டும்.

### கண்ணைக் கவர்ந்த நாட்டிய நாடகம்

கண்டியில் அண்மையில் கண்ணைக் கவர்ந்த நாட்டிய நாடகம் ஒன்று நடைபெற்றது. கலாசமர்ப்பண நிருத்தியக்ஷேத்ராவின் நிருத்திய அர்ப்பணம் நிகழ்ச்சியில் பஞ்சமகாபூதங்கள் என்னும் நாட்டிய நாடகம் நடைபெற்றது. நடன ஆசிரியை ***பிரசாதினி நவரத்தினராஜா*** தயாரித்து வழங்கிய இந் நாட்டிய நாடக நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் ***பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயக்கோன்*** பிரதம விருந்தினராகவும், ***பேராசிரியர் துரை. மனோகரன்,*** சென்னையைச் சேர்ந்த இசைக்கலைமணி ***கலாநிதி ஒரோ ரொபின் ஸ்டாலின்*** ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

பஞ்சபூதங்களான நீர், ஆகாயம், நிலம், காற்று, நெருப்பு ஆகியவற்றின் இயல்புகளையும், அவற்றின் நன்மை தரும் செயல்பாடுகளையும், மனிதர்களால் அவை புறக்கணிக்கப்படும்போது, அவற்றால் ஏற்படும் தீமைகளையும் அறிவியல்பூர்வமாகவும், அழகியல் ரீதியாகவும் இந்நாட்டிய நாடகம் மிகச் சிறப்பாகப் புலப்படுத்தியது. இந்நாட்டிய நாடகத்தின் ஒவ்வொரு காட்சியின்போதும், சபையோர் பஞ்சபூதங்கள் தொடர்பான முப்பரிமாண அனுபவத்தைப் பெற்றுக்கொண்டனர். அவ்வக் காட்சிக்கூடேயே ரசிகர்களும் இணைந்து பயணிக்கக்கூடியதாக இருந்தமை, புதிய அனுபவத்தைத் தந்தது. இத்தகைய காட்சிஜாலங்களை இந் நாட்டிய நாடகத்தில் புகுத்தி, ரசிகர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை ஏற்படுத்தியவர், நடன ஆசிரியை பிரசாதினியின் கணவரான பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல்பீட முதுநிலை விரிவுரையாளர் ***கலாநிதி நவரத்தின ராஜா*** ஆவர்.

இந்நாட்டிய நாடகத்தின் சகல அம்சங்களிலும் ஒரு முழுமைத்தன்மையை அவதானிக்க முடிந்தது. இதில் பங்குபற்றிய அனைத்து நடனக் கலைஞர்களும் தமது முழுத்திறமையையும் வெளிக்கொணர்ந்தனர். பாடல்களும், பின்னணி இசையும், காட்சி அமைப்புகளும் பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்தன. பஞ்சபூதங்களில் ஒவ்வொரு பூதம் தொடர்பான அறிமுகத்தின்போதும், கலாநிதி நவரத்தினராஜா – பிரசாதினி தம்பதியின் அன்புப் புதல்வர் ***செல்வன் சாய் அக்ஷத்*** அருமையாகப் பாடி, ரசிகர்களைக் கவர்ந்தார். இந்நாட்டிய நாடகத்தில் இறுதிப் பூதமாக அமைந்த நெருப்பு பிரகாசித்து எரிவதைப் போன்று, அவரது இசைத்திறமையும் இறுதிக்கட்டத்தில் முழுமையாகப் பொங்கிப் பிரகாசித்தது. இந்நாட்டிய நாடகத்தைப் பல இடங்களிலும் மேடையேற்ற முயற்சிப்பது நல்லது.

❍❍❍

# நிழல் போல் கடந்த நாட்கள்

மங்கிய கண்கள் கலங்க
வயிறு பசியில் துடிக்க
அழுது அழுது அல்லலுற்ற
நாட்கள் இன்னும் நினைவுகளில்

ஒரு நாள் இரு நாட்கள் அல்ல
நிழல் போல் கடந்த நாட்கள்
இன்னும் மனதை வருத்தும்
வாழ்க்கை முழுவதும் நீங்கா நாட்கள்

இன்னமும் நினைவில் நிற்கும்
அந்த அழியாத நாட்களின் நினைவுகள்
இன்றைய என் உழைப்பில்
பசியை போக்கும் அனாதைகளுக்கு

அனுபவங்கள் தந்த பாடம்
துன்பத்தை அனுபவித்து அறிந்த காலம்
எனது ஆன்மாவின் மேன்மைக்கு
என்றும் உதவும் வரங்கள் அவை

**– குப்பிழான் குமரன்**

# மக்களும்... வீட்டுசாவிகளும்...

பலபல யுத்தங்களும்
நிலநடுக்கமும் ஆழிப்பேரலையும்
புயலும் வெள்ளநிலையும்
வந்து எல்லாவற்றையும்
அழித்து துயரத்தில்
ஆழ்த்தி சென்ற நிலையிலே!
வீடுகளைத்தேடி மக்கள்
சாவியுடன் அலைகின்றனரே!
குடும்பங்கள் அழிந்த நிலையில்
வீடுகள் மட்டும் மீதமே...

**கலாதினி பா.முருகானந்தன்**

# பாலர் அகம்

என் அதிகாலை
மின்னழுத்தி முத்தமிட்ட
சேலை மடிப்பில்
வரி அழிந்த கவிதையொன்றைக்
கரம் பிடிக்கும்

மார்கழி மேகம்
தன் கனத்த சுமைகளை அள்ளி
என்மேல் சோவெனக் கொட்டி
நிம்மதி காணும்

காலை வணக்கத்தினுள்
அமிழ்ந்து நீழும் நாளொன்றைக் கடக்க
உடல் மனதோடு போராடும்

இனியொன்றும்
விளக்கம் வேண்டாம்

நாளைக்கு நீலப்புடவை
பள்ளிக் குழந்தைகள் மனதில்
மயிலெனத் தோகை விரித்திருப்பேன்
மதியம் வரை..

**எஸ். சுடர்நிலா**
பேராதனை

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்



கலாபூஷணம் கே. பொன்னுத்துரை





## திருமதி ரஞ்சனி சுப்ரமணியம் அவர்களின் நெய்தல்நடை சிறுகதைத் தொகுப்பு

திருமதி ரஞ்சனி சுப்ரமணியம் அவர்களின் நெய்தல்நடை சிறுகதைத் தொகுப்பு 21-12-2025 அன்று பேராசிரியர் எழுத்தாளர் ஆசி. கந்தராஜா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நூல் வெளியீட்டினை பேராசிரியர் வ .மகேஸ்வரன் நிகழ்த்தினார். கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவி சுகந்தி இராஜகுலேந்திரா, பணிப்பாளர் சியாமளா சஞ்சீவன், காரைக்கவி கந்தையா பத்மானந்தன், எழுத்தாளர் பவானி சிவகுமாரன், மலர்மதி கங்காதரன், எழுத்தாளர் மருத்துவர் செல்லையா சுப்ரமணியம் (கணவர்) ஆகியோர் விழாவில் பங்குபெற பலரும் கலந்து சிறப்பித்தனர்.





## கொழும்புத்தமிழ்ச் சங்கத்தின் நூலகத்திற்கு தமிழவேள் க.இ.க. கந்தசாமி பெயர் சூட்டல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகத்திற்கு முன்னாள் சங்கத்தின் (1974-1997) பொதுச் செயலாளர் “சங்கச் சான்றோன்” பெரியார் தமிழவேள் க.இ.க. கந்தசாமி அவர்களின் பெயர் சூட்டலும், திருவுருவ திரைநீக்கமும் 06.12.2025 அன்று சட்டத்தரணி கனக.ஈஸ்வரன் அவர்களால் செய்யப்பட்டது.

சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, நூலகர் ஜெ.சித்தார்த்தினி, நூலகக்குழுச் செயலாளர் ச.இந்திரகுமார், தெ.மதுசூதனன், கலாநிதி சண். பத்மநேசன், ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், திருமதி வளர்மதி, இளைப்பாறிய அதிபர் த.ப.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அமரரது குடும்பம் சார்பில் பெறாமகன் செ.மனோகரன் நன்றியுரையை நிகழ்த்தினார்.

## கண்ணீர் அஞ்சலி

### ஈழத்து பிரபல ஓவியர், சிற்பி, ரமணி சிவசுப்பிரமணியம்



ஈழத்து பிரபல ஓவியர், சிற்பி, ரமணி சிவசுப்பிரமணியம் இயற்கை எய்தியமை கலையுலகை கவலையில் ஆழ்த்தியுள்ளது. ஈழத்து இலக்கிய உலகில் ரமணி அவர்களின் பல நூற்றுக்கணக்கான அட்டைப்படங்கள், தலைப்புகள், விளக்கப்படங்கள் என்பன நூல்களுக்கு உயிரூட்டத்தை வழங்கின. அவரது கைவண்ணத்தில் உருவான சிலைகள், ஈழ வரலாற்றையும் தேசிய உணர்வையும் பேசும் சாட்சிகள்.

ரமணி அவர்கள் முன்னாள் அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் இராமநாதன் நுண்கலைப்பீட வருகைதரு விரிவுரையாளராகவும் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. மீளாத்துயரில் ஞானமும் இணைகிறது.



### பல்துறை ஆளுமையாளர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

பல்துறை ஆளுமையாளர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு (1934-2025) அவர்கள் காலமானார். அம்மையார் உரை ஆசிரியர் மட்டுவில் வேற்பிள்ளை உபாத்தியாயர் அவர்களின் அருமைப் பேத்தியும், சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் உரிமைப் பேத்தியும், பண்டிதரும் எழுத்தாளருமான ம.வே. திருஞான சம்பந்தம்பிள்ளை அவர்களின் கனிஷ்ட புத்திரியும் ஆவார்.

வீணைக் கலைஞரான அம்மையார், சமயம் மற்றும் வாழ்வியல்சார் நூல்களை எழுதியுள்ளதோடு வானொலி சேவையில் பல நிகழ்ச்சிகளையும் வழங்கியுள்ளார். ஞானம் அன்னாரை 268ஆம் இதழில் அட்டைப்பட அதிதியாக கௌரவித்தது. அம்மையாரின் இழப்பின் துயரத்தில் ஞானமும் பங்குகொள்கிறது.

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/Magazine/38/2026

**காவோலை [சிறுகதைத் தொகுப்பு]**
**– காரைக்கவி (2025)**




யாழ்ப்பாணப் பாரம்பரியம், பண்பாடு, சமூகவியல், ஏனையோரால் சொல்லப்பெறாத விடயங்களைக் கருப்பொருள்களாகக்கொண்டு யாழ்ப்பாண பேச்சுவழக்கு மிளிரும்வண்ணம் ஆசிரியரால் எழுதப்பட்ட பத்து சிறுகதைகளை இத்தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. அத்துடன் அன்றாட வாழ்வின் நடைமுறைகளை சங்க காலத்து வாழ்வின் தொடர்ச்சியாக எடுத்துக்காட்ட பொருத்தமான இடங்களில், சங்க காலத்துச் செய்திகளைப் பதிவுசெய்திருப்பது சிறப்பம்சமாகும். நாம் மறந்துபோன மற்றும் அறியாத பல விடயங்களையும் பதிவு செய்திருப்பது மெய்ச்சுதலுக்குரியது; பாராட்டலுக்குரியது.




**தமிழ் வரலாறு**
**– ச. பூபாலபிள்ளை**
**(2025)**

அருளம்பலசுவாமிகள் 1920ஆம் வருடம் பதிப்பித்த நூலின் இரண்டாம் பதிப்பாக கலாநிதி தி. செல்வமனோகரன் அவர்கள் ஜீவநதி பதிப்பகத்தினூடாக இந்நூலை மீளப் பதிப்பித்துள்ளார். பாடையியல், இலக்கணவியல், இலக்கியவியல், ஒழிபியல் எனும் நான்கு பகுதிகளை இந்நூல் கொண்டுள்ளது. தமிழ் மொழியினது தோற்றம், தமிழின் விருத்திக்கு உதவிய நிலப்பரப்புகள், அரசர்கள் பற்றிய வரலாறு, மேனாட்டார் தமிழ் பற்றிக் கருதிய கருத்துகள் உட்பட பல விடயங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. காலத்துக்குத் தேவையான மீள்நினைவூட்டும் முயற்சியாக அமைகின்றது.




**பசுமை**
**எனும் பேரபாயம்**
**தெய்வேந்திரன்**
**ஞானசீர்த்தி மீநிலங்கோ**
**(2025)**

அதிகம் பேசப்படாத பூகோளப் பசுமைப் பொருளாதாரம் பற்றியும், இலங்கையின் சூழலியல் மற்றும் இலங்கையில் சிலாகிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய பரந்துபட்ட விமர்சனப் பார்வையோடும், கடுமையான விசாரணை அணுகுமுறையோடும் கனதியான பன்னிரு கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இந்தக்கட்டுரைகள், காலநிலை மாற்றம் அபிவிருத்தித் திட்டங்கள், சூழலியல் போன்றன மக்களை நேரடியாகப் பாதிக்கும் ஆழமான அரசியல் மற்றும் வாழ்வியல் தாக்கங்களைக் கொண்டுள்ளவை என்பதை வலியுறுத்துகின்றன. அதிகம் பேசாப் பொருள் பேசப்பட்டுள்ளது.

## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195